IATA
SKY WINGS LTD
TRAVEL & TOURS
"WHERE THE SUN NEVER SETS"
Cheapest Worldwide Fares with the Best Service
We are authorised main agents for Srilankan, Jet Airways, Qatar, Kuwait, Oman...
Reservation: Mob: 07850876921
02086729111
We accept all major credit cards
Colombo £170 + Taxes
Visa Service to Srilanka, Australia, India & USA
119, Tooting High street, London, SW17 0SY

BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER
FREE
PAPER - 11 ♦ ISSUE - 238 ♦ FRIDAY 20 MARCH 2015

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லயா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
- Personal injury (Neck,Back & Shoulder Pain)
- Replacement Vehicle (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE *
* Other Insurance charges may apply
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




## இனியொரு அவலம் வேண்டாம்!
## ஈழத்தமிழராய் என்றும் தோள் கொடுப்போம்!

TAMIL Bay
பெருமையுடன் வழங்கும் புதிய தமிழ் இணையதளம்
tamilbay.co.uk
- பிரித்தானியா செய்திகள்
- அரசியல்
- சினிமா
- விளையாட்டு
- மருத்துவம்
- ஆன்மிகம்
- ஜோதிடம்
- சிறுவர் பகுதி
- பெண்கள் பகுதி
மேலும் பல...
Visit in our website
வியாபார விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன
Tel: 0 2032 903 625 | Tel/Fax: 0 7092 988 434
info@tamilbay.co.uk

HYGIENE RESOURCES
Consultants
Are you a food handler?
- Fast food Handler
- Take away food handler
- Restaurant worker
- Manufacturing staff
- Packaging staff
So if you are ready to gain knowledge and build career in catering industry then call Hygiene Resource or email or visit website above.
Call Syed anytime on: 0795 8942 988
75 Springbank Road, Lewisham, London SE13 6SS
E Mail : syed@uabdl.com

WANT TO BE A DOCTOR?
Didn't get a place?
Don't worry you haven't missed out…
We will help you to find the right place
STUDENT LOANS ARRANGED
- Lowest Tuition Fees
- Guaranteed Entry
- No Entrance Exam
TEL: 0208 863 4684
www.studymedicineeu.com

உலகளாவிய வகையில் 14 நாடுகளில்
ஒரே பாடத்திட்டம் ! ஒரே தேர்வு !
ஒரே சான்றிதழ் ! வளர்தமிழ் பாடத்திட்ட
அனைத்துலகத் தமிழ்ப் பொதுத்தேர்வு 2015
TEDC SYLLABUS INTERNATIONAL TAMIL GENERAL EXAMINATION 2015
06-06-2015 சனிக்கிழமை காலை 10.00 மணி
வளர்தமிழ் 1 தொடக்கம் வளர்தமிழ் 12 வரை...
www.tedc.org.uk
020 8432 6009 - 077 7175 3525

குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
HSFC offers comprehensive services in the areas of assisted reproduction (including IVF, ICSI, egg donation and egg sharing), gynaecology, and male infertility.
We have a flexible schedule, including appointments in the evenings and weekends.
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
134, Harley Street, London, W1G 7JY
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

சென்னையிலிருந்து UK விசா
- தொழிலாளர் விசா
- தங்கியிருக்கும் விசா
- மாணவர் விசா
- சுற்றுலா விசா
இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
- இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
- எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk

- விசா முடிவடைந்து சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்கள் மற்றும் புதிதாக அகதி அந்தஸ்து கோருபவர்கள்.
- ஏற்கனவே அகதி அந்தஸ்து கோரி நிராகரிக்கப்பட்டவர்கள் தொடர்பில் ஆலோசனை மற்றும் விண்ணப்பம் செய்து தரப்படும்
- கைது செய்தல் தடுத்து வைத்தல் மற்றும் உயர் நீதிமன்ற விண்ணப்பம்
- பல வருடங்களாக உங்கள் விண்ணப்பம் பல்வேறு காரணங்களால் சரியான முறையில் அனுமதிக்கப்படவில்லை என்பதை நாம் நன்கு அறிவோம். ஆகவே நன்கு அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் குழு தமிழ் மக்களுக்கான இலவச ஆலோசனை வழங்கி வருகிறனர்.
M&S Solicitors
1A Beaconsfield Road Southall Middlesex UB1 1BA
(Southall Stationக்கு அருகாமையில்)
Mob: 078 7076 3570, 075 0874 4038
Tel: 020 8571 7760
Email: fahmy@mandssolicitors.com

ஈசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

# AIKON ACCOUNTANTS LTD

**Our Services**

- *Preparation of accounts for companies and individuals/ for companies house*
- *Preparation of annual accounts and working with auditors*
- *Reporting to lenders and other external parties*
- *Preparation of management accounts*
- *VAT Computation and filing*
- *Self-assessment returns*
- *Corporation Tax computation and filing*
- *HMRC correspondence and representation*
- *Company Formation and VAT registration*
- *PAYE – Preparation of Payroll and filing returns*
- *Scenario Testing & feeding through to forecasts*
- *Budgeting & Variance Analysis*
- *Financial Planning and Analysis*
- *Evaluation of the internal controls and propose suitable solutions in order to eliminate weaknesses.*
- *Cash flow forecasts & Projected Accounts*
- *Restructuring*
- *Mergers and Acquisitions*
- *Due diligence*
- *Investment and Project Appraisal*
- *Assisting Foreign companies establishing in the UK*
- *Assisting UK companies expanding and establishing overseas*
- *Assisting with securing finance for business growth*

**FAST GROWING ACCOUNTANTS IN LONDON FOR ALL YOUR NEEDS!**

For a no obligation, FREE consultation Call us on 02031891884

accounts@a-accountants.com - www.a-accountants.com

# David Benson Solicitors

28, Merton High Street, London, SW19 1DN

Phone 02085408888 Fax : 08701208384

ASYLUM, IMMIGRATION, EEA APPLICATIONS POINT BASED APPLICATIONS, APPEALS TO TRIBUNALS JUDICIAL REVIEWS

FAMILY LAW, DIVORCE, ANCILLARY RELIEF CONTACT PROCEEDINGS, CARE PROCEEDING

LANDLORD AND TENANT MATTERS, RESIDENTIAL EVICTIONS, COMMERCIAL EVICTIONS

CIVIL PROCEEDINGS, CRIMINAL PROCEEDINGS

AFFIDAVITS, SPONSORSHIP DECLARATIONS LEGALISATION OF DOCUMENTS

newlife

Home of Fertility, Immunology & Women's Health

# Newlife Fertility Clinic

20 வருடங்களுக்கு மேல் அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொண்டு குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்கிடுங்கள்



Access Fertility

நிறுவனத்துடன் இணைந்து வழங்கும் விசேட விலைகழிவுகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

We provide the best affordable infertility treatments (IVF, IUI, ICSI)

www.newlifeclinic.org.uk

T : 01372 738 932

The Pines, 2 The Parade, Epsom KT18 5DH



REFRIGERATION - AIR CONDITION - SHOP FITTING

# UK COOL

AND SHOPFITTING Ltd.



168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK

MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk



## Summer Offer





**New and Used Fridge for Sale**

**New Fridge 3.75 Meter**

**£3900 + VAT**

**UK COOL & SHOPFITTING**

**REFRIGERATION**

Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

**SHOP FITTING**

Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

**MOVING & DEVILERY**

URGENT REPAIR? CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY

7 Days 24 HRS Services & Repair

# SURREY JEWELLERS & PAWNBROKERS

94 TOLWORTH BROADWAY, TOLWORTH, KT6 7HT

T: 020 8399 9176 M: 07947 579 682

**2.5% நகை அடைவு சேவை**

உங்கள் அவசர தேவைக்கு பணம் தேவையாயின் எம்மிடம் எந்த நேரத்திலும் போதியளவு பணம் இருப்பில் உள்ளது.

எம்மிடம் இரண்டு விதமான contracts உள்ளன.

- Buy Back Contracts (01 Month)
- Pawn Contract (06 Month)

நமது வட்டி வீதம் 2.5%

உங்கள் வட்டிப்பணத்தை வங்கியில் செலுத்த முடியும்.

**We do Cheque Cashing, Money Transfer to Sri Lanka & Foreign Exchange**

2.5%

SURREY JEWELLERS & PAWNBROKERS

BUYBACK • BUREAU DE CHANGE • MONEY TRANSFER • CHEQUE CASHING

# தூவல்கள்




## பகல் கனவாகிவிடப்போகும் சீனாவின் கனவு..

பாரதியார் கண்ட கனவு சிங்கள தீவுக்கோர் பாலம் அமைப்போம். அதை நினைவுபடுத்தியுள்ளார் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி. அதுவும் சிங்கள தேசத்தின் நாடாளுமன்றத்தில் என்றபோது சிறிது சிந்திக்க வேண்டியிருக்கிறது. சீனாவின் கனவு பகல் கனவாகிவிடுமோ. பொறுத்திருந்து பார்ப்போம்.

*- உமா மகாலிங்கம்*

## ஜீரிஎப் தடைநீக்கத் திட்டமா?

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு உள்ளது என்பதற்கான உறுதியான ஆதாரங்கள் இல்லாத சில புலம்பெயர் அமைப்புகள் மற்றும் தனி நபர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை குறித்து மீளாய்வு செய்யப் போவதாக மங்கள சமரவீர கூறிறியிருக்கிறார். இது ஏதோ நல்ல விடயம் என்று நினைக்காதேங்கோ, அவர் லண்டன் வாற நேரமெல்லாம் விருந்துண்டு மகிழ்கிறது பாதர் இமானுவலின் ஜீரிஎப் காரருடன் தான் என்பதால் அதற்கு வசதியாகத் தான் இந்த ஏற்பாடு.

*- இணுவை சி. இரங்கன்*

## இனப்படுகொலை செய்தவருக்கு 'பீலட்மார்சல்' பட்டம்

மைத்திரி அரசாங்கம் என்னத்தைச் செய்ததோ இல்லையோ சரத் பொன்சேகாவிற்கு எல்லாத்தையும் குடுத்து அவரை அலங்கரிக்கிறது என்பதிலை குறியாக இருக்கிறது. இந்த லட்சணத்தில் உள்ளக விசாரணை நடாத்தி குற்றவாளிகளை தண்டிக்கப் போகிறார்களாம். இதுக்கு சுமந்திரன் ஆதரவு வழங்கப் போறாராம். நடக்கிற கதையாய் கதையுங்கோ!

*- சிறிகணேசன்*

## குற்றம் சாட்டாதீர்கள்!

எதற்கெடுத்தாலும் சிறிலங்கா அரசாங்கத்தை குற்றம் சாட்டுவதில் அர்த்தமில்லை. புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டு இன்னமும் இரண்டு மாதங்கள் முடியவில்லை அதற்குள் அவர்களால் எல்லா விடயங்களையும் செய்ய முடியாது. மகிந்தவின் ஆட்சியின் எச்சசொச்சங்களையும் அகற்ற அவர்களுக்கு காலம் எடுக்கும். இந்த நிலையும் தமிழில் தேசிய கீதம் பாடுவதற்கு அனுமதித்திருக்கிறார்கள் அதே பெரிய விடயம்.

*- சி. சிறிவாயு*

## கழிவு ஓயில் பிரச்சினை!

பத்தாண்டுகளுக்கு மேலாக நிலத்தடி நீரினுள் தெரிந்தோ தெரியாமலோ கலக்கப்பட்ட கழிவு ஒயிலின் தாக்கம் ஏற்கனவே சிறிது சிறிதாகத் தெரிந்தாலும் தற்போது தான் பூதாகாரமாக வெளிக் கிளம்பியுள்ளது. இது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக கிளம்பியவர்கள் மீது தாக்குதல்கள் குற்றச்சாட்டுக்கள் என்பன இடம்பெற்ற போதும் பெரிதாகக் கண்டு கொள்ளாமல் விட்ட ஊடகங்கள் கிணற்று நீரில் எண்ணைக் கலப்பின் விகிதம் தற்போது அதிகரித்து வரும் போது கூட அவ்வளவு சீரியசான பிரச்சினையாக மக்களிடம் கொண்டு சேர்க்காதது ஏனென்று தெரியவில்லை !

இவ்விடயத்தில் புலம்பெயர் நாடுகளில் உள்ள ஊடகங்கள் எதுவுமே இங்குள்ள மக்கள் என்ன செய்யலாம் என்பது பற்றியோ அங்குள்ளவர்களின் பிரச்சினைகள் பற்றியோ இப்பிரச்சினையின் வீரியம் தொடர்பாகவோ தெரிவிப்பதில்லை.

***ஒரு பேப்பர்*** ல் இடைக்கிடையே இது தொடர்பான ஆக்கங்கள் வந்தாலும் பொதுமக்களிடையே அது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்த ஏதாவது கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்யலாமே ?

*- பாவு ராஜ்*

## நேரில் வருவார்களா?

ஜீரிவி தொலைக்காட்சியில் வந்து மைத்திரிபாலவிற்கு எதிராகப் போராட்டம் நடாத்த வேண்டாம் என்று தமிழ் மக்களைக் கேட்கும் ஐ.தி. சம்பந்தனும், ஜெகேந்திர போசும் இதனை மக்களுக்கு முன்னால் வந்து சொல்வார்களா? இதுபற்றி விவாதிக்க ஒரு பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்வார்களா? ஏன் ஓடி ஒளிகிறார்கள்? மக்களுக்கு முன்னால் வந்தால்தான் அவர்களது உணர்வினைப் புரிந்து கொள்ளமுடியும்.

*- அழகானந்தன்*

## சன் டீவி குழுமத்தை வாங்குகிறதா ரிலையன்ஸ்?

முதலில் விமானம் தரைதட்டியது. இப்போது மாறன் குடும்பத்தாரின் சூரியன் அஸ்தமிக்கிறது. அம்பானி இப்போது கலாநிதி மாறனின் சன் டீவி குழுமத்தை வாங்குகிறார்.

இது நடந்தால் கடந்த ஒரு நூறாண்டுகால திராவிட அரசியல் ஒரு முழு சுற்று சுற்றி மீண்டும் தொடங்கிய இடத்துக்கே வந்திருக்கிறது என்று அர்த்தம்.

*- செந்தில்நாதன்*

## நமோ நமோ பாடும் சலுகை

இலங்கையின் அரச கரும மொழிகளாகத் தமிழ், சிங்களம் என்பவைகள் இலங்கையின் அரசியல் யாப்பில் பிரகடனப் படுத்தப்படாத நிலையில், தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்படுவது ஜனாதிபதியின் விருப்பு, வெறுப்புக்களுக்கு ஏற்ற விதத்தில் மாறிக்கொண்டுதான் இருக்கும்!

இலங்கையின் அரச கரும மொழியானது சிங்களமாக இருக்கும்வரை, தமிழில் தேசிய கீதம் பாடுவது தமிழ் பேசுவோரது உரிமையாக இருக்க மாட்டாது. அது அவர்களுக்குக் கொடுக்கப்படும் ஒருவித சலுகையாக மாத்திரம்தான் இருக்கும்.

*- உதயகுமார் அபிமன்னசிங்கம்*

## விக்னேஸ்வரன் தலைவராக வேண்டும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒற்றுமை பேணப்படவேண்டும் எனில் அதனை கட்சியாகப் பதிவு செய்து அதற்கு நீதியரசர் விக்கினேஸ்வரனைத் தலைவராக்க வேண்டும். விக்னேஸ்வரன் அனைவரினதும் அபிமானத்தைப் பெற்றவர் மாத்திரமல்ல ஆண்டவரிடத்தில் மிகுந்த பக்தி கொண்டவர். தவறுகளைச் சுட்டிக் காட்டும் தன்மை கொண்டவர். சம்பந்தன் ஐயா இளைப்பாறி அவருக்கு வழி விடவேண்டும். சுரேஸ் பிரேமச்சந்திரனை கட்சியின் செயலாளராக நியமிக்கலாம். மாவை சேனாதிராசா தொடர்ந்தும் தமிழரசுக்கட்சியின் தலைவராக இருக்கலாம். இவை எனது கருத்துகள்.

*ரோனி பிரான்சிஸ்*


## பழைய ஒரு பேப்பர்!

***ஒரு பேப்பர்*** இல் முழுக்க முழுக்க பழையபடி ஒரே அரசியல் கட்டுரையள் வாற மாதிரி இருக்கு. அதுபோல வழமையாக எழுதுபவர்களும் எழுதுவதையும் நிறுத்திவிட்டார்கள். பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பத்து ஆண்டுகளைக் கடந்து நிற்கும் ***ஒரு பேப்பர்*** ஐ மீண்டும் பழைய நகைச்சுவையும் நையாண்டியும் கலந்து நாட்டு நடப்புக்களைத் தரும் பேப்பராகப் பார்க்கவேண்டும் என்பது எனது அவா ! நடக்குமா ?

*- அகிலன்*

# நாகலிங்கம் அவர்களின் இழப்பு தமிழர்களுக்கு பேரிழப்பாகும்

**பிரித்தானியத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு**



*ஜேர்மனியில் தமிழ் ஆலயம் என்ற தமிழ் பள்ளிகளின் உருவாக்கத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் உறுதுணையாயிருந்த திரு. இரா நாகலிங்கம் அவர்கள் மார்ச் 16ம் திகதி ஜேர்மனியில் காலமானார். அவரது இழப்பு தொடர்பாக தமிழர் ஒருங்கிணைப்பு குழு விடுத்துள்ள இரங்கல் அறிக்கையில் காலஞ்சென்ற திரு. நாகலிங்கம், புகலிடநாடுகளில் வாழும் இளந்தலைமுறையினரிடம் தமிழ்மொழிப்பற்றை ஆழமாக வேரூன்றவைக்கவேண்டும் என்ற முயற்சியில் இறுதிவரை ஓயாது உழைத்தவர் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையினை முழுமையாக இங்கு பிரசுரிக்கிறோம்.*

"தமிழாலயத்தின் தந்தை" நாகலிங்கம் ஆசிரியர் அவர்கள் மார்ச் 16ஆம் நாள் திங்கட்கிழமை காலமான சேதிகேட்டுத் தமிழர்கள் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளார்கள்.

திரு.நாகலிங்கம் அவர்கள் சாவடைந்தமையானது தமிழர்களுக்குப் பேரிழப்பாகும்.

யேர்மனியில் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு அடித்தளமிட்டவர் திரு.இரா நாகலிங்கம் அவர்கள். புகலிடநாடுகளில் தமிழ்மொழி தழைத்தோங்க அயராது பாடுபட்டார்.

தமிழ் மொழியின் பாதுகாவலர், தமிழேந்தல் என்று ஐரோப்பா வாழ் தமிழ் மக்களால் மதிப்புடன் அழைக்கப்பட்ட நாகலிங்கம் ஆசிரியர் அவர்களின் தமிழ்ச்சிறார்களுக்கான கல்விப்பணி, யேர்மனியில்1986ஆம் ஆண்டு ஆரம்பமானது.

யேர்மனியில் 10 மாணவர்களுடன் ஆரம்பித்த முதல் தமிழ்ப்பள்ளி மூன்றாண்டுகளில் 13 தமிழ்ப்பள்ளிகளாக வளர்ச்சியடைந்ததில் தமிழாலயத் தந்தை நாகலிங்கம் ஆசிரியர் அவர்களின் முழுமையான உழைப்பும் முக்கியமானது என்பதனை யேர்மனிவாழ் தமிழ்மக்கள் அனைவரும் அறிவர்.

தமிழ்ப்பள்ளிகளில் பொதுத்தேர்வு நடாத்தும் திட்டத்தை யேர்மனியில் முதன்முதலில் 1989ல் செயற்படுத்திய திரு.இரா நாகலிங்கம் அவர்கள்.

1990களில் இருந்து தமிழ் மற்றும் கலைப்பள்ளிகளை ஒன்றிணைத்து தமிழாலயப் பள்ளிகளாகவும் உருவாக்கிய பெருமை திரு.நாகலிங்கம் அவர்களுக்குரியது என்பது குறிப்பிடத்தக்கது.

யேர்மனி மற்றும் ஐரோப்பா முழுவதும் வாழும் புலம்பெயர் தமிழர்களிடையே தமிழ்மொழிக்கல்வி ஊட்டக் கடுமையாக உழைத்த நாகலிங்கம் ஆசிரியர் அவர்கள், புகலிடநாடுகளில் தமிழ்தேசிய உணர்வோடு தமிழ்மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றை வளர்த்து, அடுத்தடுத்த தலைமுறையினரையும் உருவாக்கி அரும்பணி ஆற்றியமைக்காகத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் தாயகத்திற்கு வரவழைக்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டார்.

புகலிடநாடுகளில் வாழும் இளந்தலைமுறையினரிடம் தமிழ்மொழிப்பற்றை ஆழமாக வேரூன்றவைக்கவேண்டும் என்ற முயற்சியில் இறுதிவரை ஓயாது உழைத்து இன்று மீளாஓய்வுக்கு சென்றுவிட்ட தமிழாலயத்தந்தை திரு.இரா நாகலிங்கம் அவர்கள் தமிழ்மக்கள் மனங்களில் என்றும் நிலைத்திருப்பார் என்பது உண்மையானது உறுதியானது.

தேமதுரத் தமிழுக்கும் தமிழீழத்திற்கும் அளப்பரிய பணியாற்றி காலம் ஆகிவிட்ட திரு. இரா நாகலிங்கம் அவர்களின் இழப்பால் ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அன்னாரின் குடும்பத்தாரின் கைகளை ஆதரவோடு பற்றிக் கொள்கிறோம்.

ஒரு பேப்பர் தொடர்பான கருத்துக்களுக்கு
facebook.com/orupaper Email: info@orupaper.com
Tel : 020 7043 4314 Fax : 020 7043 4312

one-stop-shop
for all of your
Telecoms needs
Saving you
Time & Money





Our Products and Services:
Landlines & Broadband
SIP Trunks
(Free Inclusive Minutes)

Office Phone Systems
✔ Easy to control
✔ Lower call costs
✔ No need for a costly PBX
✔ No maintenance charges
✔ Lines from £6.75

FREE
FIBRE / ETHERNET
INSTALLATION *

MONEX TELECOM
Exclusively for Businesses

Telephone;
0207 402 2900
website;
www.monextelecom.co.uk
24 / 7 Technical Support

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, MARCH 20, 2015, ISSUE 238

## முன்னைய அரசாங்கத்தின் அணுகுமுறையே கடைப்பிடிக்கப்படுகிறதா?

போரின் இறுதியில், விடுதலைப்புலிகள் இயக்கத்தினரும், அவர்களுடன் இணைந்து செயற்பட்டவர்களுமென இருபதினாயிரம் வரையானவர்கள் கைது செய்யப்பட்டு பேருந்துகளில் அழைத்துச் செல்லப்பட்டதாக நேரில் கண்ட சாட்சிகளின் அடிப் படையிலான தகவல் உள்ளது. சிறிலங்கா அரசினால் அமைக்கப்பட்ட LLRC விசார ணைகளின் போது சாட்சியமளித்தவர்களும், கைது செய்யப்பட்ட மற்றும் காணாமற் போன தமது உறவினர்கள் பற்றிய விபரங்களை வழங்கியிருந்தனர். இவர்களில், இதுவரை பன்னிரண்டாயிரம் பேர் விடுவிக்கப்பட்டதாக சிறிலங்கா முன்னைய அரசாங்கம் கூறிவந்தது. இத்தகவல்கள் சரியெனின் இன்னமும் எண்ணாயிரம் பேர் வரை தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று எடுத்துக் கொள்ளலாம்.

சிறிலங்காப் பிரதமர் இரணில் விக்கிரமசிங்க அண்மையில் தந்தி தொலைக் காட்சிக்கு வழங்கிய நேர்காணலில், ஆயிரக்கணக்கில் அல்ல நூற்றுகணக்கானவர்களே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கிறார். இவ்வாரம் சிறிலங்காவின் சட்டமா அதிபர் திணைக்களத்தில் சட்டமா அதிபர் சுகந்த கம்லத்தினால் நியமிக்கப் பட்டுள்ள அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பான குழுவின் கூட்டத்தில் இருநூற்றி எழுபத்தைந்து அரசியற் கைதிகளே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டதாக அக்கூட்டத்தில் கலந்து கொண்ட கூட்டமைப்பின் தேசியப்பட்டியிலிலிருந்து தெரிவான சட்டத்தரணி சுமந்திரன் கூறியிருக்கிறார்.

அதே சமயம், திருகோணமலையிலுள்ள கடற்படை முகாம் ஒன்றில் அமைக்கப் பட்டுள்ள 'கோத்தாபாய' முகாமில் எழுநூறுபேர் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக வும், தம்மிடம் உள்ள சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு உத்தரவாதம் தந்தால், அவற்றைக் கண்ட சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கத் தயாராக இருப்பதாக கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார். கடற்படை முகாங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க்கைதிகள் அரசபடைகளுக்கு பணி விடை செய்வதற்கு அமர்த்தப்பட்டிருப்பதான தகவலை முதலமைச்சர் விக்னேஸ் வரனும் வெளியிட்டிருக்கிறார். இருப்பினும், இவ்விருவரும் வெளியிட்டுவரும் தகவல் களை, கைதிகள் விடயத்தில் அக்கறையுடன் செயற்படுவதாகக் காட்டிக்கொள்ளும் சுமந்திரன் கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை. இதனையே அரசியல் கைதிக ளின் விடுதலை தொடர்பான செயற்பாடுகளில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் செயற் பாடுகள் திருப்திகரமாக இல்லையென சட்டத்தரணி கே.எஸ்.இரத்தினவேல் அவர் களும் தெரிவித்துள்ளார்.

இவற்றின் அடிப்படையில் வைத்துப்பார்த்தால், தமிழ் அரசியற் கைதிகள் விட யத்தில் மகிந்த அரசாங்கத்தினைப் போலவே மைத்திரி –ரணில் அரசாங்கமும் நடந்து கொள்ளவதாகவே எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது.

## ஒரு பேப்பர்

*வணக்கம் !*

*இரண்டு கிழமை எப்பிடிப் போகிறதெண்டு தெரியேல்லை. நேற்றுத்தான் 237வது பேப்பர் வந்தது போல் இருக்குது. எதுக்கு இந்த ஆலாபனைகள் எண்டால் இந்தப் பேப்பரில் செய்யிறதெண்டிருந்த இரண்டு விசயத்தை செய்ய முடியேல்லை. ஒண்டு உமா குமாரனின் செவ்வி. மற்றது அண்மையில் மரணமான கி.பி. அரவிந்தன் பற்றிய நினைவுக்குறிப்பு. நினைவுக்குறிப்பினை எழுதவிருந்த இரவியண்ணை நேரமில்லாமல் அவதிப்பட்டதால் எழுத முடியேல்லை. உமா குமாரனை நேர்காணல் செய்யிறதற்கான பொறுப்பை ஒரு இளையவரிடம் விட்டிருக்கிறோம். அடுத்த* ***ஒரு பேப்பர்*** *ல் இவற்றை நீங்கள் எதிர்பார்க்கலாம்.*

*விடுதலைப்போராளி, ஊடகவியலாளர், கவிஞர், எழுத்தாளர் என பல்வேறு முகங்களைக் கொண்ட ஆளுமையான கி.பி. அரவிந்தனுக்கும்* ***ஒரு பேப்பர்*** *க்குமான தொடர்பு மிகக்குறுகியது. 2008 இல் சோமி தரனின் 'எரியும் நினைவுகள்' ஆவணப்படத்தை நாம் விம்பிள்டனில் காட்சிப்படுத்தியிருந்தோம். இவ்விடத்தில் எங்களை ஊக்கப்படுத்தி பல்வேறு உதவிகளையும் அவரே செய்திருந்தார்.* ***ஒரு பேப்பர்*** *பற்றி கி.பி. அரவிந்தன் நல்ல விமர்சனங்களைக் கொண்டிருந்த போதிலும், "சில வேளைகளில் ஒரு மஞ்சள்த்தன்மை தென்படுவதாக" ஒரு முறை கூறியிருந்தார். குறித்த ஒரு பத்தி எழுத்தாளரின் ஆக்கங்களையிட்டே அவர் இவ்வாறு கூறியிருந்தாலும், அந்த விடயத்தை நாம் அலட்சியம் செய்யவில்லை.*

***ஒரு பேப்பர்*** *தொடங்கிய நாட்களில் எல்லாருக்கும் களம் அமைத்துக் கொடுக்கவேணும், சமூகத்தில் உள்ள அவலங்களை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காக சில பத்தி எழுத்தாளர்களுக்கு வரம்புமீறிய சுதந்திரத்தை வழங்கி விட்டோம் என்றே எண்ணுகிறோம். அதன் மோசமான விளைவுகள் இப்போது வேறு வடிவத்தில் வெளிப்பட்டுள்ளது. ஆகவே இப்போது இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி வருகிறோம்.*

*கி.பி. அரவிந்தன் போன்ற ஆளுமைகளை சரியான வகையில் பயன்படுத்தத் தவறிவிட்டோமோ அல்லது அவர்கள் வேறு நிகழ்ச்சித் திட்டத்துடன் செயற்பட்டார்களா என்பது தெரியவில்லை. ஆனால் அவர்களுக்குரிய இடத்தை வழங்கத் தவறிவிட்டோம் என்ற ஆதங்கம் எங்களிடம் உள்ளது. வருங்காலத்தில் இதனைச் சரி செய்ய முடியும் என்றே எண்ணுகிறோம்.*

*ஐரோப்பிய நாடுகளில் சிறுவர்களுக்கு தமிழ்க்கல்வி வழங்குவதில் ஜெர்மனியில் இயங்கும் தமிழாலயங்களின் பணி போற்றத்தக்கது. மற்றைய நாடுகளில் தமிழ்ப் பாடசலைகளின் வளர்ச்சிக்கு ஜெர்மனி தமிழாலயங்களே முன்னுதாரணங்களாக இருந்தன. அந்தவகையில் இவ்வாரம் காலமாகிய ஜெர்மனி தமிழலாயங்களின் தந்தை எனப்போற்றபடும் நாகலிங்கம் ஐயாவின் பணி அளப்பரியது.*

*நாகலிங்கம் ஐயாவிற்கும், கி.பி. அரவிந்தனுக்கும்* ***ஒரு பேப்பர்*** *தனது இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.*

*அடுத்த பேப்பரில் சந்திப்பம்*

***ஒரு பேப்பர்*** *காரன்கள் + காரிகள்*

# New Delhi should stop looking at Eezham Tamils through Colombo






The very fact that no Indian Prime Minister before Mr Modi hitherto cared to visit Jaffna shows the long-offensive foreign policy attitude of New Delhi towards the nation of Eezham Tamils, located at the closest proximity to India. This should be read along with another foreign policy fact that it was in the case of Eezham Tamils India for the first time in its history was involved in the crime of genocide outside of its country. Both stemmed from an adamantly practised policy of New Delhi viewing Eezham Tamils through the prism of 'Sri Lanka' and the establishment in Colombo. Whether China or the USA, or both – whatever may be the ultimate foreign policy concern of India, the times are such that New Delhi should learn to approach Eezham Tamils as a nation of its own right.

Mr Narendra Modi's current visit to Jaffna and Trincomalee through Colombo is part of a larger Indian Ocean agenda of countering Chinese influence rather than showing justice to Eezham Tamils affected by the long injustices of New Delhi.

> It is time for New Delhi to think of an alternative foreign policy that recognises the nation of natural ally in the island and patch up with it, before deeply offended sentiments of this nation in the internationalised atmosphere of today count India out for generations.

It is obvious what would be the priority in the bargain and shopping list. It won't be the removal of the occupying genocidal military or allowing international justice to reach Tamils, or it won't even be Tamils getting their international airport back at Palaali for their worldwide diaspora to directly interact, but Trincomalee to become a 'petroleum hub'. Tamils have no say, even on what 'hub' Trincomalee should be.

Colomo's cabinet minister Champika Ranawaka has already spoken to The Hindu on Tuesday, that "Don't look at Sri Lanka through Tamil prism," and that "we have created a unique, organic culture here." Probably he was referring to the genocidal culture and its preservation for the usual, blackmailing bargain of the Sinhala State's China policy.

It is time for New Delhi to think of an alternative foreign policy that recognises the nation of natural ally in the island and patch up with it, before deeply offended sentiments of this nation in the internationalised atmosphere of today count India out for generations.

So far New Delhi's foreign policy attitude towards Eezham Tamils was either that of a dog that missed the squirrel (A'nil ea'ravidda naay) or that of a dog in the manger (Vaikkal paddadai naay).

New Delhi should no more block or hijack any international justice coming to Eezham Tamils for the international crimes committed on them.

There should be an end to the policy that committed war crimes in the country of Eezham Tamils and built memorial for the IPKF in Colombo.

> Mr Narendra Modi's current visit to Jaffna and Trincomalee through Colombo is part of a larger Indian Ocean agenda of countering Chinese influence rather than showing justice to Eezham Tamils affected by the long injustices of New Delhi.

The current Foreign Secretary of New Delhi was in Colombo as political work diplomat of the IPKF in the late 1980s, and he should know.

Tamil polity should never abandon internationalising the process of justice, until the justice is delivered to its righteous satisfaction and to the benefit of entire humanity.

*Courtsy: Tamilnet*

# Change But No Change In Sri Lanka



By Deirdre McConnell

What is the difference between a "changing context" and a "paradigm shift"?

The anti-apartheid struggle in South Africa spanned most of the last century. A paradigm shift, enabled by a vast political process of struggle, was required to make the radical change from minority white oppressive rule, to the majority, black people, being included in government. The repressive mechanisms that had tried to crush activists, human rights defenders and all who struggled for civil rights and justice – were notorious. The methods included systematic violence, torture and killings. I remember clearly that fateful day when Ruth First was killed by a parcel bomb in 1982. Her daughter spoke on BBC Radio recently.

Many factors eventually led to those in power, who maintained an unjust oppressive system for decades, accepting a completely transformed situation where they no longer held the power alone – but shared it with all citizens. Many had asserted that change was impossible. They lacked vision, compassion and political will. But the movement of peoples and systems which favoured change, in the end succeeded in overturning the "Nothing-can-ever-change" brigade.

In South Africa, the change was stark and liberating. A friend of mine, in his 30's, doing post-graduate study in the UK, returned to his country, South Africa, in 1994 to vote for the first time in his life. It was a moving experience – a sense of being liberated from shackles of oppression.

A crucial component of the change process was the country facing up to the violent deeds and effects of the past. Truth had long been a casualty and victim and while the real facts were buried, there could be no reconciliation. There has to be a sense of collective remorse for violations committed – for the healing power of reconciliation to work.

It is at best laughable, as worst cruel and calculating, to say reconciliation can happen while the oppressed are continually exploited and down-trodden – and when there has been no meaningful change.

Of course promise of change can go on and on without ever materialising in anything worth the paper it is written on.

Unfortunately this is the case in Sri Lanka. There has been a change of government, but the real underlying injustices are still as firmly in place as ever. Messages and speeches for international consumption are cleverly constructed to give a cosmetic image of real change. But nothing could be further from the truth. It was the Tamils in the North and East firmly supporting the new President, who were the "kingmakers" ensuring his success. Without them he couldn't have become President. They were hoping for real change. Yet there was nothing in Sirisena's election pledges about their future at all. Despite Sri Lanka saying in international forums for decades that "the government is working on a political solution for the Tamils" no fruit has ever been produced.

Sri Lanka managed to garner support from many countries when the informal discussions on the UN resolution took place in Geneva in March 2014 during the Human Rights Council – HRC. Attempts were made to water it down, to remove mention of the 13th Amendment, remove any reference to demilitarisation in the North and East, and so on. Fortunately these efforts were not successful. It has long been established that militarisation of society leads to increased human rights violations and increased persecution of human rights defenders. But Sri Lanka has strong paid lobby to support its dissemination of its perspective.

It is very important to realise that when a government is committing genocide, it will do anything it possibly can, including violent repression, torture and victimisation, to ensure that no other State interferes in its genocidal programme. This is critical. No one can justify or accept genocide. So at all cost the reality has to be kept from the understanding of the international community.

In reality, Tamils in Sri Lanka have been, and are, victims of genocide. I do not have space here to go through the well-established arguments. But they are crystal clear and indisputable. The Tamils are a people. The Sri Lankan state has, over decades, calculatedly used state apparatus to conduct systematic massacres of genocidal proportions. This has been well documented by the highest and most objective of international human rights organisations. Representations have been made to UN human rights mechanisms since 1987, our organisation has been working on this since 1990.

Genocide has eight stages. The final one is denial. A book could be written on each of these stages with regard to the suffering of the Tamils of Sri Lanka.

Do not let the fact that the Tamils rose up in a liberation movement to defend themselves – having been put in a position where they were forced to wage an armed struggle as last resort – cloud your understanding of cause and effect. Yes, once war was all-out, there were killings on both sides.

However we must never forget that the armed forces of the state were responsible for the vast majority of the killings of Sinhalese civilians through the actions of homeguards and paramilitary forces. As said earlier, the Sri Lankan armed and security forces wielded a horrific level of persecution against the Tamil people. Victims were tortured, disappeared, killed, women were gang-raped and murdered, the whole population starved by a cruel economic embargo for years, mass displacements of civilians who languish in IDP camps for decades, continuing even now, bombing and artillery shelling of Tamil areas since the 1980s… the list goes on.

We all know the culmination of the killings in 2009. The war crimes committed by the Sri Lanka government since the 1980s grotesquely became a heinous "final solution" – and the rest is history. See the Channel 4 documentary "Killing Fields", Read the report of the Panel of UN Experts – and many other documents available.

All this, the Sri Lankan governments (previous and present) would like the international community to ignore, sweep under the carpet. They would like the world to think that all the past problems can be resolved by a domestic process of inquiry and reconciliation. But that is impossible. The same authorities believing in the justified oppression and killing of Tamils, will be in charge, and create yet another smokescreen to try to hide the brutal reality.

Foreign Minister Mangala Samaraweera's statement to the HRC was excellent for consumption by the international community. The commitment to the LLRC – which lacks by far the rigour and vision needed in the situation, his reference to the re-introduction of 17th amendment and repeal of the 18th – are all intended to make the international community feel the government is committed to positive change – to human rights, reconciliation, accountability and co-operation.

But he should, and could, have spoken about commitment to real political change, to the devolution of political authority, to the 13th amendment, long referred to in speeches to foreign audiences. But it is put on and off the government agenda like a hot potato. Such devolution is integral to reconciliation and the full enjoyment of human rights by all the population, as the UNHRC resolution articulates.

Predictably, he talked about South Africa and the government so-called commitment to a Truth and Reconciliation process. But South Africa must not be fooled. There is not even a whisper of a mention of a solution to the real deep-rooted problems and endemic injustice.

There are many possible templates for a solution to the problem, the world over, where peoples in areas colonised have won recognised self-determination rights or autonomy. But even these possibilities have never been considered by the successive governments, let alone the recognition of the real aspirations of the Tamil people for self-rule, voted for overwhelmingly way back in 1977, and again in 2004. In the latter election the Tamil people exercised their right to self- determination to take part in the then unfolding Peace Process of the early 2000s, as partners for peace.

Consider this question: Would there have been a Truth and Reconciliation process set in motion by the UN in Indonesia if East Timor had not been on the pathway to becoming independent? Can you imagine the whole of the East Timorese liberation movement massacred, followed by the instigation of a Truth and Reconciliation Commission, working with Indonesians and the remaining East Timorese people – insisting they be called Indonesians! This is pure fantasy.

We need to look reality in the face. Call a spade a spade. Call genocide, genocide. This is the only way forward. Then stop the oppression. Solutions, – internal self-determination, external self-determination, autonomous regions, cantons like in Switzerland, devolved power through regional states like in India, or USA, and these are just a few solutions. There are many more possibilities.

But while the government is made up of a Sinhalese people the majority of whom have been fed since 1930s with a racist ideology of Sinhala chauvinism, in other words, ideas of superiority of the Sinhalese who can with impunity oppress Tamils, and any other non-Buddhist people – there is no hope that the tweaks and cosmetic fixes that the new President and interim government speak about, will produce any meaningful change.

A paradigm shift is needed.

Constructive and genuine work for Human Rights – both civil and political rights and economic, social and cultural rights, will lead to solutions. Blindfolds need to be removed, to enable clear vision, and real freedom must be sought for all the people of the island.

*( The writer is the author of "The Tamil People's Rights to self-Determination" published in the Cambridge Review of International Affairs )*

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon.................. 020 8150 9950

Meera Arnold & Co
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]
K.Durairajah [Greenford]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER Ltd**
Bank: **HSBC**
A/C: **02211556**
S/C: **40-07-04**

# ஒரு பேப்பர்
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
**அ.இரவி - மணி - அகிலன் மாதவன்**

கனடா
**தயா - அரவிந்தன் - சிந்து**

பொறுப்பாசிரியர்
**- கோபி -**

விளம்பரம்
**அஜந்தா**

அச்சு
**தர்சினி (கனடா) - சுகன்யா**

வடிவமைப்பு
**மயூரன் - யுகன்**

முகப்பு வடிவமைப்பு
**seven zero graphics**

விளம்பர வடிவமைப்பு
**ரஜீவன் - மாயா - சாரங்கன்**

தமிழ் எழுத்துரு உதவி
**சுரதா யாழ்வாணன்**

நிதி – நிர்வாகம்
**அஜந்தா**

வழங்கல்
**உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்**



**உங்கள் தொடர்புகட்கு:**

தொலைபேசி (Tel)
**லண்டன்** 020 7043 4310
**கனடா** 416 613 2850

தொலைநகல் (Fax)
**லண்டன்** 020 7043 4312
**கனடா** 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

**பணிமனை முகவரி**
**ORU PAPER**
**G11 LOMBARD HOUSE**
**2 PURLEY WAY**
**CROYDON, CR0 3JP**

மின்னஞ்சல்:
**info@orupaper.com**

இணையம்:
**www.orupaper.com**



*'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*


# அமெரிக்கா எப்படி ஈழத்திற்கு உதவும்

**- மே 17 இயக்கம்**



*மார்ச் 14ம் திகதி சென்னையிலுள்ள அமெரிக்க துணைத்தூதரகத்தின் முன் மே17 இயக்கம் முற்றுகைப்போராட்டத்தில் இறங்கியிருந்தது. அமெரிக்கா மீதான தமது எதிர்ப்பு தொடர்பாக மே17 இயக்கத்தின ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் வெளியிட்ட கருத்துகளை இங்கு தருகிறோம்.*

1996ல், விடுதலை புலிகள் கைப்பற்றிய முல்லைத்தீவு ராணுவ தளத்தில் தங்கள் புதிய ராணுவ திறன்களை நிரூபித்த பிறகு, அமெரிக்க சிறப்பு படை தொடர்ச்சியான ராணுவ பயிற்சிகளை இலங்கையுடன் மேற்கொண்டது. அது கொரில்லா போரை எதிர்கொள்ள கவனம் செலுத்திய "Operation Balanced Style" என அறியப்படுகிறது.

அமெரிக்காவின் உயர்ந்த Green Beret கமாண்டோ அணி ஒன்று இலங்கை சென்று தீவிரவாத எதிர்ப்பு தொழில் நுட்பங்களை வழங்குகிறது, இது "Operation Balanced Style"க்காக இலங்கை வந்த மூன்றாவது அணியாகும், இலங்கை படையணிக்கான பயிற்சி தொடர்பான பென்டகனின் ராணுவ நடவடிக்கை கடந்த வருடம் மார்ச்சில் தொடங்கியது.

அதுவரை அமெரிக்க ராணுவம் (IMET) International Military Exchange and Training மூலமாக பயிற்சிகளை வழங்கி வந்தது, கடந்த வாரம் அமெரிக்க சிறப்பு படையின் இலங்கை வருகை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது, அது கடந்த புதன் கிழமை அமெரிக்க அறிவித்த தீவிரவாத குழுக்களின் பட்டியலில் LTTE இடம் பெற்றதால் மட்டுமல்ல, கொழும்பு-வாஷிங்டன் உறவின் முக்கியத்துவம் பற்றி ஊடகங்களில் மேற்கொள்ளப்பட்ட அரசு தலைவர்களின் பிரச்சாரமுமே காரணமாகும்" என்று Lt. Col ஹரால்ட் மைக்கல் பூர் அமெரிக்க பாதுகாப்பு துறை அதிகாரி The Sunday Times ற்கு பேட்டி தருகிறார்,

இது இலங்கை அமெரிக்கா இடையிலான உறவை பற்றிய சமகாலத்திய பத்திரிக்கை ஆதாரமாகவும் விளங்குகிறது.

விடுதலை புலிகள் 2000 ல் வன்னியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததையொத்த நிகழ்வாக, அமெரிக்கா "Operation Flash Style" ஐ தொடங்குகிறது, இதில் அமெரிக்க ராணுவ அணி இலங்கைக்கு பல பயிற்சிகளை வழங்குகிறது, இது தவிர அமெரிக்க கடற்படை சீல் அணி ஒன்று அதன் சிறப்பு படகு பிரிவின் மூல பயிசிகளை வழங்குகிறது, அமெரிக்க விமானப்படையை சேர்ந்த Special Operations Squadron (6th SOS) அணி ஒன்றும் பயிற்சியளிக்கிறது, முக்கியமாக அமெரிக்க ராணுவத்தின் மூன்றாவது படைப்பிரிவின் உளவியல் நடவடிக்கை குழு ஒன்று இலங்கை ராணுவ உயரதிகாரிகளுக்கு உளவியல் பயிற்சிகளையும் வழங்குகிறது.

புலிகள் கூடுதலான பகுதிகளை கைப்பற்றிய நிலையிலும் 2001 ல் தேர்ந்தெடுக்கப்பட்ட விக்ரமசிங்க அரசுடன், போர் நிறுத்த உடன்படிக்கைக்கு வருகிறது. அமைதி பேச்சுவார்த்தை சமயங்களில் கூட அரசு அமெரிக்க ராணுவ தலையீட்டை வலுப்படுத்தி வந்திருக்கிறது, 2002 மார்ச்சில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஆஷ்லி வில்ஸ் இலங்கைக்கு வழங்கிவரும் ராணுவ பயிற்சி பற்றி மட்டுமல்லாது பீரங்கிகள் மற்றும் ராணுவ தளவாடங்கள் வாங்குவதற்கான நிதித விகளையும் உறுதிபடுத்துகிறார்.

மற்ற அமெரிக்க அதிகாரிகளால் (வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரிச்சர்ட் பௌச்சர், தெற்கு ஆசியாவின் துணைச் செயலாளர் கிறிஸ்டினா ரொக்கா, மாநில துணை செயலாளர் ரிச்சர்ட் அர்மிடக் உட்பட) மேற்கொள்ளப்பட்ட இதைப்போன்ற நடவடிக்கைகள் மற்றும் அறிக்கைகள் அமைதி பேச்சுவார்த்தையை சீரழிப்பதாக இருந்தது, துணைச் செயலாளர் அமெரிக்க ராணுவ அதிகாரிகளுடன்சென்றது மார்ச்சில் இலங்கை வந்த கிறிஸ்டினா ரொக்கா வெளிப்படையாக "ராணுவ கூட்டு நடவக்கை , மற்றும் பயிற்சிகளுக்காகவே" இலங்கை வந்ததாக தெரிவிக்கிறார்.

அமைதி ஒப்பந்தம் கையெழுத்தான 7 மாதங்கள் கழித்து, 2002ன் இறுதியில் 26 பேர் கொண்ட அமெரிக்க பசிபிக் கமாண்டர் படையணி இலங்கை சென்று ராணுவ, கப்பல் மற்றும் விமான படையின் "திறன்கள், பயன்கள் மற்றும் தேவைகள்" அடிப்படையில் விரிவான ஆய்வை மேற்கொண்டது, திருகோணமலையின் தெற்கு கடற்கரை புலிகளின் வசம் இருப்பதாக அது குறிப்பிடுகிறது, அமைதி ஒப்பந்தம் செயல் பாட்டில் இருந்த போதும், அமெரிக்க ராணுவம் இலங்கையை "இது நாட்டின் முக்கியமான பகுதி என்றும், அதை மீட்டெடுக்கும் பொருட்டு போரை முன்னகர்த்த வேண்டும்" என்றும் பரிந்துரைக்கிறது.

அமெரிக்காவின் அதிமுக்கிய படையணி திருகோணமலையின் தெற்கு பகுதி கொரில்லா புலிகளின் யுக்திரீதியிலான கடற்பகுதியாக இருப்பதால் புலிகளிடமிருந்து இப்பகுதி பாதுகாப்பு படையணியால் மீட்க பட வேண்டும் என அறிவிக்கிறது. 'இலங்கை கடற்படை இப்பொழுது இருக்கும் பலவீனமான நிலையை கண்டிப்பாக சமன் செய்ய வேண்டும்' எனவும் எச்சரிக்கிறது. இப்பகுதியை கட்டுக்குள் வைக்காவிட்டால் திருகோணமலை துறைமுகம் எப்போதும் தோல்வியான ஒன்றாகவே இருக்கும் எனவும் தெரிவிக்கிறது".

இவ்வாறு நடந்து கொண்ட அமெரிக்கா எப்படி ஈழத்திற்கு உதவும் ?

இது போன்ற காரணங்களே அமெரிக்க தூதரகத்தினை முற்றுகை இடும் அவசியத்தினை நமக்கு ஏற்படுத்துகிறது.

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்

## நாவினால் சுட்டு நஷ்ட்டப்படாதீர்கள்!

எதைக் காக்கா விட்டாலும் பரவாயில்லை நாக்கையாவது காக்கச் சொன்னார் திருவள்ளுவர். ஏனென்றால் எத்தனையோ சோகங்களுக்கு நாக்கு தான் மூல காரணமாக இருக்கின்றது. எத்தனையோ குடும்பங்களில் நாக்கினால் தான் நிம்மதி காணாமல் போகின்றது.

நாக்கைப் பிடுங்கிக் கொள்கிற மாதிரி நான்கு வார்த்தைகள் கேட்க வேண்டும் என்ற எண்ணம் பல நேரங்களில் மேலோங்குவது இயற்கை. சரியான சந்தர்ப்பம் கிடைக்கிற போது அப்படி மற்றவர்களைக் கேட்காமல் இருக்க பலராலும் முடிவதில்லை. அப்படிக் கேட்டு விடும் போது அந்த நேரத்தில் கிடைக்கின்ற திருப்தியே அலாதி என்றாலும் அப்படிக் கேட்டு விட்டு என்றென்றுமாய் சம்பந்தப்பட்ட மனிதர்களைப் பகைத்துக் கொள்கிறோம் என்பதைப் பலரும் மறந்து விடுகிறோம்.

யாருமே குற்றமற்றவர்கள் அல்ல. எல்லோரும் ஏதாவது சில சமயங்களில் பலவீனர்களாகவே இருந்து விடுகிறோம். பலரும் ஒருசில விஷயங்களில் எப்போதுமே பலவீனர்களாகவே இருக்கிறோம். சிலவற்றை காலப் போக்கில் திருத்திக் கொள்கிறோம். சிலவற்றை காலம் கூட நம்மிடம் மாற்ற முடிவதில்லை. அப்படி இருக்கையில் கடுமையான கூர்மையான வார்த்தைகளால் சிலரின் சில குறைகளையும், குற்றங்களையும் சாடுவது சரியல்ல. யாரை அப்படிச் சாடுகிறோமோ அவர்களும் நம்மை அப்படியே சாடுவதற்கு சரியான சந்தர்ப்பத்திற்காக காத்திருக்க ஆரம்பித்து விடுகிறார்கள். இன்றில்லா விட்டாலும் என்றாவது அந்த சந்தர்ப்பத்தை நாம் ஏற்படுத்தியும் தரக் கூடும். "அன்று என்னைப் பெரிதாகக் கேட்டாயே நீ மட்டும் ஒழுங்கா?" என்கிற ரீதியில் அவர்கள் கேட்க, நாம் ஆத்திரப்பட விளைவாக ஒரு நீண்ட பகை உருவாகி விடுகிறது.

குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை என்பார்கள். ஒவ்வொரு குற்றத்திற்காக ஒவ்வொருவரை நம் நாக்கால் பதம் பார்க்க ஆரம்பித்தால் பின் சுற்றம் என்பதே நம்மைச் சுற்றி இருக்காது. நாம் தனியராகி விடுவோம். சுற்றம் மட்டுமல்ல நண்பர்களும் நமக்கு மிஞ்ச மாட்டார்கள்.

இன்றைய குடும்பங்களில் விவாகரத்துகள் அதிகரிக்க மிக முக்கியக் காரணம் கட்டுப்பாடற்ற நாக்கு தான். உப்புசப்பில்லாத விஷயங்களுக்கெல்லாம் கூர்மையான கடுமையான வார்த்தைகளை உபயோகப்படுத்தி விடுவது தான். ஒரு காலத்தில் வேறு வழியில்லை என்று சேர்ந்திருந்தார்கள். பொறுமையாக இருந்தார்கள். இன்று அந்த நிலை இல்லை.

இன்றைய விவாகரத்து வழக்குகளில் இரு தரப்பினரும் சொல்கின்ற காரணங்களில் உண்மையான சித்திரவதை, பெரிய குறைபாடுகள் போன்ற காரணங்கள் குறைவு என்றும் பெரும்பாலான காரணங்கள் சிறுபிள்ளைத்தனமானவை ஆகத்தான் இருக்கின்றன என்கிறார் ஒரு மூத்த வக்கீல். பள்ளி செல்லும் பிள்ளைகள் போட்டுக் கொள்ளும் சண்டைகளுக்கான காரணங்கள் போலத் தான் அவை இருக்கின்றன என்கிறார். குடும்பம் இரண்டாய் பிரிகிற போது அந்தக் குழந்தைகள் நிலை பரிதாபகரமானது என்பது கூட கவனிக்கப்படுவதில்லை என்கிறார் அவர். பெரும்பாலான தம்பதிகள் கடைசியாகச் சொல்கிற காரணம் இது தானாம். "அந்த அளவு பேசி விட்ட பிறகு அந்த மனிதருடன்/மனுஷியுடன் இனியும் கூட வாழ்வது சாத்தியமில்லை".

*தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே*
*நாவினால் சுட்ட வடு.*

என்கிறார் வள்ளுவர். நாவினால் சுட்ட வடுக்கள் ஆறுவதில்லை. நினைக்க நினைக்க காயங்கள் மேலும் மேலும் ஆழப்படத்தான் செய்கின்றன. சம்பந்தப்பட்ட தவறுகள் கூட பல சந்தர்ப்பங்களில் மன்னிக்கப்பட்டு விடுகின்றன. ஆனால் சொல்லப்பட்ட வார்த்தைகள் மன்னிக்கப்படுவதில்லை, மறக்கப்படுவதுமில்லை.

ஒருவர் எத்தனையோ விஷயங்களில் நல்லவராக இருக்கக் கூடும். அவர் மற்றவர்களுக்கு எத்தனையோ உதவிகள் செய்திருக்கவும் கூடும். ஆனால் கட்டுப்பாடில்லாமல் வார்த்தைகளால் மற்றவர்களை அவர் வேதனைப்படுத்துவாரேயானால் அத்தனை நன்மைகளும், உதவிகளும் மங்கிப் போகும். பேசிய அந்த கடுஞ்சொல் மட்டுமே பிரதானமாக நிற்கும்.


இது குடும்பத்திற்குள்ளும், உறவினர்களுக்குள்ளும் மட்டும் பூதாகரமாகும் ஒரு பிரச்சினை அல்ல. அக்கம் பக்கத்திலும், அலுவலகத்திலும், பொது இடங்களிலும் கூட நம் அமைதியை நிர்ணயிக்கும் ஒன்றாக இருந்து விடுகிறது.

அதற்கென்று யார் என்ன சொன்னாலும் பொறுத்துக் கொண்டே போக வேண்டியதில்லை. நமக்கு இழைக்கப்படும் அநீதிகளை சகித்துக் கொண்டே இருந்து விடத் தேவையில்லை. தவறுகளை சுட்டிக் காட்டுவதும், உறுதியுடன் நம் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டியதும் சில நேரங்களில் அவசியமாகவே இருக்கின்றது. அது போன்ற சந்தர்ப்பங்களில் சொல்ல வேண்டியதை உறுதியாகவும், தெளிவாகவும் சொல்லுங்கள். ஆனால் வார்த்தைகளில் விஷம் வேண்டாம், விஷமமும் வேண்டாம். சொல்வது நேர்மையாகவும், உண்மையாகவும் இருந்தால் அது அப்போது ஒத்துக் கொள்ளப்படாவிட்டாலும் கூட சம்பந்தப்பட்டவர்களால் உணரப்படும். அப்போது சற்று சங்கடமாக இருந்தாலும் சீக்கிரமாகவே மறக்கப்படும். ஆனால் வார்த்தைகளில் விஷம் தோய்ந்திருக்குமானால் சொல்கின்ற செய்தி உண்மையாகவே இருக்குமானாலும் அது ஆறாத வடுவாக அடுத்தவர் மனதில் தங்கி விடும். நீண்ட பகைமை பிறந்து விடும்.

எனவே வார்த்தைகளால் ஜெயித்து விட்டு வாழ்க்கையில் தோற்றுப் போகாதீர்கள். வார்த்தைகளைத் தீட்டுவதற்குப் பதிலாகப் புத்தியைத் தீட்டுங்கள். குத்தல் பேச்சும், கிண்டல் பேச்சும் அந்த நேரத்தில் நன்றாகத் தெரியலாம். கூட இருப்பவர்களிடம் 'சபாஷ்' கூடப் பெறலாம். ஆனால் அந்தப் பேச்சால் முக்கியமான மனிதர்களை இழந்து விட்டால், இடையே உள்ள அன்பு முறிந்து விட்டால் நமக்கு நஷ்டமே என்பதை மறக்காதீர்கள்.

- என்.கணேசன்

# தமிழ் அரசியலில் கேள்விக்குள்ளாகும் வெளிப்படைத்தன்மை



**கோபி**
***ஒரு பேப்பர்***

*"You all have made various statements about me, but none commended the deferral of the OISL report which was achieved following my election. I can say for sure the deferral of the report was granted due to my election as the President. If that report had been tabled in March, it is the very people you campaign for and hold in high regard that would fall into trouble…"* Maithiripala Sirisena, when addressing to SLFP electoral organisers on 17 March 2015 in Colombo.

பின் முள்ளிவாய்க்கால் காலத்தில், தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் செயற்படும் அமைப்புகள் அனைத்தும் இனி ஜனநாயக வழிமுறைகளைப் பின்பற்றியே செயற்பாடுகள் மேற்கொள்ளபடவேண்டும் என்ற ஒற்றை விடயத்தில் உடன்பட்டன. விடுதலைப்புலிகளிடம் ஜனநாயகம் இல்லாமையே அவர்களது தோல்விக்கு வழி சமைத்தது என்றும் சிலர் பேசத் தலைப்பட்டனர். ஆதிக்க சக்திகளும் இத்தகைய மாற்றத்தையே வேண்டிநின்றன. ஆயுதப்போராட்டம் மௌனிக்கப் பட்டமையால், தலை மறைவு வாழ்க்கை, இரகசியம் பேணுதல், சட்ட மீறல் என்பவற்றுக்கு அவசியம் இல்லை என்பதனை கவனத்திற்கொண்டு இப் புதிய அணுகுமுறையில் மக்கள் நம்பிக்கை கொண்டனர். ஆனால் ஜனநாயகப் பாதையில் பயணிப்பதாகக் கூறும் அமைப்புகளோ, ஜனநாயகம் என இவர்கள் எதனைக் குறிப்பிடுகிறார்கள் என்ற ஐயத்தை ஏற்படுத்துமளவிற்கு நடந்துகொள்வதுடன் மக்களைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்ல முயன்றுவருகின்றன.

ஜனநாயகத்தில் முக்கிய கூறான வெளிப்படைத் தன்மை பற்றி மட்டுமே இக்கட்டுரை பேச விழைகிறது. ஏனெனில் இலங்கைத் தீவின் ஆட்சி மாற்ற முயற்சிகளில் முதற்பலியாகியிருப்பது வெளிப்படைத்தன்மையே. வெளியிலிருந்து இயக்கும் ஆதிக்கசக்திகளும் சரி, உள்நாட்டில் அரசியல் செய்பவர்களும் சரி, 'இராஜதந்திரம்' என்ற கவசத்தைப் பாவித்து மக்களை இருட்டில் வைத்திருக்கவே விரும்புகிறார்கள். பன்னாட்டு இராஜதந்திரிகள் என்பவர்கள் நெற்றிக்கு நேரே பொய் பேசுபவர்கள் என அறிந்திருக்கிறோம், ஆனால் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தலைமை தாங்குபவர்கள் என்பவர்களும் இவ்வாறுதான் நடந்துகொள்கிறார்கள் என்பது அந்த மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாக இருக்க முடியாது.

நடந்துமுடிந்த சிறிலங்காவின் அதிபர் தேர்தலில் மேற்குலகத்தின் பிரியத்துக்குரிய தரப்பான மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்றால், அதாவது ஆட்சி மாற்றம் ஏற்பட்டால், ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைச் சபையில் சிறிலங்கா தொடர்பான தீர்மானம் நீர்த்துப் போகச் செய்யப்படும் என்ற அனுமானம் தமிழ்தேசியத் தரப்பினரால் வெளியிடப்பட்டது. தேர்தலுக்கு முன்னர், இப்பத்தியிலும் இதுபற்றி எழுதப்பட்டது. இவ்விடயத்தில் ஒருவர் பன்னாட்டு அரசியல் விடயங்களில் புலமை கொண்டவராக இருக்க வேண்டியதில்லை, நேராகச்சிந்திக்கத் தெரிந்த எவரும் இத்தகையதொரு முடிவிற்கு வந்திருக்கமுடியும். இந்நிலையில், மனிதவுரிமைச்சபையின் ஆணையாளரால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கை வெளியிடுவதில் தாமதம் ஏற்படலாம் எனவும் எதிர்வு கூறப்பட்டது. ஆனால், தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்னர், அனைத்துலக நெருக்கடிக்கான குழுவில் (Internation Crisis Group) சிறிலங்கா விவகாரம் தொடர்பான ஆய்வாளர் அலன் கீனன் எழுதிய ஒரு கட்டுரையில் யார் தெரிவு செய்யப்பட்டாலும் ஐ.நா. மனிதவுரிமைச் சபையின் சிறிலங்கா தொடர்பான நகர்வுகளில் மாற்றம் ஏற்படுத்தப்படாது என்ற சாரப்படி எழுதியிருந்தார். தமிழ் தேசியக் கூட்டமைப்பும், ஆட்சிமாற்றத்தை ஆதரித்துவந்த சில புலம்பெயர் அமைப்புகளும் இவ்வாறான கருத்துகளையே மக்கள் மத்தியில் விதைத்து வந்தன. ஆட்சி மாற்றத்தின் பின்னர், இராஜபக்ச சகோதரர்கள் நெதர்லாந்து, ஹேக்இல் உள்ள சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என நடிகர் வடிவேலு பாணியில் எகத்தாளமாக அல்ஜசீரா தொலைக்காட்சியில் வந்து வீரம் பேசியவர்களும் இருக்கிறார்கள் என்பதனையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

பலரும் எதிர்பார்த்தபடியே, விசாரணை அறிக்கை வெளியிடுவதனை தாம் மனிதவுரிமைச் சபையின் முப்பதாவது கூட்டத்தொடருக்கு ஒத்தி வைப்பதாக மனிதவுரிமைச் சபையின் ஆணையார் கடந்த மாதம் அறிவித்தார். அதுவரை அறிக்கையை ஒத்திவைக்கக்கூடாது எனக் கோரிக்கை விடுத்துவந்த கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் , அறிக்கை வெளியிடுவதனை தாமதித்தமை தமக்கு மகிழ்ச்சியையோ, வேதனையையோ தரவில்லை என முற்றும் துறந்த ஞானிகள் நிலையிலிருந்து கருத்து வெளியிட்டார். ஆனால் இவர்களது உடன்பாட்டுடனேயே அறிக்கை வெளியிடுவது தாமதிக்கப்பட்டது என்பதனை ஏற்றுக்கொள்ள சம்பந்தன் தயாராகவில்லை. அவரது அடிப்பொடியான சுமந்திரனோ, அறிக்கை வெளியிடுவது தாமதித்தாலும், மேலும் விசாரணைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக் கூறி தமிழ்மக்களுக்கு பொய்யானதொரு நம்பிக்கையை ஏற்படுத்த முயன்றார். கூட்டமைப்பின் ஆதரவாளர்களும் மகிந்த அரசாங்கத்தின்போது அனுமதிக்கப்படாத ஐ.நா. விசாரணையாளர்களை இலங்கைத் தீவிற்குள் வர மைத்திரிபால அனுமதிமதிக்கும் வாய்ப்புகள் இருப்பதாக மகிழச்சி கொண்டனர்

ஐ.நா. மனிதவுரிமைச்சபை தமது விசாரணைகளை முடித்து அறிக்கையும் தயார் செய்யப்பட்டு விட்டது எனவும், மேலதிகமான விசாரணை எதனையும் மேற்கொள்ளப்போவதில்லை எனவும் புதிய அரசாங்கத்திற்கு சந்தர்ப்பம் வழங்கவே அதனை வெளியிடுவதனை தாமதித்துள்ளத்தாகவும் இப்போது உறுதியாகத் தெரிய வருகிறது. இவ்வாரம் ஐ.நா. மனிதவுரிமைச் சபையின் ஆணையாளரது பணியக அதிகாரிகளைச் சந்தித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கனேடிய தமிழர் தேசிய அவையின் தலைவர் பேராசிரியர் சிறிரஞ்சன் ஆகியோர் மேற்படி தகவலை மார்ச் 17ஆம் திகதி ஜெனிவா ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வெளியிட்டனர். ஏற்கனவே பெப்பிரவரி பத்தாம் நாள் வடமாகாணசபையில் இனப்படுகொலைத் தீர்மானத்தைச் சமர்ப்பித்து உரையாற்றிய முதலமைச்சர் விக்னேஸ்வரன், ஐ.நா. மனிதவுரிமைச்சபையின் விசாரணை அறிக்கையை தாமதிப்பது தொடர்பாக தம்மைச் சந்தித்த அமெரிக்க இராஜங்கத்திணைக்களத்தின் தென்னாசியப் பிராந்தியத்துக்கான பிரதி இராஜங்கச் செயலாளர் நிசா பிஸ்வால் உரையாடியதாகத் தெரிவித்திருந்தார். இந்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமையும், புலம் பெயர் நாடுகளில் இயங்கும் சில அமைப்புகளும் ஏன் மக்களை இருட்டில் வைத்திருக்க முயலுகின்றன என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது.

**ஐ.நா. மனிதவுரிமைச்சபை தமது விசாரணைகளை முடித்து அறிக்கையும் தயார் செய்யப்பட்டு விட்டது எனவும், மேலதிகமான விசாரணை எதனையும் மேற்கொள்ளப்போவதில்லை எனவும் புதிய அரசாங்கத்திற்கு சந்தர்ப்பம் வழங்கவே அதனை வெளியிடுவதனை தாமதித்துள்ளத்தாகவும் இப்போது உறுதியாகத் தெரிய வருகிறது.**

இவ்வாரம் கொழும்பில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர்களுடனான கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருக்கும் கருத்துகள் மேற்படி தகவல்களை உறுதி செய்வதாகவே அமைந்திருக்கின்றன. அவரது உரையில், "நீங்கள் எல்லோரும் என்னைப்பற்றி பல்வேறு முறைப்பாடுகளை வெளியிட்டீர்கள், ஆனால் நான் (ஜனாதிபதியாக) தெரிவுசெய்யப்பட்ட பின்னர், ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளரின் விசாரணை அறிக்கையை பின்போடப்பட்டமையை ஒருவரும் பாராட்டவில்லை. நான் நிச்சயமாக ஒன்றைக் கூறமுடியும், நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமையாலேயே அறிக்கை பின்போடப்பட்டுள்ளது. மார்ச் மாதத்தில் அந்த அறிக்கை வெளிவந்திருக்குமேயானால் நீங்கள் ஆதரவுவழங்குகிறவர்களும், நீங்கள் பெருமரியாதை கொண்டிருப்பவர்களும் இன்று சிக்கலில் விழ நேர்ந்திருக்கும்." எனக் கூறியிருக்கிறார். ஆட்சி மாற்றத்தின் மூலம் இராஜபக்ச சகோதர்கள் சர்வதேச நீதியிலிருந்து காப்பாற்றப்பட்டிருப்பதாகவே சிறிசேன கூறியிருக்கிறார் என்பது கூட்டமைப்பும் அதன் ஆதரவாளர்களும் கூறிவரும் கருத்துக்கு நேரெதிரானது.

**வெளியிலிருந்து இயக்கும் ஆதிக்கசக்திகளும் சரி, உள்நாட்டில் அரசியல் செய்பவர்களும் சரி, 'இராஜதந்திரம்' என்ற கவசத்தைப் பாவித்து மக்களை இருட்டில் வைத்திருக்கவே விரும்புகிறார்கள்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை வெளிப்படைத்தன்மையின்றி, தமிழ் மக்களை தவறாக வழிகாட்டி வருகின்ற நிலையில், முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவ்வப்போது வெளியிட்டுவரும் கருத்துகளில் வெளிப்படைத்தன்மை காணப்படுவதனை அவதானிக்க முடிகிறது. தேவைப்படும் போதெல்லாம், தமிழ்மக்களுக்கு பாதகமான முறையில் செயற்பட்டுவரும் வெளிச்சகத்திகளின் திட்டங்களையும் அவர் அம்பலப்படுத்தி வருகிறார் என்பது அவரது அரசியல் நேர்மையையும், தமிழ் மக்களின் நலனில் அவர் கொண்டிருக்கும் அக்கறையையும் வெளிக்காட்டுவதாக அமைந்திருக்கிறது. அவர் தொடர்ந்து இப்பாதையில் பயணிப்பார் என எதிர்பார்ப்போமாக.

கருத்துக்களுக்கு -
facebook.com/orupaper @orupaper

**ஒரு பேப்பர்**
கிடைக்குமிடங்கள்

**New Malden**
Ayngaran ............... 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan ................ 020 8605 0434
Murugan Kovil ....... 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

**Tooting**
Yhaal House ........... 020 8767 8585
Rainbow Restaurant. 020 8640 4230
Selvarajah Gold house 020 8767 3795
Niru Con.Store ........ 020 8672 3200
Ayngaran ............. 020 8540 1500
Suvai Aruvi............. 020 8543 6266
Adchaya ............. 020 8540 8192

**Croydon**
Best Foods............. 020 8684 6269
Haran Bros............. 020 8686 2552
Chennai dosa ......... 020 8665 9192
Eelam Video........... 020 8664 8351
Spice Land............. 020 8667 1700

**Lewisham**
Chandra ................. 020 8333 8680
Eelam Shop ........... 020 8690 6545
Katpagam .............. 020 8694 8810
AJ Video ................ 020 8691 8888
Sivan Kovil ............ 020 8318 9844
KRS Supermarket... 020 8297 9432
Best Food ............. 020 8692 9811

**Eastham**
Seelans.................. 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food ............. 020 8552 9578
Akilan Enterprise .... 020 8548 0033
Anjappar ................ 020 8552 1155

**Ilford**
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan .................. 020 8514 1744
Angels .................. 020 8553 0490
Sri store ltd ........... 020 8553 7737

**Edmonton**
New Kannan Stores 020 8884 4979
Sayas..................... 020 8805 9529
Nagapoosani Temple 020 8884 3333

**Walthamstow**
Vinayagar Kovil....... 020 8527 3819
Kumarans ............. 020 7609 1912
Prabas ................. 020 8509 3322

**Harrow**
Tsk food & Wine ..... 020 7622 4258
North Harrow C&C .. 020 8863 6160
Prabhas ................ 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods.............. 020 8423 9933
Sambal Express...... 020 8799 7171

**Wembley**
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods.............. 020 8900 0100
Vahizan Disc .......... 020 8795 0648

**Ealing**
Amman kovil........... 020 8810 0835

**Greenford**
Ambiha .................. 020 8813 0967

**Coventry**
Eellakanthan Temple...02476663554

**South hall**
Thamilini C & C....... 020 8606 9900
Abi Fast Food ......... 0208 813 9494
Palm Palace Restaurant 020 8574 9209
Spicy Palace Restaurant 020 8574 4087
Luxmys C & C ......... 020 8571 4599
Tamilan C & C......... 020 8561 8174
Lady Margret .......... 020 8571 4434



உ
கற்பகபதி

## வோல்தம்ஸ்ரோ கற்பகபதி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்

# வசந்த நவராத்திரி விழாவும் சந்திர தேர் உற்சவமும்

**20.03.2015 வெள்ளிக்கிழமை தொடக்கம் 29.03.2015 ஞாயிற்றுக்கிழமை வரை**

### தினசரி வழிபாட்டுக்கால நிகழ்ச்சிகள்

காலை 10 மணி :
லலிதா திரிசிரி ஹோமம்,
தீப துர்க்கை அம்மன் அபிஷேகம்
காலை 12 மணி: பூஜை
மாலை 5 மணி: கட்கமாலா ஹோமம்,
மீனாட்சி அம்மன் அபிஷேகம்
மாலை 6 மணி: பூஜை
மாலை 6.30 மணி: ஸ்ரீசக்கர பூஜை
மாலை 7.00 மணி: வசந்த மண்டப பூஜை
தொடர்ந்து வீதி உலா, இசை சமர்ப்பணம்

### அலங்கார தரிசனம்

20-03-15 வெள்ளி ஸ்ரீ ராஜராஜேஸ்வரி தரிசனம்
21-03-15 சனி ஸ்ரீ அபிராமி தரிசனம்
22-03-15 ஞாயிறு ஸ்ரீ சரஸ்வரி தரிசனம்
23-03-15 திங்கள் ஸ்ரீநாகபூசணி தரிசனம்
24-03-15 செவ்வாய் ஸ்ரீ காமாட்சி தரிசனம்
25-03-15 புதன் ஸ்ரீ கேதாரகௌரி தரிசனம்
26-03-15 வியாழன் ஸ்ரீ சந்தான பாக்யலட்சுமி தரிசனம்
27-03-15 வெள்ளி சப்பறத் திருவிழா
28-03-15 சனி இரவு சந்திர ரதத் திருவிழா
29-03-15 ஞாயிறு பூங்காவனம்

கற்பக விநாயகப் பெருமானின் சந்நிதானத்தில் அருள்பாலிக்கும் தீபதுர்க்கை அம்மன், மீனாட்சி அம்மன் ஆகியோருக்கு அருள் பிரவாகத்துடன் வசந்த நவராத்திரி காலத்தில் அலங்காரத் திருவிழா நடைபெறவுள்ளது. கற்பக விநாயகன் அருளுடன் அம்பிகை அருளும் கிடைக்க அம்மன் அலங்கார விழாவில் கலந்து வழிபாடு செய்து அருள்பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

22ம் 23ம் திகதிகளில்
**கங்கை அமரன்**
அவர்களின்
இன்னிசைக் கச்சேரி இடம்பெறும்

- சப்பறத் திருவிழா, தேர்த்திருவிழா இரு நாட்களும் அபிஷேகம், ஸ்ரீ சக்கர பூஜை பகல் நடைபெறும்
- 28.03.15 சனிக்கிழமை மாலை 6 மணி முதல் வசந்த மண்டப பூஜை, நவசக்தி அர்ச்சனை இடம்பெறும்.
- 14.04.15 செவ்வாய்க்கிழமை மன்மத வருட சித்திரைப் புத்தாண்டு காலை 9.17 மணிக்குப் பிறக்கின்றது. இதை முன்னிட்டு காலை 7.00 மணி முதல் விநாயகப் பெருமான் அபிஷேகம், பஞ்சமுக விநாயகர் சங்காபிஷேகம் தொடர்ந்து திருவீதி உலா இடம்பெறும்.

2-4, Bedford Road,
Walthamstow, E17 4PX
**TEL: 02085273819**

அடியார்கள் அனைவரும் கலந்து ஐங்கரன் அருளும் அம்பிகை அருளும் பெற்று உய்யும் வண்ணம் வேண்டுகிறோம். ஆலய நிர்வாகத்தினர் , உபயகாரர்கள்



# www.poojasweets.com

Best Quality Vegetarian Food for Any Occasions!



5% OFF
ON-LINE PURCHASES
ENTER:
"ORUPAPER "AT
CHECKOUTS!

...tempting?

discover a new heaven on earth:

**ORDER ON LINE**

FOR NEXT DAY DELIVERY ANYWHERE IN THE UK!*
We also do International deliveries*
*Terms apply. See online for details

**POOJA**
SWEETS & SAVOURIES

*The Taste That You Will Love, The Quality That You Can Trust*

TOOTING: T: 020 8672 4523 | F: 020 8767 5229
168-170 UPPER TOOTING ROAD, LONDON, SW17 7ER
info@poojasweets.com

KINGSBURY: T: 020 8206 2206 | F: 020 86215748
487 KINGSBURY ROAD, LONDON, NW9 9ED
kingsbury@poojasweets.com

# தெளிவாகச் சிந்திக்கும் பெருந்தேசிய இனவாதம்



இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியின் விஜயத்தின்பின்னர், இலங்கை அரசியலில் மாற்றங்கள் நிகழ்வது போன்றதொரு தோற்றப்பாடு கட்டமைப்படுகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

உண்மையிலேயே சீன சார்பு அணி, மேற்குலக சார்பு அணி, இந்திய சார்பு அணி எல்லாமே, ஆட்சி அதிகார மோதலுக்கு இலங்கை அரசியல் களத்தில் பயன்படுத்தப்படும் இராஜதந்திரச் சொல்லாடல்கள் போலிருக்கிறது.

இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் வரலாற்றினை ஆய்வு செய்யும் முயற்சியில் சில சிந்தனை மையங்கள் ஈடுபடுகின்றன என்கிற செய்தி வருகிறது. மாக்கியவல்லியின் சிந்தனையிலிருந்து அவை கட்டமைப்படுகின்றன என்பதான வியாக்கியானங்களை பொதுப்படையாக முன்வைத்தாலும், மகாவம்சக் கருத்துருவமே சிங்களத்தின் அரச கட்டுமான அடிநாதமாகவும், உள் -வெளி உறவுக் கொள்கைகளைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் இருப்பது நிஜமானது.

கொல்வின்.ஆர்.டி.சில்வாவின் அரசியலமைப்புச் சட்டமும், சிங்களத்தின் பரிபூரண இறைமையை வலுவூட்ட ஜே.ஆர்.ஜயவர்தனா மேற்கொண்ட திருத்தங்களும், மகாவம்ச கருத்துருவத்திலிருந்தே எழுதப்பட்டன.

2010 ஆம் ஆண்டு களுத்துறை மாவட்ட எம்.பியாகப் பதவியேற்று, மைத்திரி-இரணில் ஆட்சியில் உதவி வெளியுறவு அமைச்சராக இருக்கும் யு.என்.பி உறுப்பினர் அஜித்.பி. பெரேரா அவர்கள், 'மோடி வரலாம்..போகலாம். ஆனால் 13 வது திருத்தச் சட்டம் பற்றி பேசக் கூடாது' என்பதும், 'எல்லை தாண்டும் மீனவர்கள் சுடப்படுவார்கள்' என்று, தனது கருத்தினை இரண்டாவது தடவை ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா வலியுறுத்துவதும், புதிய ஆட்சிப் பங்காளிகளின் வெளியுறவுக் கொள்கையை வெளிப்படுத்துகிறதா? அல்லது 'தேர்தல்' அரசியலைக் காட்டுகிறதா ? என்று பார்த்தால், இது வாக்கு வங்கி அரசியலின் மலினமான கருத்துக்கூறல் என்கிற முடிவுற்கு மட்டுமே வரலாம்.

அண்மைக்காலமாக இரணில் விக்கிரமசிங்க கூறும் கருத்துக்கள் யாவும், பெருந் தேசியவாத நிலைப்பாட்டில் அவர் உறுதியாக இருப்பதைக் காட்டுவதாக பலரும் விமர்சிக்கிறார்கள்.

மகாவம்ச சிங்களத்தின் ஆழ்மனத்தில் பதிந்துள்ள ஓர் இன இறைமைக் கோட்பாட்டினை அரவணைத்துச் செல்லாமல் 75 சதவீத மக்களின் வாக்குகளை பெறுவது கடினம் என்பது, 67 வருட காலமாக அரசியலில் நீந்திக்கொண்டிருக்கும் ஐ.தே.கட்சி மீன்களுக்குப் புரியும்.

அதுமட்டுமல்ல, சனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றாலும், தொகுதிவாரியாக பல இடங்களில் வெற்றி பெற்ற மகிந்த குழுமமும் பெருந்தேசிய இனவாதத்தையே பேசும் என்கிற 'உள்குத்து' அரசியல் தெரியாமல், தென்னிலங்கை அரசியலில் எவரும் பிழைக்க முடியாது என்பது விதியாகிவிட்டது.

ஆகவே தேர்தல் நெருங்க, இன்னும் பல 13 கதைகள் வெளிவரும்.

தனது ஆட்சியைக் கவிழ்க்க இந்திய 'றோ'வும், மேற்கு நாட்டு உளவு நிறுவனங்களும் செயற்பட்டுள்ளன என்கிற 'பாரிய' இராஜதந்திர முக்கியத்துவமிக்க குற்றச் சாட்டினை மகிந்தாவும் கோத்தாவும் முன் வைக்கும் அதே வேளை, 'தாங்களும் அதற்குச் சளைத்தவர்களல்ல' என்கிறவகையில் 13 மற்றும் மீனவர் சூட்டுக் கதைகளை யு.என்.பியும் தன் பங்கிற்கு ஊடகங்களில் அவிழ்த்து விடுகிறது.

ஆசியாவில் தனக்குச் சார்பான மீள் சமநிலையை (Rebalancing) உருவாக்க, 'சீன' எதிரியை அமெரிக்கா பயன்படுத்த முற்படுவது போன்று, உள்நாட்டில் தத்தமது அரசியல் ஆதிக்கத்தை நிலைநிறுத்த 'இந்திய' எதிரியை மகிந்தரும், இரணிலும் தேர்தலுக்கு ஏற்றால் போல் பயன்படுத்துவது தெரிகிறது.

மகாவம்ச அரசியல் கோட்பாட்டில் நிலைத்து நிற்கும் ஒரு நாட்டில், மோதும் இரு தரப்பும் 'இந்தியா' குறித்து ஒரே விதமான பார்வையையே வெளிப்படுத்தும்.

தமிழர் அரசியல் குறித்து இந்தியா பேசினால், அதனை அந்த நாட்டிற்கு எதிராகப் பேசுவதற்குப் பொருத்தமான ஆயுதமாக பேரினவாதச் சக்திகள் இனம் கண்டு கொள்கின்றன.

ஏனெனில் இலங்கை தேர்தல் அரசியலை வெளியுறவுக் கொள்கை தீர்மானிப்பதில்லை.

ஆனால் பூகோள அரசியல் நகர்வுகள், இலங்கை போன்ற சிறிய நாடுகளில் அதன் அதிகார மையத்தில் எவர் அமர வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும்.

இந்து சமுத்திரப் பிராந்திய கடலாதிக்கப் போட்டியில், இலங்கையின் தரையமைப்பும், அதன் துறைமுகங்களும் உணர்திறன்மிக்க மையங்களாக இருப்பதால், இக்கடல் பாதை ஊடாக வணிகப்பயணம் மேற்கொள்ளும் சகல வல்லாளர்களும் இலங்கை தமது நட்பு நாடாக இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பார்கள்.

இங்கு சீனாவின் பக்கம் 45 பாகைக்கு குறைவாக மகிந்த அரசு சாய்ந்ததாலேயே, இந்நட்பு நாட்டில் எவர் ஆட்சிக்கட்டிலில் அமர வேண்டும் என்பதனை ஏனைய 'நட்பு' வல்லாளர்கள் தீர்மானிக்க வேண்டிய துன்பியல் சம்பவம் நிகழ்ந்தது.

இப்போது, 'றோ' வால் தோற்கடிக்கப்பட்டேன் என்று மகிந்தர் புலம்புவதன் மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**அரசியல் பார்வை**

**இதயச்சந்திரன்**

அரசியலில் அனாதையாவதைத் தவிர்த்துக் கொள்ள விரும்பினால், வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மைத்திரியைத் தலைவராகக் கொண்ட ஸ்ரீ.ல.சு.கட்சிக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டுமென்கிற எச்சரிக்கை கலந்த அறிவுரையை மகிந்தரிடம் மோடி கூறியிருக்க வேண்டுமென சில அரசியல் நோக்கர்கள் கணிப்பிடுகின்றார்கள்.

யு.என்.பி மற்றும் ஜே.வி.பி.யின் உசுப்பல் கதைகளால் மகிந்தர் தட்டுத் தடுமாறி தனித்துப் போட்டியிட்டால், ரணில் அணி வெற்றி பெறும் வாய்ப்பு அதிகரிக்கும். மைத்திரி- மகிந்த அணியின் மீள் இணைவிற்குரிய கால அவகாசத்தைக் கொடுக்காமல் உடனடியாகத் தேர்தலை நடாத்தி முடித்து விட வேண்டும் என்பதே ரணிலின் தந்திரோபாயம்.

ஏனெனில் ' தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டுவருவது குறித்து பிறகு பார்ப்போம்' , 'தேசிய அரசாங்கம் அமைப்போம்' என்பன போன்ற யு.என்.பியின் கதையாடல்கள் எல்லாம், இந்தச் சூத்திரத்தினுள் அடங்கும்.

தாம் ஆட்சிக்கு வர அல்லது ஆட்சியில் நிலைத்து நிற்பதற்கு, சீன தேசம் ஆதரித்தால் சீனசார்பு, அமெரிக்கா ஆதரவளித்தால் அமெரிக்க சார்பு என்கிற 'சுயசார்பு' வெளியுறவுக் கொள்கையை (அப்படி ஒன்றுமில்லை) வைத்திருக்கும்-இலங்கையை மாறி மாறி ஆண்டு கொண்டிருக்கும் பெரிய கட்சிகளுக்கு, 'பதவிகளே அதிகாரத்தின் திறவுகோல்' என்கிறமந்திரத்தைத் தவிர வேறென்ன கோட்பாடு இருக்க முடியும்?

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டது 'இன அழிப்பு' என்று தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றினால் சிங்களத்தைப் பொறுத்தமட்டில் அது இனவாதம். சர்வதேச வல்லரசுகளுக்கு அது சங்கடத்தை ஏற்படுத்தும் தீர்மானம்.

தமது நட்பு நாடான இலங்கையை 'இன அழிப்பில் ஈடுபட்ட நாடு' என்று விளிப்பதை விரும்பாத சர்வ தேசம்(?), ஆட்சி மாற்றத்தில் அக்கறை கொள்ளும். அத்தோடு அறிக்கைகளைத் தள்ளிப்போடும்.

> **எது எப்படி இருப்பினும், வடகிழக்கில் வாழும் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமென்றும், அத்தோடு ஒரு இறைமையுள்ள 'தேசம்' (Nation) என்பதன் அடிப்படையில் அவர்களின் பிரச்சினையை அணுக வேண்டும் என்று முதலமைச்சர் விக்கினேஸ்வரன் அவர்கள் கூறுவது மோடிக்கு புரியாவிட்டாலும், கொள்கை வகுக்கும் டெல்லி தெற்கு வளாகத்திற்கு தெளிவாக விளங்கும்.**

இவைதவிர இவ்வார ஜெனீவா களத்தினை நோக்கினால், 'மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக, வெளியிடவிருந்த அறிக்கையை செப்டெம்பர் வரை ஒத்திவைத்துள்ளோம்' என்று மனித உரிமைப் பேரவை சாட்டுச் சொல்லும் போது, அதற்கொரு பூகோள அரசியல் பரிமாணம் உள்ளதென்கிற கலாநிதி.மோங் சார்னி அவர்களின் கருத்து, ஜெனீவ ஊடக மையத்தில் நிகழ்ந்த ஊடகர் சந்திப்பில் வெளிப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. நாம் நீண்டகாலமாக எழுதும் விடயம் அனைத்துலக ஊடக அரங்கிலும் பேசப்பட்டுள்ளது.

ஆட்சி மாற்றத்திற்கான காரணிகளும் அறிக்கையை ஒத்திவைத்த பின்னணியும், ஆசிய 'மீள்சமநிலை' உருவாக்கிகளின் கை வண்ணத்தில் வரையப்பட்ட பூகோள அரசியல் ஓவியங்கள் என்பது, பிறீமன் நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தில் நீதி உரைத்த மோங் சார்னியின் தெளிவான பார்வை.

அறிக்கையை வெளியிடாமல் இழுத்தடிப்பது, வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் புதிய ஆட்சியாளர்களை அரசியல் ரீதியாக வலுப்படுத்தும் என்பதை மேற்குலகமும், இந்தியாவும் புரிந்து கொள்கிறது.

(தொடர்ச்சி 28ம் பக்கம்)



# பாடசாலை நீர்த்தாங்கியில் நஞ்சு கலப்பு



யாழ் குடாவின் வலிகாமம் தெற்குப் பகுதியின் 'ஏழாலை' என்னும் கிராமத்தின் 'மயிலன்காடு' என்ற குறுச்சியில் அமைந்துள்ள 'ஸ்ரீ முருகன் வித்தியாசாலை'யின் தண்ணீர் தாங்கியினுள் விசம் கலந்ததாகக் கூறப்படும் சம்பவம் ஆனது, தமிழரின் அரசியலில் மிக முக்கிய இடத்தை இன்று பெற்றுள்ளது. இந்த விடயமானது, இலங்கையின் இன்றைய அரசியல் நிலையிலும், தமிழரின் அரசியலிலும், ஒரு சாராரின் பொருளாதார இலாபங்களிலும் மிகவும் முக்கியமானவொரு விடயம் ஆகும். இந்தச் சம்பவம் தொடர்பாகச் செய்திகள் வெளிவந்தவுடன், இலங்கைத் தமிழரின் இணையத்தளங்களில் மாத்திரமல்லாது, தமிழக இணையத்தளங்களிலும், முகநூல்களிலும் பல்வேறுபட்ட கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டு, வாதங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. இவைகள் அனைத்தும் தமிழரின் அரசியலையே நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒரு சாரார், இந்தச் சம்பவத்தை 'சாதி' பிரிவினையுடன் இணைத்துப் பிரசாரங்களை மேற்கொள்கின்றனர்.

மற்றொரு சாரார், இது அரசியல் இலாபங்கள் கருதிச் செய்யப்பட்டுள்ள ஒரு சதி நடவடிக்கை என்கின்றனர்.

ஒரு சாரார் இது தண்ணீர் போத்தல் வியாபாரத்தை அதிகரிக்கச் செய்துள்ள திட்டமிட்ட செயல் என்கின்றனர். இந்த நிலையில், உண்மையில் என்ன நடை பெற்றுள்ளது என்பதைச் சரியாக அறிவது முதல் முக்கியமாகிறது. ஆகவே இது தொடர்பாக பின்வருவன ஆராய்ந்து அறியப்பட வேண்டும்.

1) நீரைப் பருகியதாகக் கூறப்படும் மாணவர்கள் எப்படியான பாதிப்புக்களுக்கு உள்ளாகிய நிலையில், தாங்கி நீரில் ஏதோ கலக்கப்பட்டது என்ற முடிவுக்கு அப்பாடசாலையின் ஆசிரியர்கள் வந்தனர்? அல்லது ஒருவித ஊக அடிப்படையிலா மாணவர்கள் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்?

2) நீர் தாங்கியில் 'விசம்' உண்மையில் கலக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசோதித்து அறிய வேண்டும். குறிப்பாக என்ன விசம் கலக்கப்பட்டுள்ளது என்பது ஆராய்ந்து அறியப்பட வேண்டும். இதை யாழ்ப்பாணப் போதனா சாலை செய்துள்ளதா? செய்திருந்தால் கலக்கப்பட்ட விசம் என்ன?

3) தாங்கி நீரில் கலந்ததாக அறியப்பட்ட விசமும், தாங்கியினுள் கண்டெடுக்கப்பட்ட போத்தலில் உள்ள விசமும் ஒன்றா, அல்லது வேறா என்பது ஆராயப்படவேண்டும். இதை யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையினர் ஆராய்ந்து அறிந்துள்ளனரா ?

4) விசப்போத்திலை எவர்கள் தாங்கியில் போட்டனர் என்பதை பொலீசார் ஆராய்ந்து அறிய வேண்டும்.

5) இதன் பின்னணி உண்மையில் என்ன என்பதைச் சரியாக அறியவேண்டும்.

இவைகளைச் சரியாக அறியாது முற்கூட்டியே காரணங்களைக் கூறுகின்றவர்கள் அரசியல் நோக்கில் பொய் கூறுகின்றனர் என்பதுதான் உண்மையாக இருக்கும்.

ஆனால், இந்தக் கேள்விகளைப் பொறுத்த மட்டில், இதுவரை முழுமையான, ஆதாரபூர்வமாக விடயங்கள் இன்னும் அறியப்படவில்லை என்பதுதான் உண்மை.

முதலாவது கேள்வியைப் பொறுத்தமட்டில், தாங்கித் தண்ணீரைக் குடித்த மாணவர்கள் தண்ணிரில் ஒருவித மணம் வருவதாகக் கூறிய நிலையில், ஏனைய மாணவர்களை தாங்கி நீரைக் குடிக்கவேண்டாம் எனக் கட்டளையிட்டு, ஏற்கனவே தண்ணீரைக் குடித்த மாணவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றதாகக் கூறப்பட்டது. மேலும் தாங்கி நீரின் மாதிரியையும் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர் என்றும் கூறப்படுகிறது.

ஆனால், அந்தப் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் எவற்றைப் பொலீசாருக்குக் கூறியுள்ளனர் என்பது சரியாகத் தெரியவில்லை. பொலீசார் இரண்டு போத்தல்களைத் தாங்கியினுள் இருந்து எடுத்துள்ளதாகக் கூறுகின்றனர். அந்தப் போத்தில்கள் என்ன இரசாயனப் பொருளை கொண்டிருந்த போத்தல்கள் என்பது அவற்றின் லேபல்கள் ஊடாக அறியப்பட வேண்டும். இது தொடர்பான விபரங்களைப் பொலீசாரின் அறிக்கையிலிருந்துதான் பெற வேண்டியுள்ளது. எதுவிதத்திலும், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சிறீ பவானந்தராஜா இலங்கை தொலைக் காட்சிகளுக்குக் கொடுத்துள்ள செவ்வியில், அந்தப் பாடசாலை நீர்த்தாங்கியின் மாதிரி நீரில் "Organo Phosphate" (OP) என்ற இரசாயனப் பொருள் கலந்திருப்பதாகக் கூறியுள்ளார்.

எதுவிதத்திலும், மாதிரித் தண்ணீரில் இந்த இராசாயனப் பொருள் கலக்கப்பட்டதை எப்படி போதனா வைத்தியசாலையினர் பரிசோதித்து அறிந்தனர் என்பது பற்றிய தகவல்கள் சரியாகத் தெரியவில்லை.

இது நீர்த் தாங்கியில் கண்டெடுக்கப்பட்ட இரண்டு போத்தல்களினதும் லேபல்களில் எழுதப்பட்டிருப்பவையின் அடிப்படையில் வரப்பட்ட முடிவா, அல்லது பரிசோதனையின் அடிப்படையில் வரப்பட்ட முடிவா என்பதும் தெரியவில்லை. யாழ் போனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கூறியதின் அடிப்படையில், கலக்கப்பட்ட விசமானது "Ogano Phosphate" (OP) ஆகும். ஆனால், பொலீசார் ஒருவர் கையில் காவும் போத்தலின் லேபலைப் பார்த்தோமேயானால், அதல் "Mitsu Abamectin I.8EC" என எழுதப்பட்டுள்ளது. இந்தநிலையில், பாடசாலை தண்ணீர் தாங்கியினுள் Abamectin I.8%EC போத்தலைப் போட்டவர்கள் பெரும்பாலும் விடயங்களை நன்கு அறிந்து போட்டவர்களாக இருக்கவும் சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன. ஆகவே, அவர்கள் மாணவர்களை உடனடியாகக் கொல்லும் நோக்கில் இதைச் செய்தவர்களாகப் பெரும்பாலும் இருக்கச் சந்தர்ப்பங்கள் குறைவு. ஆனால், தண்ணீரில் கழிவு எண்ணெய்களைக் கலக்கவிடுவதுபோல் நீண்டகாலத்தில் பாதிப்புக்களை உருவாக்கும் நோக்கத்தினைத்தான் கொண்டிருக்கமுடியும்.

மற்றைய புறத்தில், இந்தப் பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்கள் மிகமிகப் பெருமளவில் ஒரு குறிப்பிட்ட 'ஜாதி'யினராகவே உள்ளனர். இவைகள் இணையும்போது, இந்தக் காரியத்தில் ஈடுபட்டவர்கள் ஒரே எறியில் பல மாங்காய்களை வீழ்த்தும் நோக்கத்தினைக் கொண்டவர்களாகத்தான் இருக்கவேண்டும்.

ஆகவே, இந்தக் காரியத்தில் ஈடுபட்டுவர்களை பொலீசார் தேடிக் கண்டுபிடிக்காவிடின், யாழ் குடாவில் நடைபெற்றுவந்த கொலைகள், ஏனையவைகள்போல், கிறீஸ் பூதம் போன்று ஒருவித பீதியானது யாழ் குடாவில் தொடரவும், பல்வேறு ஊகங்கள், வதந்திகள் எப்பொழுதும் பரவவும், ஒருவித மன அழுத்தத்துடன் மக்கள் வாழவும் வழி வகைகளைச் செய்யும் நிலையும் தான் தொடரும். இது வலிகாமம் மக்களை போத்தல் நீரைப் பயன்படுத்தவும் தள்ளச் சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன. எதுவித்திலும், இவைகளைச் செய்பவர்கள் போத்தல் நீரிலும், ஏனையவைகளிலும் எவைகளைச் செய்யமுடியாது என்ற கேள்வியும் இங்கு எழுப்பப்பட வேண்டியுள்ளது! இப்படியான விடயங்கள் பற்றி குறுகிய நோக்கங்களில் அணுகாது, தமிழர்கள் விடயங்களை ஆராய்ந்து, திட்டமிட்ட விதத்தில் செயற்படவேண்டியுள்ளது. எமது நாட்டின் அரசியல் நிலை இதைத்தான் எமக்கு வலியுறுத்துகிறது!

சித்தாவத்தை உதயகுமார்






# மேற்குலகையும் இந்தியாவையும் கையாளும் சிங்களத் தந்திரம்



**ச.பா.நிர்மானுசன்**

ஐம்பது நாளை கடந்துள்ள சிறீலங்காவின் புதிய அரசாங்கம், தமிழர்கள் தொடர்பாக கட்டுக்குள் வைத்திருக்கும் உபாயத்தையும், சர்வதேச சமூகத்தை நோக்கி வளைத்துப் போடும் உபாயத்தையும் கைக்கொள்கிறது. தம்வசம் வைத்திருக்கும் உபாயத்தின் அங்கமாக தற்போது இரு நகர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்பாடுகள் முடுக்கி விட்டுள்ளது.

இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை வளைத்துப் போடும் முகமாக, சீனாவின் நிதி உதவியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் போர்ட் சிற்றி திட்டத்தை இடைநிறுத்துவதற்கு சிறீலங்காவின் அமைச்சரவை தீர்மானித்துள்ளது. அத்துடன், இந்தியா பயன்படுத்துகின்ற தமிழர் அரசியல் துருப்புச் சீட்டை கையாளும் முகமாக, மோடி அவர்கள் வடகிழக்குப் பகுதிக்கு செல்வதற்கு முன்னர் அவசர அவசரமாக சிறீலங்காவின் சனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்கள் வடகிழக்குப் பகுதிக்கான விஜயம் ஒன்றை இம்மாதம் முதல்வாரத்தில் மேற்கொண்டிருந்தார்.

இதனூடாக மீள்நல்லிணக்கத்திற்கும் அதிகார பரவலாக்கத்திற்குமான நகர்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஒரு மாயை தோற்றுவிக்கப்படுகிறது. மறுபுறம், ஜெனிவாவில் ஆரம்பித்துள்ள 28 ஆவது மனித உரிமைகள் கூட்டத்தொடரில் சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்தும் நோக்கோடு மிகக் கவனமாக எழுதப்பட்ட உரையை சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அவர்கள் ஆற்றினார். இலங்கைத் தீவில் சனநாயகம் மீளத் திரும்புகிறது, நல்லாட்சி நடைபெறுகிறது, மனித உரிமை பேணிப் பாதுகாக்கப்படுகிறது என்று ஜெனிவாவில் மங்கள சமரவீர அவர்கள் கூறிக்கொண்டிருந்த காலப்பகுதியிலேயே பிரெஞ்சு பிராசா உரிமையை கொண்ட எட்டு வயதுடைய தமிழ்ச் சிறுமியும் அவரது தாயாரும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து பயங்கரவாத விசாரணை திணைக்களத்தால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தமிழர் தாயகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் தமிழ் ஊடகவியலாளர்கள் தம்மீதான இராணுவ புலனாய்வு துறையின் கண்காணிப்பு தொடர்வதோடு அச்சுறுத்தல் விடுக்கும் சம்பவங்களும் தொடர்வதாக தெரிவித்துள்ளனர். தமிழ் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களுக்கு எதிரான உயிர் அச்சுறுத்தல் விடும் சம்பவங்களும் தொடர்வதை அறியமுடிகிறது.

இத்தனைக்கும் மத்தியில் சர்வதேச சமூகத்தின் மனச்சாட்சியை உறுத்தும்படி தமிழர் தாயகத்தில் நீதிக்கான போராட்டங்கள் தொடர்கிறது. சிறீலங்காவில் சனநாயகம், மனித உரிமை என்று மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் குரல் எழுப்பிய கொழும்பை மையமாகக் கொண்ட அரச சார்பற்ற நிறுவனங்களை சார்ந்தோரும், சிவில் சமூகத்தினரும் தமிழர்களின் நீதிக்கான குரலுக்கு தமது உறுதியான ஆதரவை வழங்காதது மட்டுமன்றி சில தருணங்களில் தமிழர்களின் நீதிக்கான நகர்வுகளை கடுமையாக விமர்சிக்கும் சூழல் தீவிரம் பெற்றுள்ளது.

இத்தகைய சூழலில், அண்மையில் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்த ஐ.நா பொதுச் செயலாளரின் அரசியல் விவகாரங்களுக்கான உயர்மட்ட அதிகாரியான ஜெப்ரி பெல்ட்மன் அவர்கள், வடக்கு மாகாண சபையில் இம்மாதம் பெப்ரவரி 10ம் திகதி நிறைவேற்றப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் மிக்க 'தமிழர்களுக்கு எதிரான சிறீலங்காவின் இன அழிப்பு' தீர்மானத்தின் பிரதியொன்றை பெற்றுக்கொண்டதோடு, தமிழர்களுக்கு உரித்தான நிலங்கள், தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழர்கள் மற்றும் காணமல் போன தமிழர்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை சிறீலங்கா அரசாங்கத்துக்கு எடுத்துக்கூறியுள்ளார். அத்துடன், தமிழ் சிங்கள சமுதாயங்களுக்கிடையில் நம்பிக்கையீனம் அதிகரித்து காணப்படுவதையம் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழ் மக்கள் தமது நீதிக்காகவும் உரிமைகளுக்காகவும் தாமகவே போராடி ஒரு அழுத்தசக்தியாக உருமாற முயலும் வேளையில், ஐ.நா மனித உரிமைகள் போரவையின் 28வது கூட்டத்தொடரில், உயர்மட்டப் பிரதிநிதிகளின் மத்தியில் உரை ஆற்றிய அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி அவர்கள் அழுத்தங்களின் மூலம் உருவாகும் மாற்றங்களால் உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளவதோடு சுதந்திரத்தையும் விரிவுபடுத்தமுடியும் என தெரிவித்துள்ளார்.

இந்தஇருவிடயங்களுக்களுக்கிடையில்நேரடித் தொடர்பு இல்லாத போதும், தமிழ் மக்களின் அழுத்தத்தை உண்டுபண்ணக் கூடிய அண்மைக்கால அறவழிப் போராட்டங்கள் சர்வதேச சமூகத்தின் கரிசனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இது குறைந்தபட்ச அழுத்தத்தை தன்னிலும் சிறீலங்கா அரசாங்கத்தின் மீது உண்டு பண்ணியுள்ளது.

அதனடிப்படையிலேயே, கடந்த கால தோல்விகள் மீண்டும் ஏற்பாடதிருக்கும் முகமாக, பொருத்தமான பொறிமுறையை உருவாக்குவதற்காக மக்களுடன் குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்தாலோசிக்குமாறு சிறீலங்கா அரசாங்கத்தை வேண்டியுள்ளார் ஐ.நா.மனித உரிமைகள் பேரவை ஆணையாளர். பாதிக்கப்பட்ட மக்களின் மனத்தாங்கல்களையோ அபிலாசைகளையோ சிறீலங்கா அரசாங்கமோ அவர்களினால் உருவாக்கப்படப் போகும் பொறிமுறையோ உள்வாங்கப் போவதில்லை என்பது கடந்த கால வரலாறு ஊடாக கற்றுக் கொண்ட பாடம். ஆயினும், இது இலங்கைத் தீவு தொடர்பான சர்வதேச சமூகத்தின் நிகழ்ச்சி நிரலில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இன்னும் ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக இருப்பதை வெளிப்படுத்திதுகிறது. இந்த சூழலை அதிகரிப்பதனூடாக தமிழ் மக்களுக்கான உரிமைக்கும் நீதிக்குமான போராட்டத்தில் முன்னகர முடியும்.

சிறீலங்காவின் சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் இருக்கிறது. தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்கவேண்டுமென்ற நேர்மையும் அர்ப்பணிப்பும் அவர்களிடம் இல்லை என்பதை கடந்த ஐம்பது நாட்களில் தமிழ் மக்களின் நலன்களுக்கு எதிராக அவர்கள் திரைமறைவில் மேற்கொள்ளும் நகர்வுகள் எடுத்துக்காட்டுகிறது. காலம் அவகாசம் கோரி உள்நாட்டு பொறிமுறை மூலம் நீதி கிடைக்கும் என்ற ஒரு பிம்பத்தை உலகின் மத்தியில் உருவாக்கி காலப் போக்கில் தமிழர்களுக்கான நீதியை இல்லாமல் செய்வதற்கான நகர்வுகளே சிறீலங்கா அரசாங்கத்தால் கனகச்சிதமாக மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இந்த அடிப்படையிலேயே தென்னாபிரிக்காவின் உண்மைக்கும் மீள்நல்லிணகத்திற்குமா ஆணைக்குழு மாதிரியை இலங்கைத் தீவிலும் உருவாக்குவதற்கு சிறீலங்கா அரசாங்கம் முயல்கிறது.

சிறீலங்கா அரசாங்கத்தின் செல்வாக்குக்கு உட்பட்ட எந்தப் பொறிமுறையும் தமிழர்களுக்கு நீதியை வழங்கப் போவதில்லை. உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரிக்க வேண்டிய எமது மக்கள், உள்நாட்டு பொறிமுறையும் வெளியக பொறிமுறையையும் ஒன்றாகக் கொண்ட கலப்பு மாதிரிகள் (Hybrid model) தொடர்பாக மிக கவனமாக இருக்க வேண்டும். போர்க் குற்றம் இனஅழிப்பு தொடர்பாக விசாரித்து நீதி வழங்குவதற்காக சர்வதேச ரீதியில் முதன்மையான ஆறு கலப்பு மாதிரி நீதிமன்றங்கள் "தீர்ப்பாயங்கள் செயற்படுகின்றன. இவற்றில் கிழக்கு தீமோர் மற்றும் கொசொவோவுடன் தொடர்புடைய கலப்பு மாதிரி நீதிமன்றங்கள் ஐ.நாவால் உருவாக்கப்பட்டு முகாமைத்துவப் படுத்தப்படுபவை. கம்போடியா (The Extraordinary Chambers in the Courts of Cambodia-ECCC) மற்றும் சியரலியோனுடன் தொடர்புடைய நீதிமன்றங்கள் ஐ.நாவுக்கும் குறித்த இறைமையுடைய நாடுகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் பெறுபேறால் உருவாக்கப்பட்டவை. இதில் ஒன்றான கம்போடிய சிறப்பு நீதிமன்ற மாதிரி இலங்கைத் தீவில் அண்மையில் பேசுபொருளாக மாறியுள்ளது. ஆயினும் இது தமிழ் மக்களுக்கு உரித்தான நீதியை வழங்கப் போதுமானதா என்ற பலமான கேள்வி உள்ளது. ஏனெனில், சாதாரணமாகவே, சிறீலங்கா அரசாங்கம் காலத்தை இழுத்தடிப்பதில் சாணக்கியமுடையது. உறுதியான அழுத்தங்கள் இல்லாததால் கம்போடிய நீதிமன்றம் இனஅழிப்பு இடம்பெற்று இருபத்தேழு வருடங்களுக்கு பின்னரே தோற்றுவிக்கப்பட்டது. கம்போடியவில் இடம்பெற்ற இனஅழிப்பு தொடர்பாக விசாரித்து நீதி வழங்கும் முகமாக நீதிமன்றத்தை உருவாக்குவதற்காக ஐ.நாவுக்கும் கம்போடிய அரசாங்கத்துக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை சுமார் எட்டு வருடங்கள் நீடித்தது.

ஆனால், உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களும், குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களும் தங்களை பிரபலப்படுத்தாத சில சிங்கள ஊடகவியலாளர்களும் அர்ப்பணிப்புடனும் நேர்த்தியான திட்டமிடலுடனும் செயற்பட்டதால் சர்வதேச சமூகத்துக்கு அழுத்தத்தை வழங்க முடிந்தது. இதன் பயனாக போர் முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்ட சுமார் மூன்று மாதத்திலேயே இலங்கைத் தீவில் இடம்பெற்றது போர்க்குற்றம், மானுட குலத்திற்கு எதிரான குற்றம் என்ற அடிப்படையில் கருத்தாடல்கள் மேலெழுந்ததோடு அது ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் மூன்று தீர்மானங்கள் இலங்கைத் தீவு தொடர்பாக நிறைவேற்றப்படுவதற்கும் தூபமிட்டது.

மேற்குலகத்துக்கு பிடிக்காததாக ராஜபக்சக்களின் ஆட்சி சிறீலங்காவில் இருந்தமை மட்டுமல்ல, தமக்கான நீதியை பெற்றுக்கொள்வதற்காக தாமே போராடி, அதனூடாக அழுத்தங்களை தமிழர்கள் உருவாக்கினார்கள். அது ஏனைய நாடுகளின் நீதி தேடும் நடவடிக்கைகளோடு ஒப்பிடுமிடத்து, தமிழருக்கான நீதி விவகாரத்தை சர்வதேச மனித உரிமைகள் சமூகத்துக்கு மத்தியில் விரைவாக மையப்படுத்தியமைக்கு காரணமாகியது.

புதிய அரசாங்கம் ஆட்சியமைத்தொடு, தமிழருக்கான நீதி நீர்த்துப் போவதற்கான சாத்தியப்பாடுகள் தோன்றியுள்ளது. ஆகவே, தாயகத்திலும் உலகெங்கிலும் பரந்து வாழும் தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்துக்கு அழுத்தங்களை உண்டுபண்ணும் முகமாக வரலாற்றில் என்றுமில்லாதவாறு அறவழிப் போராட்டங்களை தொடர்ச்சியாகவும் நேர்த்தியாகவும் பரவலாகவும் முன்னெடுக்க வேண்டும். தமிழர்களுடைய வாக்குகள் சிறீலங்காவில் ஆட்சி மாற்றத்தை உண்டுபண்ணியது. இனி அழுத்தங்களை உருவாக்கவல்ல தமிழர்களுடைய அறவழிப் போராட்டங்களே அவர்களுக்கான நீதியை பெற்றுக்கொள்ள பக்கத்துணையாக இருக்கும்.

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

**Expert in Criminal Defence Services.**
24 Hour Police Station Attendance
Magistrates' & Crown Court Representation

**Contractual Disputes**
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

**Immigration Law Specialists**
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction

**Civil Litigation**

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter

அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்

Criminal Defence Service
Community Legal Service
The Law Society Accredited Immigration & Asylum

RAJ LAW SOLICITORS
169, Tooting High Street, London, SW17 0SY Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk
Emergency
079 4764 1876
079 1225 3418

# இந்தியாவின் நக்சலைட்டுக்கள் விலை போவார்களா ?



**வேல் தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

இந்தியாவில் நக்சலைட் என்னும் பெயரில் செயற்படும் மாவோவிசவாதிகள் அரசிடம் சரணடையுமிடத்து அவர்களுக்கு வேலை வாய்ப்பும் ஒரு கோடி ரூபா பணமும் வழங்கப் படும் என இந்திய அரசு அறிவித்துள்ளது.

### ◆ இந்தியாவின் சிவந்த கிழக்குக் கரை

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் நக்சல்பாரி என்னும் கிராமத்தில் உருவானதால் இந்த அமைப்பு நக்சலைட் என அழைக்கபடு கின்றது. 1967-ம் ஆண்டு இந்திய மார்க்சியப் பொதுவுடமைக் கட்சி பிளவு பட்ட போது நக் சலைட் அமைப்பு உருவாக்கப்பட்டது பின்னர் இது இந்தியாவின் வறிய மக்கள் வாழும் பிராந்தி யங்களில் பிரபலமாகி தனது செயற்பாட்டை இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியில் விரிவாக்கிக் கொண்டது. இந்தி யாவின் 22 மாநிலங்களில் உள்ள 220 மாவட்டங் களில் நக்சலைட் அமைப்பின் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. கர்நாடகா, சட்டிஸ்க்கர், ஒடிசா, ஆந்திரப்பிரதேசம், மஹாராஸ்ட்ரம். ஜகார் கண்ட், பிகார், உத்தரப்பிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் பெரும் நிலப்பரப்பை நக்சலைட் அமைப்பு தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றது. இதில் எழுபதினாயிரத் திற்கு மேற்பட்ட போராளிகள் இருக்கலாம் என மதிப்பிடபப்ட்டுள்ளது. நக்சலைட்டின் செயற் பாடுகள் பெருமாலும் இந்தியாவின் கிழக்கு கரையில் சீனாவிற்கு அண்மையாக உள்ள பிராந்தியங்களிலேயே இருக்கின்றது. இதனால் நக்சலைட் என்பது இந்தியாவிற்குள் இருக்கும் சீனப் படையா எனக் கேள்வி எழுப்புவோரும் உண்டு. ஆனால் உண்மையான நக்சலைட் இயக்கம் என்பது பழங்குடிமக்கள் தங்களது நிலங்கள் பறிபோவதைத் தடுக்க உருவாக்கிய போராட்ட அமைப்பு மட்டுமே அதற்கும் பொதுவு டமை வாதத்திற்கும் எந்த வித தொடர்பும் இருந்திருக்கவில்லை. நாளடைவில் பொதுவுட மைவாதிகள் இவர்கள் மத்தியில் மாவோவின் கொள்கைகளைப் பரப்பினர் எனவும் கருத்துக் கள் முன்வைக்கப்படுகின்றன. மக்களுக்கு நகச லைட்டுக்கள் மீது வெறுப்பு வருவதற்காக மாவோயிஸ்ட்டுக்கள் என விபரிக்கப்படுகின்றார்கள்.

### ◆ முற்போக்காளர்களின் ஆதரவு

தெலுங்கானாப் பிரதேசத்தில் மூவாயிரத் துக்கு மேற்பட்ட கிராமங்களில் ஏழைத் தொழி லாளர்கள் சொந்த நிலமின்றி பல நில உரிமை யாளர்களுக்கு கொத்தடிமைகளாக வாழ்ந்து வந்தார்கள். 1946-ம் ஆண்டு அங்கு உருவான பொதுவுடமைப் போராட்டத்தால பத்தாயிரம் ஏக்கர் நிலம் ஏழை மக்களுக்குப் பகிர்ந்தளிக் கபட்டது. ஆந்திரப் பிரதேசத்தில் பொதுவுட மைவாதம் பிரபலமாவதற்கு இது காரணமாக அமைந்தது. வங்கத்தில் ஒரு நில உரிமையாளர் களின் குடும்பத்தில் பிறந்த சாரு மஜூம்தர் என்பவர் மாக்ஸிச-லெனினிஸ-மாவோயிஸத் தத்துவங்களைப்பற்றி தொடராக எழுதிய கட்டு ரைகள் நக்சலைட் அமைப்பின் உந்துகோலாக அமைந்தது. 1967-ம் ஆண்டு ஒரு பழங்க்குடி இளைஞன் தனது நிலத்தில் விவசாயம் செய்ய நீதிமன்ற ஆணை பெற்று உழுது கொண்டிருக் கும் போது நில உடமையாளர்களின் குண்டர்க ளால் தாக்கப்பட்டான். இதை எதிர்த்து சாரு மஜூம்தர் தலைமையிலான இளைஞர்கள் வன் முறைப் போராட்டத்தில் இறங்கினர். இவர்க ளுக்கு எதிராக மேற்குவங்கத்தில் ஆட்சியில் இருந்த இந்திய மாக்ஸிசப் பொதுவுடமைக் கட்சியினர் மத்தியில் ஆட்சியில் இருந்த காங் கிரசு அரசின் உதவியுடன் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டனர். வன்முறைப் போராட்டத் தைக் கொள்கையாகக் கொண்ட நக்சலைட் இயக்கத்திற்கு அதுவே கருவானது. இவர்க ளுக்கு ஆதரவாக ஜம்மு கஷ்மீர், உத்தரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், பிஹார் ஆகிய மாநிலங்களில் வாழும் ஒடுக்கப் பட்ட மக்களும் இணைந்து கொண்டனர். ஆந்திராவில் புரட்சி கர எழுத்தாளர் சுட்டமைப்பு என்னும் பெயரில் பல முற்போக்கு எழுத்தாளர்கள் பொதுவுடமை வாதத்திற்கு ஆதரவாக எழுதினர். கவிஞர்களும் பாடகர்களும் தம் செயற்பாடுகளால் பொதுவுடமை வாதத்தை வளர்த்தனர். சமத்துவம் இவர்களது தாரக மந்திரமானது.

### ◆ வங்கப் போரில் கொல்லப்பட்ட சிங்கம்

1971-ம் ஆண்டு நடந்த பங்களாதேசம் பிரிவினைப் போரைச் சாட்டாக வைத்துக் கொண்டு இந்திரா காந்தியின் அரசு பல பொது வுடமைவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை களை எடுத்தது. சாரு மஜூம்தர் கைது செய் யப்பட்டு காவற்துறை நிலையத்தில் 'இறந்து' போனார். பின்னர் தமது நில உரிமைக்காகப் போராடும் மக்கள் இந்தியாவின் முன்னேற்றத் திற்கு எதிரான பயங்கரவாதிகள் என வெற்றிகர மாக முத்திரை குத்தப்பட்டனர். இதற்கு ஊடகங் களும் உடந்தையாக இருக்கின்றன.

### ◆ நிறைவேற்றப்படாத அரசியலமைப்பு

இந்திய அரசியலமைப்பின் ஐந்தாவது அட்ட வணையில் பழங்குடி மக்கள் வாழும் பிரதேசங் களும் பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசங்களும் சிறப்பு ஆளுநர்களின் கீழ் நிர்வகிக்கப்பட வேண் டும் என உள்ளது. ஆனால் இது ஒரு போதும் நிறைவேற்றப்படவில்லை. இதனால் இந்த மக்க ளுக்கு நில உரிமை என ஒன்று இல்லாமல் போனது. பழங்குடி மக்கள் தமது நிலங்க ளுக்கு என ஒரு காணி உறுதியை வைத்திருப் பதில்லை. ஆனால் அவர்கள் பல பரம்பரையாக அதில் வாழ்ந்து வருகின்றனர். இதனால் அவர் கள் வாழும் நிலங்கள் மாநில அரசின் உரிமை யானது. அவர்களது பிரதேசங்களில் கண்டறி யப்பட்ட கனிம வளங்களால் அவர்களை அங்கி ருந்து விரட்டி கனிம வள அகழ்வு நடக்கத் தொடங்கிய போது அவர்கள் வன்முறைகளில் இறங்கினர். மாநில அரசுகள் அவர்களின் நிலங் களை முதலாளிகளுக்கு வழங்கின. ஜம்மு கஷ்மீர், மேற்கு வங்கம், கேரளா ஆகிய மூன்று மாநிலங்களில் மட்டுமே நில உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டு அமுலாக்கப்பட்டது. ஆனால் மேற்கு வங்கத்தில் நில உரிமை யாளர்கள் அவண மோசடிகளைச் செய்து தமது நிலங்களைத் தக்க வைத்துள்ளனர். கேரளாவில் நில உச்சவரம்புச் சட்டம் நடை முறைப்படுத்தப் பட்டதால் அங்கு நக்ச லைட்டுக்கள் செல்வாக்குப் பெறவில்லை.

ஆதிவாசிகள் என்றும் சுத்த தமிழில் பழங் குடி மக்கள் என்றும் அழைக்கப்படும் மக்கள் ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நர்மதா நதிக்கும் கோதாவரி நதிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர். இந்து, மாராத்திய மற்றும் மொஹலாய மன்னர்களால் இவர்கள் கொல்லப்பட்டனர். இவர்களது நிலம் ஜமிந்தார்கள் எனப்படும் நில ஆதிக்க வெறி பிடித்தவர்களின் வசமானது. இந்தியாவைப் பிரித்தானியா கைப்பற்றிய போது அவர்களது கப்பல் கட்டுமானத்திற்குத் தேவையான தேக்கு மரங்கள் இவர்களின் நிலங்களில் இருந்து ஜமிந்தார்கள் மூலம் பெறப்பட்டு பழங்குடி மக்களின் வாழ்வாதாரங்கள் பறிக்கப்பட்டன. தொடர்ந்து பீடி உற்பத்திக்குத் தேவையான இலைகளும் பழங்குடிமக்களின் பிரதேசத்தில் கண்டறியப்பட்டன. 1966-ம் ஆண்டு பழங்குடி மக்களின் நிலங்களைப் பறிப்பதைத் தடுத்த பஸ்த் தார் பிரதேச மன்னர் இந்தியக் காவற்துறை யினரால் கொல்லப்பட்டார். இவர்களது நிலப் பரப்பில் டாட்டா நிறுவனம் 3.7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான முதலீட் டைச் செய்துள்ளது. இந்திய வரலாற்றில் நக்ச லைட்டுக்கள் ஒரு மிகப் பெரிய தாக்குதலை 06-04-2010 அன்று சட்டீஸ்கரில் நடாத்தினர். நக்சலைட்டைப் பொறுத்தவரை இது ஒரு வெற்றிகரமான தாக்குதலாகும். 76 மத்திய ரிசர்வ் போலீஸ் படையை சேர்ந்த போலீஸ் காரர்கள் கொல்லப்பட்டனர். சட்டீஸ்கரின் தென் பகுதியில் தன்தேவடா மாவட்டத்தில் வளம் கொழிக்கும் சுரங்கங்கள் ஏராளமாக உள்ளன. அங்கு மத்திய ரிசர்வ் போலீஸ் படையினர் கவச வாகனத்தில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். 06-04-2010 அதிகாலை 6 மணியளவில் அவர்கள் முக்ரனா என்ற அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் கவச வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, கண்ணிவெடி மூலம் மாவோயிஸ்டுகள் தாக்குதல் நடத்தினர். அதில் வாகனம் நொறுங்கியது.

### ◆ இத்தாக்குதலின் தாற்பரியங்கள்:

1. மாவோயிஸ்டு தீவிரவாதிகள் தங்கள் திட்டமிடும் திறனை வெளிப்படுத்தியுள்ளனர்.

2. தங்களால் பெரிய அளவில் படைகளை நகர்த்த முடியும் என்று புலப்படுத்தியுள்ளனர்.

3. மாவோயிஸ்டு தீவிரவாதிகள் தங்கள் உளவுத் தகவல் திரட்டும் திறனை வெளிப்படுத் தியுள்ளனர். போலீஸ் படையினரின் வரு கையை அவர்கள் முன் கூட்டியே தெரிந்து வைத் துள்ளனர்.

4. இந்திய உள்ளக உளவுத் துறையின் பலவீனம் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. ஆயிரக் கணக்கில் ஆயுதங்கள் சகிதம் மாவோயிஸ்டு தீவிரவாதிகள் படை நகர்த்தியதை இந்தியக் உளவுத் துறையினரால் அறிய முடியாமல் போனது.

5. மாவோயிஸ்டு தீவிரவாதிளிற்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரித்து வருகிறது. ஆயிரக்கணக்கில் படை நகர்த்தும் போது ஊர் மக்கள் அறிந்திருக்க வாய்ப்புக்கள் அதிகம். ஆனால் அவர்கள் காட்டிக் கொடுக்கவில்லை.

தற்போது இந்திய அரசு சரணடையும் ஒரு நக்சலைட் போராளிக்கு ஒரு கோடி ரூபாவும் வேலையும் மன்னிப்பும் வழங்க முன்வருகின் றது. இது ஒரு இந்தியக்குடிமகனைப் பொறுத்த வரை பெரிய ஒரு தொகையாகும். நக்சலைட்டுக் களிடமிருந்து நிலங்களை இந்திய அரசு மீட்டால் எண்பது பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான கனிம வளங்களைப் பெற முடி யும். அதாவது ஐந்து இலட்சம் கோடி இந்திய ரூபாக்களைப் பெறமுடியும். இந்திய இரும்புத் தாது இருப்பின் 90 விழுக்காடும், நிலக்கரி இருப்பின் 85 விழுக்காடும் மேலும் வைரம் மற்றும் பல கனிம வளங்களும் நக்சலைட்களின் பிரச்சனை உள்ள பிரதேசத்தில் காணப்படு கின்றது. மேலும் மங்கனீஸ், நிக்கல், செப்பு போன்றவையும் இருக்கின்றன. கிரேக்க நாட்டின் நிலப்பரப்பிற்கு ஈடான நிலப்பரப்பைக் கொண்ட சதிஸ்க்கர் மாநிலத்தில் இந்தியாவின் தகர இருப்பின் 38 விழுக்காடு இருக்கின்றது. இவற் றைக் கருத்தில் கொண்டு நக்சலைட்களின் பிரச்சனை உள்ள பிரதேசங்களில் பல சமூக நலத் திட்டங்களை இப்போது இந்திய அரசு மேற்கொள்கின்றது. சூரிய வலு மூலம் பழங் குடி மக்களுக்குக் குடி நீர் வழங்குதல் ஏழை களுக்கு இலவச உணவு வழங்குதல் போன்ற வற்றைச் செய்து மக்களையும் நக்சலைட்டுக் களையும் பிரிக்க இந்திய அரசு முயல்கின்றது. இந்த இலவசத் திட்டம் வேலை செய்வதாக சதிஸ்கர் மாநில காவற்துறை அதிகாரி தெரிவித் துள்ளார். ஆனால் நக்சலைட்டுக்களிடமிருந்து கனிம வளம் மிக்க நிலங்களை மீட்பது இலகுவான காரியம் அன்று.


கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?
தனிநபரோ... வியாபாரமோ...
▶ கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
▶ Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
▶ வியாபாரத்தை பலப்படுத்த...
▶ TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

BBK PARTNERSHIP
R3
THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES


இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்
உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்
www.bbkca.com
Email: admin@bbkca.com



Chartered Accountants and Business Recovery Professionals
▶ Accountancy / Audit
▶ Tax Solutions
▶ Company Formation
▶ Confidential Tax Consultancy
▶ Investigations / Tax Mitigation
▶ Bankruptcy / IVA
▶ Liquidations
▶ Business Startup & Consultancy
▶ Solicitors Rules Audit
▶ Payroll / VAT / Bookkeeping

BARNET-LONDON 020 8216 2520 MR. ANANDAN
CROYDON 020 8150 9950 MR. SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN
SOUTHGATE 020 8886 9589 MR. KANDEE

# Sri Lanka-China tensions rise over suspended port project




**By Manusha Fernando**

The Sri Lankan government's decision to review, and in effect suspend, the $US1.4 billion, Chinese-backed Colombo Port City (CPC) project has strained relations between Beijing and Colombo. The review was announced in January shortly after Maithripala Sirisena defeated President Mahinda Rajapakse in the presidential election and formed a new government led by the opposition United National Party (UNP).

The agreement to build the port facility was signed when Chinese President Xi Jinping visited Sri Lanka last September. The plan was to construct a modern 500-acre (230 hectare) city, with hotels, apartments and office buildings, on earth fill near the seafront of Colombo harbor. About 200 acres were to be held by China Communications Construction Company (CCCC), the main contractor, on a 99-year lease. Another 50 acres were to be granted outright.

The project, which was sealed with the Rajapakse government, is part of Xi's ambitious plan for a Maritime Silk Route, involving substantial investment in Asia and Africa aimed at boosting trade and tourism. Beijing is pushing the scheme as a means of extending its influence in the Indo-Pacific region and securing shipping routes on which it relies for importing energy and raw materials from Africa and the Middle East.

In the course of the campaign for the January presidential election, Maithripala Sirisena and his backers repeatedly criticised Chinese investments in the country and Rajapakse's ties with Beijing, and indicated a shift in foreign policy towards the US and India.

The US was hostile to the Rajapakse government and its ties with China. US efforts to undermine Chinese influence in Colombo are part of the Obama administration's broader "pivot to Asia"—a comprehensive diplomatic, economic and military strategy aimed at ensuring continued American dominance.

Washington exploited the issue of Sri Lankan war crimes during the civil war against the separatist Liberation Tigers of Tamil Eelam (LTTE) to put pressure on Rajapakse. When that failed, the US gave the green light for what amounted to a regime-change operation in the January election worked out months in advance with former president Chandrika Kumaratunga and opposition UNP leader Ranil Wickremesinghe.

Since coming to power, Sirisena and the UNP-led government have rapidly shifted foreign policy away from Beijing and towards Washington and New Delhi. High-level exchanges have already taken place between Sri Lanka and the US and India. The government's decision in January to review the port project was another clear signal that it was distancing itself from China.

The Chinese government sent special envoy Liu Jianchao in early February to discuss the possible cancellation of the port project. After the visit, Liu said "The project will continue only after being re-evaluated. We respect the decision by Colombo." His comments suggested that the government confronted legal problems in cancelling the contracts for the construction.

The Sri Lankan government has based its review on environmental issues, alleged corruption and investment figures that were supposedly inflated by the Rajapakse government. Moreover, the decision on the huge project appears to have generated differences within the government over how to proceed.

> An article in mid-February in the US-based Foreign Policy noted that Sirisena had appeared to give approval for the port project so as to avoid "a misunderstanding" with China. "That raised eyebrows, because his [Sirisena's] election was widely seen as a blow to China's budding friendship with Sri Lanka; former President Mahinda Rajapakse had steadily moved Sri Lanka closer to Beijing," it stated.

An article in mid-February in the US-based Foreign Policy noted that Sirisena had appeared to give approval for the port project so as to avoid "a misunderstanding" with China. "That raised eyebrows, because his [Sirisena's] election was widely seen as a blow to China's budding friendship with Sri Lanka; former President Mahinda Rajapakse had steadily moved Sri Lanka closer to Beijing," it stated.

At the same time, Foreign Policy noted that Prime Minister Wickremesinghe attempted to "walk back" Sirisena's approval in comments to parliament. The fact that the fate of the project was being closely followed in the US makes clear that the Sri Lankan government was under considerable pressure from Washington and its allies.

During a visit to Beijing in late February, Sri Lankan Foreign Minister Mangala Samaraweera made clear that the review was continuing and the future of the port project was not guaranteed. In response to a media question, Samaraweera also ruled out any repeat visit of a Chinese submarine, which docked last year in Colombo during the Japanese prime minister's visit. India in particular protested over the incident.

The port project received a further blow when Sri Lankan Investment Promotion Minister Kabir Hashim threatened legal action against the Chinese contractor, CCCC, if it did not suspend construction work. He warned that "the ministry of ports will take necessary action to halt the work until this inquiry is done."

CCCC suspended the project from March 6. CHEC Port City Colombo, the private company carrying out work for CCCC, also issued a statement noting that it had been asked to produce all documents signed with the Colombo government. CCCC has complained that it is losing $380,000 a day as a result of the suspension, which affects about 1,000 workers directly and another 4,000 indirectly.

China has implicitly warned that Chinese investment could be compromised if the project is cancelled. Foreign Ministry spokeswoman Hua Chunying pointedly called for a resolution of the issue to "preserve Chinese companies confidence to invest in Sri Lanka in the overall interests of China-Sri Lanka friendliness and the fundamental interests of Sri Lanka's national development."

Yi Xianling, China's ambassador in Colombo, urged the government and Chinese construction company last Tuesday to "observe rule of law and mutual trust." He suggested that the current situation could lead China to reconsideration about its financial support and pointed out that China had helped Sri Lanka "during the global financial crisis in 2008, [when] major donors reduced their preferential loans."

The Xinhua news agency featured the remarks of former Sri Lankan president Rajapakse who declared that halting "development projects means that the Sri Lankan workers and engineers working on them will lose their jobs and thereby the cash flowing to villagers will stop." Haiwai Net pointed out that India did not have the same capacity to help Sri Lanka economically and Colombo will "still depend on Beijing for infrastructure investment in the long term."

> The port project received a further blow when Sri Lankan Investment Promotion Minister Kabir Hashim threatened legal action against the Chinese contractor, CCCC, if it did not suspend construction work. He warned that "the ministry of ports will take necessary action to halt the work until this inquiry is done."

The new Sri Lankan government is engaged in a difficult balancing act. China has invested around $5 billion in Sri Lanka and is the country's largest aid donor. While integrating the country into Washington's anti-China "pivot," Sirisena, who is due to visit Beijing towards the end of March, no doubt is continuing to seek Chinese aid and investment.

In the meantime the fate of the Colombo port city project remains undecided and no date has been set for finalizing the review.

*Courtesy: World Socialist Web (wsws.org)*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....



**seven | zero**
graphic designers
**020 7043 4310**
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP

creative artwork from **concept to design**

# Wigneswaran seeks extra-constitutional approach to resolve Tamil national question



Mr Narendra Modi and Mr C.V. Wigneswaran at the foundation stone laying ceremony for Jaffna Cultura

NPC Chief Minister C.V. Wigneswaran on Saturday urged the visiting Indian PM to support a negotiation process without succumbing to the constraints of the Sri Lankan Constitution and the associated protocols. Such a negotiation process should involve the Indian Government, Sri Lankan Government and the Provincial Councils of North and East in the island to resolve the national question. The current 13th Amendment Framework and the existing Sri Lankan constitutional architecture had evolved since the first Republican Constitution of 1972 without the consent and participation of Tamils of North and East of our Country, he said adding that both of them pose formidable challenges and hindrances in realizing the quantum of devolution required to fulfill the needs and aspirations of the Tamil Speaking People of North and East of Sri Lanka.

Mr Wigneswaran was speaking at the foundation stone laying ceremony of Jaffna Cultural Centre, held at the Public Library in the presence of Indian Prime Minister Mr Narendra Modi.

Further extracts from the speech by Mr Wigneswaran follow:

"Indian Constitution provides for the facilitation of sustainable development, internal security, law and order, policing and protection pertaining to lands and so on within the State. Our inability to function in our Province to the extent you were able to help Gujarat under the Indian Constitution needs to be understood.

"Especially the inadequacies of the Thirteenth Amendment. Even when the Indo-Lanka Accord of 1987 was signed there was a historic communication by our leaders to the then Indian Prime Minister, late Shri Rajiv Gandhi on 28 October 1987, pointing out hollow and inadequate the 13th Amendment had been. They sought the then Indian Government's intervention on behalf of the Tamils of North East Province of Sri Lanka. When Indo Lanka Accord was negotiated ostensibly as a solution to the Tamil Question, India whilst addressing Indian Security and Strategic concerns, stood as a guarantor on behalf of the Tamils of North-East. That situation prevails in North-East Provinces in Sri Lanka even today. We need the services of a guarantor and it is our considered view that the Government of India under your stewardship is best suited for this role!.

"The emaciated Thirteenth Amendment has not brought the required and expected devolution to the North and East. Even today parallel administrative structures exist one directed by the Centre and the other by the Province despite the appointment of an amiable Governor!

"Our former President in May 2009 released a joint statement with the UN Secretary General during latter's visit to Sri Lanka relating to the core issues and post war context and the causes of the conflict. Later in January 2010 he promised Mr.Manmohan Singh, your predecessor, that he will go beyond the Thirteenth Amendment. Hence, it is time that we take note of the commitment expressed by the then Sri Lankan Head of State, consider our post war context, needs, priorities and concerns and move forward with the active support of your friendly Country under your leadership.

> When Indo Lanka Accord was negotiated ostensibly as a solution to the Tamil Question, India whilst addressing Indian Security and Strategic concerns, stood as a guarantor on behalf of the Tamils of North-East. That situation prevails in North-East Provinces in Sri Lanka even today.

"We seek positive action to be taken to resolve our problems. May I suggest Sir, that there be talks among the Indian Government, Sri Lankan Government and the NPC and the EPC without taking refuge under the current constitutional provisions and protocols to find ways of resolving the central problem of the Tamil speaking people in an innovative and creative manner bearing in mind the root causes of our ethnic conflict and post war needs and priorities of the people of the Northern and Eastern Provinces? We seek justice and fair play to be established in the political arena and the constitutional framework in Sri Lanka to live with equity, equality and dignity.

"We have many requests to make. But it is not appropriate for me to present our want list when we are happily welcoming you into our midst. Suffice to say a concerted effort on the part of the Central and Provincial Administrations of our Country with yours would no doubt bring alleviation to the vast numbers of War affected families and individuals in our part of this Country. Even though security concerns should be left to the Central Administration in any Country it should not transgress the limits of protection of the Country to a protracted pursuit of purposeful military occupation with political undertones in place. I could give statistics of such purposeful occupations. But we are here to welcome you Sir, not to burden you with a testament of our trials and tribulations. Let us hand over to you today separately our humble requests to rebuild our post war Province."

*Courtesy: TamilNet*








ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: ____________________

Address : ____________________

____________________

____________________

Postcode: ____________________

Telephone: ____________________

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலை யினையும், G11, Lombard House, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# KIDS பேப்பர்

## நஷ்டத்தை லாபமாக்கிய குதிரை

தெனாலிராமன் ஒரு முறை சந்தைக்குச் சென்று ஐம்பது நாணயங்கள் கொடுத்து குதிரை ஒன்று வாங்கி வந்தான். அதில் ஏறி சவாரி செய்யப் பழகிக் கொண்டிருந்தான். ஒருநாள் அரசர் தன் விலை உயர்ந்த குதிரை மேல் ஏறிக் கொண்டு இராமனையும் உடன் வருமாறு அழைத்தார்.

தெனாலிராமனும் தன் குதிரை மீது ஏறிக்கொண்டு மன்னருடன் உலாவப் புறப்பட்டான். அரசரின் குதிரை அழகாக நடை போட இராமனின் குதிரையோ தளர்ந்த நடை போட்டது. கிருஷ்ணதேவராயர் இந்தக் குதிரையைப் பார்த்து சிரித்தார். இராமனையும் கேலி செய்தார். 'இராமா! போயும் போயும் இந்த வற்றிப் போன குதிரை தானா உனக்குக் கிடைத்தது. இதனை வைத்துக் கொண்டு நீ எப்படி சவாரி செய்யப் போகிறாய்' என் குதிரையைப் பார். எப்படி ஓடுகிறது" இராமனுக்கு வெட்கம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. 'அரசே! இந்தக் குதிரை பயன்படுவது போல உங்கள் குதிரை கூடப் பயன்படாது' என்று தன் குதிரையைப் பற்றி மிக உயர்வாகப் பேசினான். மன்னருக்குக் கோபம் வந்தது. என்ன இப்படிச் சொல்கிறாய்? இதை உன்னால் நிரூபிக்க முடியுமா??'

வேண்டுமானால் பாருங்கள். உங்கள் குதிரையால் செய்ய முடியாததை என் குதிரையைச் செய்ய வைக்கிறேன். அப்படியா சொல்கிறாய்? 'நூறு பொன் பந்தயம் கட்டுகிறேன். செய் பார்க்கலாம்' என்று பேசியவாறு



மெதுவாக வந்து கொண்டிருந்தனர் இருவரும் அப்போது குதிரைகள் இரண்டும் பாலத்தின் மீது சென்று கொண்டிருந்தன. கீழே பார்த்தால் பயங்கர சுழல். ராமன் சட்டென்று குதிரையை விட்டுக் கீழே இறங்கினான். பாலத்தின் ஓரத்திற்குக் குதிரையைக் கொண்டு போனான். அரசர் திகைத்தார். ராமன் தன் குதிரையை நீருக்குள் தள்ளி விட்டு விட்டான். அரசர் பதறினார். 'இராமா!, என்ன இது, ஏன் இப்படிச் செய்தாய்' அரசே! என் குதிரை செய்தது போல உங்கள் குதிரை செய்ய முடியுமா? உங்கள் ஆயிரம் பொன் மதிப்புள்ள குதிரையால் செய்ய முடியாததை என் குதிரை செய்து விட்டது பாருங்கள்.

ஆயிரம் பொன் மதிப்புள்ள குதிரை மட்டுமல்ல, அரசரின் நண்பனாகவும் பழகிய அறிவுள்ள குதிரை அது. அதை இழக்க அரசர் விரும்புவாரா? பந்தயத்தில் சொன்னபடி நூறு பொன் நாணயங்களைக் கொடுத்தார் அரசர். இருந்தாலும் ஒரு உயிரைக் கொல்வது தவறில்லையா இராமா, என்றார் அரசர் வருத்தத்தோடு 'அரசே! நோய் வாய்ப்பட்டு வயோதிக நிலையில் இருக்கும் இந்தக் குதிரையை யாரும் இனி வாங்க மாட்டார்கள்.

இது இறந்தால் எனக்கு ஐம்பது நாணயங்கள் நஷ்டம். இப்போது எனக்கு நூறு பொன் கிடைத்து விட்டது. அத்துடன் அந்தக் குதிரையைப் பராமரிக்கும் பராமரிக்கும் செலவும் குறைவு. குதிரைக்கும் துன்பம் நீங்கி விட்டது. எனவேதான் இப்படிச் செய்தேன். என் குதிரையின் உயிர் நஷ்டம் எனக்கு இரு மடங்கு லாபமாயிற்று என்றான். மன்னரும் அதை ஒப்புக் கொண்டு தெனாலிராமனின் சாமர்த்தியத்தைக் கண்டு வியந்தார்.

## Colouring - 238



### Issue 237 Winner
### A. Nethira

## உங்களுக்கு தெரியுமா ???

### விலங்குகளின் ஆயுட்காலம்

- வரிக்குதிரையின் ஆயுட்காலம் 22 வருடங்கள்
- அணிலின் ஆயுற்காலம் 82 வருடங்கள்
- செம்மறி ஆட்டின் ஆயுட்காலம் 16 வருடங்கள்
- சிம்பன்சியின் ஆயுட்காலம் 41 வருடங்கள்
- பெருங்கரடியின் ஆயுட்காலம் 20 வருடங்கள்
- தீக்கோழியின் ஆயுட்காலம் 50 வருடங்கள்
- பென்குயினின் ஆயுட்காலம் 22 வருடங்கள்
- திமிங்கிலத்தின் ஆயுட்காலம் 500 வருடங்கள்
- கடலாமையின் ஆயுட்காலம் 200 வருடங்கள்

## MUM

Mum, I always wonder about mum
she might be a gift from god.
My mum works very hard
and never gives up.
She is delightful and
joyful for everybody.
I never believe god,
god is my mum.
Mum,
She does her best every time.
She is my best friend.
She archives whatever she does.
My mum is a
completive person and
always ensure to keep us safe.
I never seen anyone like my mum
in the universe!
I don't want to live in this world
without her.
Mum, She is the best!

*Vigaashan.Asokan*

## MY ADVENTURE

One sunny morning I goto explore the deep dark forest. I took bono culous to see which animals live there. I went out to the forest. I hid in the bushes so I didn't get seen. I looked out for animals. I saw a catterpillar crawling and a ant walking some where. It was very nice. I had some ham sandwhiches and bucuits. For my drink I had some orange juice and some water. then I set back on searching. I saw a lion and I was so frighten I ran back home! I said "that was a adventure".

*- Rehashan Asokan*

## நாள் ஒரு குறள்

*புறம்குன்றி கண்டனைய ரேனும் அகம்குன்றி*
*மூக்கில் கரியார் உடைத்து.*

விளக்கம்: புறத்தில் குன்றிமணி போலச் சிவப்பாகத் தோற்றம் தந்தாலும், உள்ளத்தில் குன்றி மணியின்மூக்கைப் போல் கருத்திருப்போரும் உண்டு.

Beware of those with an external pose like a berry, whose mind is stained dark like its nose.



A. Nivedaa

உங்களது பிறந்தநாள் வாழ்த்துகள், குட்டிக்கதைகள் மற்றும் படங்கள் வரைந்தும், விடுகதைகள், பழ மொழிகள் என்று எதுவானாலும் உங்களது பெயரைக் குறிப்பிட்டு எமது முகவரிக்கு மின்னஞ்சல் மூலமோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வையுங்கள்.

Your Name

## விடுகதைகளும் விடைகளும்.....

1. காலில் தண்ணீர் குடிப்பான், தலையில் முட்டையிடுவான் யார்?
2. எட்டாத ராணி இரவில் வருவாள். பகலில் மறைவாள் அவள் யார்?
3. நடந்தவன் நின்றான். கத்தியை எடுத்து தலையைச் சீவினேன். மறுபடி நடந்தான். அவன் யார்?
4. வால் நீண்ட குருவிக்கு வாயுண்டு. வயிறில்லை. அது என்ன?
5. அம்மா போடும் வட்டம், பளபளக்கும் வட்டம், சுவையைக் கூட்டும் வட்டம். சுட்டுத் தின்ன இஷ்டம்?
6. வெள்ளை ஆளுக்கு கறுப்புத் தலைப்பாகை. அது என்ன?
7. ஓடையில் ஓடாத நீர், ஒருவரும் குடிக்காத நீர். அது என்ன?
8. சலசலவென சத்தம் போடுவான், சமயத்தில் தாகம் தீர்ப்பான். யார்?
9. தொடாமல் அழுவான், தொட்டால் பேசுவான். அவன் யார்?
10. வீட்டுக்கு வந்த விருந்தாளியை வரவேற்க ஆளில்லை. அது என்ன?

விடைகள்: 1. தென்னைமரம் 2. நிலா 3. பென்சில் 4. அகப்பை 5. அப்பளம் 6. தீக்குச்சி 7. கண்ணீர் 8. அருவி 9. தொலைபேசி 10. செருப்பு

## பழமொழிகள் ...

- அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
- அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்.
- அடியாத மாடு படியாது.
- அடியைப் போல அண்ணன் தம்பி உதவாது.
- அழுத பிள்ளை பால் குடிக்கும்.
- அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
- அற நனைந்தவனுக்குக் குளிரென்ன கூதலென்ன.
- ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு.
- ஆயிரம் நட்சத்திரம் கூடினாலும் ஒரு சந்திரன் ஆகாது.
- ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை.
- ஆழம் தெரியாமல் காலை விடாதே.

## தம்பி தங்கைகளே.....

உங்களது பிறந்தநாள் வாழ்த்துகள், குட்டிக்கதைகள் மற்றும் படங்கள் வரைந்தும், விடுகதைகள், பழமொழிகள் என்று எதுவானாலும் உங்களது பெயரைக் குறிப்பிட்டு எமது முகவரிக்கு மின்னஞ்சல் மூலமோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வையுங்கள். அனுப்பும் போது உங்கள் பெயர் முகவரியுடன் உங்கள் நிழற்படத்தையும் மறக்காமல் அனுப்பி விடுங்கள்...

மின்னஞ்சல் முகவரி : info@orupaper.com

அஞ்சல் முகவரி : Oru Paper 'Kids Zone'

G11 Lombard House, 2 Purley Way, Croydon, CR0 3JP

Eatin' good in the neighbourhood

PIONEERS IN CHETTINAD CUISINE WITH SINCE 1964

HALAL INDIA

# ANJAPPAR


Chettinad A/C Restaurant

FOOD HYGIENE RATING 0 1 2 3 4 5 VERY GOOD

Quality and Service is our Motto

High Class Indian Veg & Non Veg Restaurant

## @ EAST HAM, LONDON



233-235 High Street North, East Ham, London, E6 1JG
Email : anjapparlondon@hotmail.com

**Tel : 0208 552 1155**

Opening Hours : 12.00 to 23.00





INDIA ◆ SINGAPORE ◆ MALAYSIA ◆ DUBAI ◆ ABUDHABI ◆ QATAR ◆ KUWAIT ◆ AUSTRALIA ◆ USA ◆ CANADA

## PLEASE COLLECT DISCOUNT VOUCHER IN A SHOP



VIJAY AWARDS

CURTAIN RAISER

SunLand REFINED SUNFLOWER OIL

Super Singer IX Junior

WORLD TOUR 2015

Lebara mobile



APRIL 3
6 PM
THE SSE ARENA
WEMBLEY

THE sse ARENA WEMBLEY

**Buy Vijay TV Viewing Card Worth £60 and get 2 x £30 Super Singer Concert Tickets Free**

VIJAY

**Tickets available for £15 £30 £45 £60 & £75**

Tickets Available at

**EAST HAM** - Seelans superstore - 020 85488945,
Akilan Video - 020 85480033, Lakshmis Jewellers- 020 84705600

**BARKING** - Veena's Cash & Carry -020 85502700

**WEMBLEY** - SGA Video - 07940795145, Western Jewellers - 020 89030909,
Ganapathy Cash & Carry - 020 87954627

**TOOTING** - Jai Off License - 020 86822666, Western Jewellers - 020 87673445

**SOUTH HARROW** - Global Video - 020 84239988, South Harrow Food & Wine - 020 84236321

**SUTTON** - Sureyan Express - 020 86417483

**LEWISHAM** - AJ Video - 020 86946653

**HAYES** - Asian Fresh Fish - 020 85731161, Krishna Cash & Carry - 020 88481250

**CROYDON** - Eelam Video - 020 86648351

**MILTON KEYNES** - Asian Fresh Fish – 078070 09425

**LIVERPOOL** - Aananthan – 074559 84051

**COVENTRY** – Myooran Dreams Media – 07961277728

**BIRMINGHAM** – Sivamyooran - 077526 52626, Prabha – 0121 5683630

**HOUNSLOW** – Best Foods - 020 85776002

**TOLWORTH** – Vaishna Superfoods - 02083994488

**NEW MALDEN** – Kings Food store - 020 89493538

**FOR ONLINE BOOKING WWW.AXS.COM I WWW.SSEARENA.CO.UK**

TITLE SPONSOR: SunLand REFINED SUNFLOWER OIL

POWERED BY: Lebara mobile

CO - PRESENTED BY: Aachi The Mother of Good Taste, POOMALAI HOUSING PRIVATE LIMITED, BHARATHRATION.COM (Your Online Supermarket)

ASSOCIATE SPONSORS: ELAKKIA, VENISONS, SOUTHINDIA PROPERTIES, CASA GRANDE, RRP HOUSING, Classic Kitchen, Jay Brand, Dollar Bigboss, KIBS LUNGIES, SAKTHI MASALA & PICKLES, Karbonn SMART, internet.org

# சூது விரும்பேல்

நாகரிகமடைந்த நாடுகளிலும், ஐரோப்பிய நாடுகளிலும் மூலைக்கு மூலை சூதாடும் நிலையங்கள், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் வியாபார ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில் ஔவையார் கூறி வைத்த சூது விரும்பேல் என்ற அறிவுரை எவ்வளவு தூரம் இவர்களுக்கு கேட்குமென்பதில் நம்பிக்கை இல்லாது போனாலும், அதனால் விளையும் தீமைகள் பலர் அறிந்ததே.

அரசாங்கங்களே அதிஷ்ட இலாபச்சீட்டு என்றுமெழுகுபூசி சூதாட்டத்தை அங்கீகரித்துள்ளது. எமது துரதிஷ்டம் பல மில்லியன் பரிசுகளை அள்ளிக் கொண்டுபோகும் அதிஷ்டசாலிகளில் அர்த்தமுள்ள தரும ஸ்தாபனங்களுக்கு ஒரு சிறிய உதவியாகுதல் தந்தவர்கள் மிகச்சிலரே. அதேசமயம் திடீர் தனவந்தவர்கள் ஆகிய இந்த அதிஷ்டசாலிகள் தவறான பாதைகளில் பணத்தை செலவழித்துவிட்டு தாழ்ந்துபோன கதைகளாக செய்திகள் கிடைத்துள்ளன.

சூதாட்டத்தின் பாரதூரமான விளைவை அனுபவித்த பாண்டவர் நாட்டை இழந்து, வீட்டை இழந்து, இறுதியில் தமது மனைவியையும் இழக்கக் காரணமான சூதாட்டத்தைக் கனவிலும் விரும்பாதே என்பது தான் ஔவையாரின் வேண்டுகோளாகும். ஏனெனில் சூதாட்டத்தில் விருப்பம் வந்துவிடுமானால் அதை இலகுவில் விட்டொழிப்பது இயலாத காரியம். சூதாட்டத்தில் ஈடுபடுபவர்களின் குடும்பம், மகிழ்ச்சியாகவோ, நிம்மதியாகவோ வாழ்ந்த சரித்திரம் கிடையவே கிடையாது. இப்பழக்கத்தில் ஊறியவர்கள் ஒருவித மயக்கமான மனோ நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். அதிலிருந்து மீள்வது மிகவும் அபூர்வம். ஆகவே தான் சூதுவிரும்பேல் என ஔவையார் அன்புடன் வேண்டுகிறார்.

சூதாட்டத்தில் உள்ள சூட்சுமம் என்னவெனில், ஆரம்பத்தில் அதிஷ்டத்தை அள்ளிக் கொட்டிவிட்டு, போகப்போக தோல்வியைக் கொடுத்து, சூதாட்டத்தில் ஈடுபட்டோரை அடியோடு அழித்துவிடும் இவ்வாறு அழிந்த குடும்பங்கள் எத்தனையோ, உழைத்து முன்னேறிய எத்தனையோ பேர் குறுக்குவழியில் சம்பாதிக்க சூதாட்டத்தில் ஈடுபட்டு சோம்பலாகிப் போனவர்கள் கணக்கில் அடங்காது. சூதாட்டத்தால் முன்னுக்கு வந்தவர்கள், இவ்விளையாட்டை நடாத்தும் நிறுவனங்களேயொழிய, சூதாட்டத்தில் இணைந்த அப்பாவி மக்கள் அல்ல என்பது தான் உண்மை. அதனால் தீமைகளையே தரும் சூதாட்டத்தை எப்போதும் விரும்பாதே என்பது ஔவையாரின் உபதேசமாகும். எம்மக்களிடமும் இரகசியமாகப் பரவும் இப்பழக்கத்தை கைவிட அன்புடன் வேண்டுகிறோம்.

# மக்கள் மன்றத்தின் மனத்தாங்கல்

கடந்தவாரம் இடம்பெற்ற மக்கள் மன்றத்தின் நிகழ்ச்சியை டான் ஒளிபரப்பும், யாழ்.ஒளியில் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. இதில் பங்குபற்றியவர்களின் ஒட்டுமொத்தமான கருத்துகளும், புலம்பெயர் தமிழர்கள் எடுக்கும் சமகால அரசியல் நகர்வுகள், தமது இலகு வாழ்க்கையைப் பாதிப்பதாகவும், உதவி செய்யாவிட்டாலும் உபத்திரமாவது செய்யாமல் இருந்தால் போதும் என்ற கோரிக்கை விடப்படுவதை அவதானிக்கப்பட்டது.

பட்டது போதும் இனிமேலும் படமுடியாது. கல்விவளம் இழந்தோம். தொழில்வளம் இழந்தோம். வசதி படைத்தவர்கள் எல்லாம் வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டார்கள். மிஞ்சி இருக்கும் 90 விகிதமான தமிழ் இளைஞர்கள், யுவதிகள் எப்படி வாழ்வது, இவர்களுடைய வருங்காலத்தை எப்படி ஓட்டுவது புலம்பெயர்ந்த தமிழர்களால் என்ன செய்துவிடமுடியும். இங்கிருப்பவர்களின் மூளையைச் சலவை செய்து, வெளிநாட்டுக்கு வெளியேறும் மோகத்தைத் தான் தூண்டுகிறார்கள். இவர்களால் எத்தனை பேருக்கு உதவி செய்ய முடியும் என்ற கேள்விகளை அங்கு பங்குபற்றிய பிரமுகர்கள் எழுப்பினார்கள்.

மன்றத்தில் பங்குபற்றிய இன்னுமொரு பிரமுகர், அவர் ஒரு பொறியிலாளர் 40 வருடங்களுக்கு மேலாக லண்டனில் வசித்தவர். அவர் தரும் விபரப்படி, மேலை நாடுகளுக்கு குடிபெயர்ந்தவர்களில் 95 சதவிகிதமானவர்கள் பொருளாதார அகதிகளென்றும், இவர்கள் இன்று மிக நல்ல நிலையில் இருப்பதாகவும், தங்கள் பிள்ளைகளுக்கு பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு செலவு செய்யும் ஆடம்பரத் தொகையில் ஒரு சிறு தொகையாவது, வன்னியில் வளரும் பிள்ளைகளுக்கு உதவி செய்தாலே பெரிய தருமமாகவிருக்குமென இரங்கிக் கேட்டதை எம்மால் ஜீரணிக்க முடியவில்லை.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

அங்கிருந்த இளைஞர்கள், யுவதிகளையும் சண்டையைப் பிடித்து சாகவிட்டுவிட்டு, உயிருக்கு பயந்து ஓடியவர்கள் இன்று எமது வருங்காலத்தையும் வாழவிடாது, சிங்கள, தமிழ் இளைஞர்களை என்றுமே இணையவிடாது எடுக்கும் நடவடிக்கைகள் விரிசல்களை ஏற்படுத்துமே ஒழிய விடிவை உண்டுபண்ணாது. புலம்பெயர் தமிழர்களில் இன்றைய தலைமுறையினரின் காலம் கடந்துவிட்டால் வருங்காலத் தலைமுறையினர் எம்மை ஏறெடுத்தும் பார்ப்பார்களோ என்ற ஐயப்பாடு அங்கு பங்குபற்றிய இளைய பிரதிநிதியின் உரையில் ஓங்கியிருந்தது. ஏனெனில் அவர்களுடைய விசுவாசம், புகுந்த நாட்டுக்கே உரித்தாகிவிடுமல்லவா. தாயகத்தில் வாழும் தமிழர்களின் இன்னுமொரு முகத்தையும் அறிய வேண்டும் என்ற நோக்கத்தில் இந்தத் தகவலை தெரிவிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

# பழையன கழிதலும் புதியன புகுதலும்

சந்தையில் புதிதாக ஒரு பொருளைக் கண்டுவிட்டால், அதை வாங்கிவிட வேண்டும் என்ற ஆசை பலருக்கு வருவதில் ஆச்சரியமில்லை. அதிலும் கூடுதலாக புதிது புதிதாக வெளிவரும் மின்அணுக்கள் (electronics) இணைக்கப்பட்ட கருவிகள் எவரையும் கவர்ந்துவிடுவதில் புதினமில்லை. அவை தொலைக்காட்சிகள் தொட்டு கைபேசி வரை கட்டுக்கடங்காமல் போவதும் அதிசயமில்லை.

அது சரி, புதிதாக வாங்கிய கருவிகளை பாவிக்கத் தொடங்கிவிட்டால், பாவித்த பழைய பொருட்களுக்கு என்ன நடக்குமென்பதை ஆராய்ந்த நியுயோர்க்கைத் தளமாகக் கொண்டு இயங்கும் றோச்செஸ்ரர் பொறியியல் கல்லூரியில் பணியாற்றும் பொறியியலாளரான கலீ பாபிட் 1992ஆம் ஆண்டு தொடக்கம் 2007ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில், பாவனையாளர்களின் பழக்கவழக்கத்தை உன்னிப்பாக ஆராய்ந்து கீழ்காணும் அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

அனேகமான பாவனையாளர்கள், குறிப்பாக அமெரிக்காவில் நவீனமான ஒரு கருவியை வாங்கினாலும், பாவித்த பொருளை எறிந்து விடுவதில்லை. அதை இன்னுமொரு அறையிலோ அல்லது வேறு ஒரு இடத்துக்கோ மாற்றி விடுகிறார்கள். இதன் காரணமாக பழைய கருவியிலிருந்து வெளிப்படும் மின்சக்தி, சுற்றுச் சூழலை தொடர்ந்து பாதிப்பதாகவும், அதற்கு மேலாக பண விரயத்தையும் உண்டுபண்ணுவதாக ஆய்வில் தெளிவு படுத்தியுள்ளனர்.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க என்னதான் வழியென ஆலோசித்தால், பாவித்த பழிய கருவிகளை உடனடியாக வீசிவிடுவதே உகந்த வழியெனவும், பல வகைப்பட்ட செயல்களை கருமமாற்றும் புதிய கண்டுபிடிப்புகளை உபயோகப்படுத்துவது சிறந்த வழியெனவும் அறிக்கையிட்டுள்ளனர். உதாரணமாகப் பொழுது போக்கு நிகழ்ச்சிகளையும் கணனி உபயோகத்தையும் ஒரே கருவியில் செயல்படுத்தக்கூடிய Tablet போன்ற சாதனங்களைப் பயன்படுத்தினால், மின்சக்தி வீணாகாமலும், சுற்றுச் சூழல் மாசடையாமலும் தவிர்த்துக் கொள்ள முடியுமென்பதே ஆய்வாளர்களின் அறிவுரையாகும். எமது வீடுகளையும் ஒரு முறை திரும்பிப் பார்ப்போமா.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper


sarasas
SOUTH INDIAN RESTAURANT

- தென்னிந்திய, இலங்கை, வட இந்திய, செட்டினாட் மற்றும் சைனீஸ் உணவின் ருசியை அனுபவியுங்கள்.
- உங்கள் வீட்டுத் தோட்டத்தில் அல்லது நீங்கள் விரும்பும் இடத்தில் எமது தோசை தயாரிக்கப்படும்.
- சகல பாத்திரங்களும் நாம் கொண்டு வருவோம்.
- நீங்கள் எமது உணவை ருசித்து மகிழவேண்டியது மாத்திரமே




* Outdoor catering * Function hall * Party orders

புதிய விழாக்களுக்கான மண்டபம் Bar வசதியுடன் திறக்கப்பட்டுள்ளது






SARASAS CATERING

எமது சேவை, கற்பனை, ருசியான உணவு, சிறந்த சமையல் ஆகியவற்றின் வெளிப்பாடாகும்

We make 30 different Types of Dosa

630-634 Uxbridge Road, Hayes, Middlesex, UB4 0RY
TEL : 020 8561 8188 for further enquiries please contact : 07939 246 552
Email: raj@sarasasrestaurant.com www.sarasasrestaurant.com

FREE CAR PARKING UPTO 100 CARS

Opening Times 12.00 noon to 11.00pm (7 days a week)

# ஒபாமாவும் 47 செனட்டர்களும் ஈரானுடன் படும்பாடு



## வேல் தர்மா

*(ஒரு பேப்பருக்காக)*

எண்பது மில்லியன் மக்களைக் கொண்டதும் கல்வித் தரத்தில் உயர்ந்ததும் உலகின் 18வது பெரிய பொருளாதாரத்தைக் கொண்டதுமான ஈரானின் பூகோள இருப்பு மிகவும் கேந்திரோபாய முக்கியத்துவம் கொண்டது. ஐக்கிய அமெரிக்காவால் தற்போது ஈரானில் ஓர் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. ஈரானுக்கு எதிரான அமெரிக்காவின் எந்த நடவடிக்கையும் அங்கு ஒரு மோசமான மதத் தீவிரவாதத்தை உருவாக்கும். ஈரானில் எண்ணெய் வளம் கண்டு பிடிக்கப்பட்டதில் இருந்து அமெரிக்கா ஈரானில் யார் ஆள்கின்றார்கள் என்பதில் அக்கறை கொண்டுள்ளது. ஈரானில் மதசார்பற்றவரும் பரிஸில் சட்டத்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவரும் சமூக நலனில் அக்கறை கொண்டவருமான மொஹமட் மொசாடெக் மக்களாட்சி முறைமைப்படி தெரிவு செய்யப்பட்டுத் தலைமை அமைச்சராக இருந்தார். அவர் பல சமூக நலத் திட்டங்களையும் பொருளாதாரச் சீர்திருத்தங்களையும் நாட்டில் அறிமுகப்படுத்தினார். அத்துடன் அவர் ஈரானில் உள்ள பிரித்தானிய எண்ணெய் உற்பத்தி நிறுவனங்களை நாட்டு உடமையாக்கினார். அது ஆட்சிக்கு ஆபத்தாக முடிந்தது. அமெரிக்க உளவுத் துறையும் பிரித்தானிய உளவுத் துறையும் இணைந்து அவரைப் பதவியில் இருந்து 1953-ம் ஆண்டு அகற்றின. படைத்துறையினர் ஆட்சியைக் கைப்பற்றி மொஹமட் மொசாடெக்கைச் சிறையில் அடைத்தனர். அவர் 1956-ம் ஆண்டு இறக்கும் வரை சிறையிலேயே இருந்தார்.

### ◆ மக்களாட்சியை ஒழித்து மன்னராட்சியக் கொண்டுவந்த ‘ஜனநாயக’ அமெரிக்கா!

1967-ம் ஆண்டு ஈரானில் மொஹமட் ரிஜா பஹ்லவி மன்னராக பதவியில் அமர்த்தப்பட்டார். அவருடன் மேற்கு நாடுகள் நெருங்கிய உறவைப் பேணின. 1979-ம் ஆண்டு மதவாதியான அயத்துல்லா கொமெய்னி அவர்களின் தலைமையில் ஈரானில் உருவான புரட்சியால் மொஹமட் ரிஜா பஹ்லவி ஷா பதவியில் இருந்து விலக்கப்பட்டு ஈரானில் மேற்கு நாடுகளுக்கு எதிரான மதவாத ஆட்சி உருவானது. அமெரிக்காவிற்கு ஈரானியப் புரட்சி பேரிடியாக அமைந்தது. ஈரானிய மாணவர்கள் அமெரிக்கர்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தனர். அமெரிக்கா ஈரானுடனான இராசதந்திர உறவைத் துண்டித்து ஈரான் மீது பொருளாதாரத் தடையையும் விதித்தது.

### ◆ மத்திய கிழக்கு கேந்திரோபாய ஈடு நிலைக்குத் தேவைப்பட்ட இஸ்ரேல்

மேற்கு நாடுகளுக்கும் முக்கியமாக அமெரிக்காவிற்கும் மூன்று காரணங்களுக்காக இஸ்ரேல் தேவைப்பட்டது. முதலாவது பல கிறிஸ்த்தவர்கள் ஜெருசலத்தைத் தலைநகராகக் கொண்ட ஒரு யூத அரசை விரும்பினார்கள். இரண்டாவது பாத் கட்சி என்னும் பெயரில் பல மத்திய கிழக்கு நாடுகளில் தனியார் சொத்துக்களை அரசுடமையாக்கும் அரசுகள் உருவானது. மூன்றாவது மத்திய கிழக்கில் சோவியத் ஒன்றியத்தின் ஆதிக்கத்தை சமாளித்தல் 1967-ம் ஆண்டு நடந்த போரில் இஸ்ரேல் ஈட்டிய வெற்றி அமெரிக்காவிற்கு இஸ்ரேல் மீது அதிக நம்பிக்கையை ஏற்படுத்தியது. இஸ்ரேல், ஜோர்தான், சவுதி அரேபியா, கட்டார், பஹ்ரேய்ன் ஆகிய நாடுகளுடன் அமெரிக்கா மத்திய கிழக்கில் தனது நட்பைப் பேணியது. அமெரிக்காவின் மிக நெருங்கிய நட்பு நாடாக இஸ்ரேல் இருந்து வருகின்றது.

அமெரிக்காவின் குடியரசுக் கட்சியினர் 2016-ம் ஆண்டு நவம்பரில் நடக்கவிருக்கும் அதிபர் தேர்தலில் இஸ்ரேலிய ஆதரவுச் செல்வந்தர்களிடமிருந்தும் இஸ்ரேலிய அரசிடமிருந்தும் ஆதரவை வேண்டி நிற்கின்றார்கள்போல் தெரிகின்றது. இவர்கள் இஸ்ரேலுக்கு ஆதரவாகச் செயற்பட்டு பராக் ஒபாமாவின் ஈரானுடனான பேச்சுவார்த்தைகளுக்கு முட்டுக் கட்டை போடுகின்றனர். அமெரிக்கப் பாராளுமன்றத்தின் இரு அவைகளும் இணைந்த கூட்டத்திற்கு அவர்கள் இஸ்ரேலியத் தலைமை அமைச்சரை உரையாற்ற அழைத்தனர் இது பற்றி ஒபாமாவுடன் ஆலோசிக்கவில்லை.

### ◆ தலையிடியான ஈரான்

அமெரிக்காவிற்கும் இசுலாமியத் தீவிரவாத அமைப்புக்களுக்கு ஈரான் பகிரங்கமாகவும் இரகசியமாகவும் உதவி செய்து வருகின்றது. அத்துடன் ஈரான் பெருமளவு யூரேனியத்தைப் பதப்படுத்தத் தொடங்கியது. ஈரானின் அணு ஆராய்ச்சி நிலைகள் மீது தாக்குதல் நடாத்தி அழிக்க வேண்டும் என்பது இஸ்ரேலின் உறுதியான நிலைப்பாடு. அப்படிச் செய்தால் ஈரானில் பல தீவிரவாதிகளையும் தற்கொடைப் போராளிகளையும் அது உருவாக்கும் என அமெரிக்கா கருதுகின்றது. பராக் ஒபாமா ஆட்சிக்கு வந்ததில் இருந்து ஈரானின் அணுக் குண்டு உற்பத்திக்கு எதிராக பொருளாதாரத் தடை ஐக்கிய நாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் கொண்டு வரப்பட்டது. அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் ஈரான் மீது விதித்திருந்த பொருளாதாரத் தடையால் 2013இன் முற்பகுதியில் ஈரானியப் பொருளாதாரம் சிதறும் ஆபத்து உள்ளது என பல பொருளாதார நிபுணர்கள் 2012,ல் எச்சரித்திருந்தனர். ஆனால் இன்று வரை ஈரான் பொருளாதரத் தடைக்கு எதிராகத்தாக்குப் பிடித்துக் கொண்டே இருக்கிறது. ஈரான் அணு குண்டு தாயாரிக்க அனுமதிக்க மாட்டோம் என இஸ்ரேலும் ஐக்கிய அமெரிக்காவும் உறுதியாக அறிவித்தன. ஈரான் அசையவில்லை. ஈரானின் யூரேனியம் பதப்படுத்தும் நிலையங்கள் மீது பல இணைய வெளித் தாக்குதல்களை இஸ்ரேலும் ஐக்கிய அமெரிக்காவும் இணைந்தும் தனித்தனியாகவும் நடாத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டது. ஈரானின் அணு விஞ்ஞானிகள் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டனர். ஆனாலும் ஈரான் தனது யுரேனியம் பதப்படுத்தலைக் கைவிடவில்லை. ஈரானின் யுரேனியம் பதனிடும் நிலையங்கள் மீது விமானங்கள் மூலம் தாக்குதல் நடாத்த வேண்டும் என இஸ்ரேல் அமெரிக்காவை வலியுறுத்தியது. பராக் ஒபாமா நிர்வாகம் பொறுமையக் கடைப்பிடித்து தந்திரமாகக் காய்களை நகர்த்தி ஈரானுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளைக் அமுல் படுத்தியது. பன்னாட்டு வங்கி கொடுப்பனவு முறைமையான SWIFT இல் இருந்து தந்திரமாக ஈரானை வெளியேற்றியது.

### ◆ ஒபாமாவிற்கு முட்டுக்கட்டை போடும் குடியரசுக் கட்சியினர்

பராக் ஒபாமா ஆட்சிக்கு வந்ததில் இருந்து அமெரிக்கப் பாராளுமன்றத்தின் மக்களவையில் குடியரசுக் கட்சியினரே பெரும்பான்மையினராக இருக்கின்றனர். அவர்கள் ஒபாமாவின் எல்லா நடவடிக்கைகளையும் எதிர்பது, முட்டுக் கட்டை போடுவது, சேதப்படுத்துவது ஆகியவற்றை செய்து வருகின்றார்கள். தற்போது அமெரிக்காவின் மூதவையிலும் குடியரசுக் கட்சியினரே பெரும்பான்மையினராகும். அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையிலும் செயற்பாடுகளிலும் இரு கட்சிகளும் ஒத்துப் போவதுண்டு. ஆனால் முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு வெளியுறவுக் கொள்கையில் முறுகல் நிலை நிலவுகின்றது. 2010-இல் ஒபாமா இரசியாவுடன் செய்த அணுப்படைக்கலன் குறைப்பு உடன்படிக்கை செய்ய முயன்றபோது குடியரசுக் கட்சியினர் தடைவிதிக்க முயன்றனர். ஆனால் அமெரிக்காவின் முன்னாள் ராசதந்திரிகளான கொலின் பவல், ஹென்றி கிஸ்ஸிங்கர் ஆகியோரின் எதிர்ப்பால் பின்வாங்கினர். ஈரான் விவகாரத்தில் குடியரசுக் கட்சியினர் பகிரங்கமாகவே ஒபாமாவின் வெளிநாட்டுச் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டை போடுகின்றனர். வெளியுறவுக் கொள்கையைச் செயற்படுத்தும் முழு அதிகாரம் அமெரிக்க அதிபருக்கு உண்டு. 2015 மார்ச் மாதம் 9-ம் திகதி குடியரசுக் கட்சியின் 47 மூதவை உறுப்பினர்கள் (செனட்டர்கள்) ஈரானிய ஆட்சியாளர்களுக்கு ஒரு பகிரங்கக் கடிதத்தை எழுதியுள்ளனர். அதில் ஈரான் பராக் ஒபாமாவுடன் செய்யும் ஒப்பந்தம் பராக் ஒபாமாவின் பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் அடுத்து வரும் அதிபரால் ஒரு கையொப்பத்துடன் செல்லுபடியற்றதாக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ◆ சட்ட விரோதமா? யூத அரசியல்தரகர்களின் பரப்புரையா?

நாற்பத்தேழு மூதவை உறுப்பினர்களின் ஈரானிய ஆட்சியாளர்களுக்கு எழுதிய கடிதம் அமெரிக்க வரலாற்றில் முன்பு எப்போதும் நடக்காத ஒன்றாகும். அக்கடிதத்தில் ஒபாமா 2017-ம் ஆண்டு ஜனவரியுடன் பதவியிழந்த பின்னர் அவர் பதவிக்கு வர முடியாது. இப்போது பதவியில் இருக்கும் மூதவை உறுப்பினர்கள் தொடர்ந்து பல ஆண்டுகள் பதவியில் இருப்பர் எனக் குறிப்பிடபட்டுள்ளது. இக்கடிதத்திற்கு முன்னின்று உழைத்தவர் ரொம் கொட்டன் என்னும் புதிய செனட்டர். இவர் போட்டியிட்ட போது இவருக்கு இஸ்ரேலுக்காகப் அமெரிக்காவில் பரப்புரை செய்யும் அமைப்புக்கள் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமாகச் செலவிட்டன.

இதனால் அவர் அமெரிக்க அரசியலில் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் கொடுத்த கடிதத்தை எழுதியதாகச் குற்றம் சாட்டப்படுகின்றது. அமெரிக்காவின் சில சட்டத்துறைப் பேராசிரியர்கள் இந்தக் கடிதம் 1799-ம் ஆண்டு அமெரிக்காவில் நிறைவேற்றப்பட்ட லோகன் சட்டத்திற்கு முரணானது என்றனர். குறித்த கடிதத்தில் ஒபாமா ஈரானுடன் செய்யும் அணு உற்பத்தி தொடர்பான உடன்படிக்கையை அமெரிக்கப் பாராளுமன்றத்தின் மூதவை மூன்றில் இரண்டு பங்கு பெரும்ப்பான்மையுடன் அங்கீகரிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அமெரிக்கா உலக அரங்கில் செய்யும் உடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையும் அமெரிக்க அதிபரே அங்கீகரிக்க வேண்டும். அதற்கு மூதவையின் ஆலோசனையும் சம்மதமும் பெறவேண்டும் என்பதே அமெரிக்க அரசியல் யாப்பின் படியான நிபந்தனையாகும் எனவும் சட்டத்துறைப் பேராசிரியர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். 47 மூதவை உறுப்பினர்களும் எழுதிய கடிதத்தில் அமெரிக்காவில் எப்படிக் காரியங்கள் நடப்பது என்பது தொடர்பாகப் பல தவறுகள் இருக்கின்றன என அமெரிக்க அரச திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓர் அமெரிக்க ஊடகம் அக் கடிதம் முழுவதும் யூத அரசியல்தரகர்களின் விரல் அடையாளங்கள் நிறைந்திருப்பதாகக் கருத்து வெளியிட்டுள்ளது.

*(தொடர்ச்சி 26ம் பக்கம்)*

AYURMEDICS
Ayurvedic Medical Practice
BRCP British Register of Complementary Practitioners 2015
ICNM Institute for Complementary and Natural Medicine Affiliated 2015

What specialist treatments we offer?
We offer time tested authentic Ayurvedic treatments for the following disorders:
* Rheumatoid Arthritis
* Osteoarthritis
* Gout
* Psoriasis
* Eczema
* Insomnia
Lumbar Spondylosis
* Cervical Spondylosis
* Diabetes
* Neurological Disorders
* Paralysis
* Multiple Sclerosis
* Post Natal Care
* Acne And Pimples
* Hair Loss And Dandruff
* Infertility
* PCOD, PCOS, Irregular Menstrual Disorders
* Asthma & Bronchitis
* Stress, Anxiety & Depression
* Obesity
* Hypertension
* Hyper And Hypothyroidism
* Post Cancer
* Rejuvenation
* Sports Injuries And Sprains
* Non-Specific Low Back Ache
WINTER SPECIAL
SAVE £55 from
Our Normal Price £ 175
3 sessions of Ayurvedic Therapeutic Massage + Detox Steam & 1 session of complementary Ayurvedic Herbal Facial
All for just £120 only
Ideal gift for your loved one or rejuvenate yourself for continuous wellness
505, London Road, Thornton Heath, Croydon, Greater London, CR7 6AR
For further details contact:
Dr RAJALAKSHMI RAMESH BAMS, SMBRCP, YIC
For an appointment call us now at 0203 6206 999 or 0785 0439 999
Web : www.ayurmedics.org
Mail : ayurmedics@gmail.com

# எசெக்ஸ் தமிழ்க் கழகத்தின் கலைவிழாவும் பரிசளிப்பு வைபவமும்









எசெக்ஸ் தமிழ்க் கழகத்தின் கலைவிழாவும், பரிசளிப்பு வைபவமும் கடந்த 07.03.2015 சனிக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஆண்டு தோறும் இலண்டனிலே தமிழ்த் திறன் போட்டியை மிகவும் வெற்றிகரமாக மாணவர்களுக் கிடையே நடாத்தி வரும் எசெக்ஸ் தமிழ்க் கழகம் இம்முறையும் நான்காவது தடவையாக தமிழ்த் திறன் போட்டியை நடாத்தி அதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அன்றைய தினம் பரிசளிப்பையும் வழங்கியிருந்தது. தொடர்ந்து நடன நிகழ்வுகள் வில்லுப்பாட்டு நாடகங்கள் பட்டிமன்றம் என எண்ணற்ற காத்திரமான நிகழ்வுகளும் இடம்பெற்றன.

நிகழ்வுகளின் போது எடுக்கபபட்ட படங்களையே நீங்கள் மேலே காண்கிறீர்கள்

# நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**MARCH 28 SATURDAY**

*வீணாலயா 2015*

சிறுப்பிட்டி பூமகள் நற்பணி மன்றத்தினால் நடாத்தப்படும் சிறுவர் பாடசாலைக்கு உதவும் வகையிலும், அங்குள்ளவர்களின் வாழ்வாதாரங்களை வளம்படுத்தவும் நன்கொடை சேகரிப்பதற்காக நடாத்தப்படும் கலாசார இன்னிசை நிகழ்வு.

நேரம்: மாலை 6.00 மணி முதல்

இடம்: Watersmeet Theatre,
Rickmansworth, Herts, WD3 1EH

**APRIL 11 SATURDAY**

*London Tamil Market*

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு பல்வேறு வணிக நிறுவனங்கள் சேர்ந்து நடாத்தும் லண்டன் தமிழர் சந்தை

நேரம்: காலை 10.00 மணி முதல்

இடம்: Byron hall, Harrow leisure centre, Harrow,
Middlesex, HA3 5BD, London

தொடர்புகளுக்கு : www.nachiyarevents.com

**APRIL 18 SATURDAY**

*16வது சைவ மாநாடு*

முதலாவது நாள் நிகழ்வுகள்.

இடம்: Woodbridge High School,
St Barnarby Road, Woodford Green,
Essex IG8 7DQ.

இரண்டாவது நாள் நிகழ்வுகள்.


இடம்: Alperton Community School (Annexe),
Ealing Road, Wembley, Middlesex
HA0 4PW.

நடந்த நிகழ்வுகள் மற்றும் நடக்க இருக்கும் நிகழ்வுகளை பிரசுரிப்பதற்கு தொடர்பு கொள்ளுங்கள்

Email: info@orupaper.com



# சம்பூர் அனல் மின்நிலையம் ஏற்படுத்தப்போகும் பேரோபத்து!



**கருணாதனன்**

மக்கள் வாழ முடியாத அளவுக்கு ஓர் காட்டுப் பகுதி என்று அரசாங்கம் சம்பூர் மக்களின் நிலங்களுக்கு முத்திரை குத்தியது. இது தனது சுயலாபம் கருதி செய்த ஓர் திட்டமாகும். அதாவது, அந்நிய செலவாணியைப் பெற வெளிநாட்டவர்களையும், வெளிநாட்டுக்கு பெண்களை வேலைக்கு அனுப்புவதையும் ஊக்குவிக்கும் இவ் அரசாங்கம், தனது கடனையும் சீன ஆதிக்கத்தில் நாம் கட்டுப்படவில்லை என்ற காரணத்துக்காகவும், இலங்கையின் கிழக்கு கரையோரத்தை இந்தியாவுக்கு வழங்கியது. இந்தியாவுக்கு கிழக்கு கரையோரத்தை வழங்காமல் இருந்திருந்தால் இன்று கிழக்கை சீனாவுக்கோ அல்லது ரஷ்யாவுக்கோ இந்த அரசாங்கம் தாரை வார்த்திருக்கும். கடல் நீரில் விவசாயம் செய்யும் சீனா, பாலைவனத்திலேயே விவசாயம் செய்யும் ரஷ்யா ஆகிய நாடுகள் செல்வச் செழிப்பு மிக்க சம்பூர் நிலத்தை கண்டு சும்மாவிட்டிருக்க வாய்ப்பே இல்லை. அந்த வகையில் மேற்குறித்த நாடுகள் கிழக்கு கரையோரத்தை கைப்பற்றாதது ஒரு ஆறுதலே இது மக்கள் பிரச்சினை. ஆனால், இன்று அந்த கிழக்கு கரையோரத்தை இந்தியா கைப்பற்றி இருப்பதனால் என்ன நடந்துள்ளது? புவியியல் ரீதியாக இலங்கையின் கிழக்குக் கரையோரமானது இயற்கைத் துறைமுகம், குடாக்கள், ஆழம் குறைந்த கடற்படுக்கை, சங்கமம் (மகாகவலி கங்கை கடலோடு இணைகிறது), கடல் நீரேரிகள் எனப் பல இயற்கையாகவே அமைந்துள்ளன. அதே நேரம் இந்து சமுத்திர ரீதியான கப்பல் போக்குவரத்தையும், சர்வதேசக் கடல் எல்லைகளையும் மேற்பார்வை செய்ய முடியும். அவுஸ்திரேலியா, சீனா, இந்தோனேஷியா போன்ற நாடுகளையும் அவதானிக்க முடியும்.

அந்தமான், நிக்கோபார் தீவுகளிலுள்ள இந்திய கடற்படைத் தளம் உள்ள பிளேஎயார் துறைமுகம் மற்றும் இந்திய யூனியன் பிரதேசமான கார் நிக்கோபார் தீவிலுள்ள கடற்படைத்தளம் ஆகியவற்றின் மேற்பார்வைக்கும் இந்தியாவுக்கும் இலங்கையின் கிழக்குக் கரையோரம் இந்தியாவுக்கு அவசியப்பட்டது எனலாம்.

### இந்திய அனல் மின் நிலையம்

நீண்டகாலமாக இழுபறியில் இருந்த இந்திய அனல்மின் நிலையம் தற்போது சம்பூரில் அமைவது ஓரளவுக்கு உறுதியாகிவிட்டது என்றே கூறவேண்டும். காரணம், அனல் மின் நிலையத்துக்கென சுமார் 1548 ஏக்கர் நிலப்பகுதியை கம்பி வேலிகளால் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் 208 குடும்பங்கள் வாழ்ந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேலை, 1548 ஏக்கரில் சுமார் 500 ஏக்கர் வரை சுத்தப்படுத்தப்பட்டு அனல் மின் நிலையம் அமைக்கும் ஆரம்ப கட்டத்தில் தயார் நிலையில் இருப்பதை காண முடிந்தது.

### அனல் மின் உற்பத்தி

இந்தியாவின் அனுசரணையுடன் அமையவுள்ள மின் நிலையத்தில் இலங்கையில் பல பிரதேசங்களுக்கு இருந்து வந்த மின் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என கூறப்பட்டது. அதற்காக 1000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் (500*2) இரண்டு உலைகளை அமைக்கவுள்ளதாகவே ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்டது. ஆனால், தற்போது (250 * 2) 500 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய இரு உலைகளை அமைப்பதாகவே அறிவிக்கப்பட்டுள்ளது என அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இம்மின் உற்பத்தியை இலங்கை மின்சார சபையும் இணைந்து இந்திய தேசிய அனல்மின் நிலைய கூட்டுத்தாபனத்துடன் சம்பூரில் அனல் மின் நிலையம் உருவாகவுள்ளது. இதற்கான ஒப்பந்தங்கள் 2006ஆம் ஆண்டு முதல் இழுபறியில் இருந்து வந்த நிலையில், கடந்த மாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்திய பிரதமர் மோடியுடன் இறுதி ஒப்பந்தத்தை மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் அமையவுள்ள இரண்டாவது நிலக்கரி அனல்மின் நிலையம் இதுவாகும்.

### மத்திய சுற்றாடல் அதிகாரசபை அனுமதி இல்லை

முழுக்க முழுக்க சம்பூர் மக்களின் நிலத்தில் அமையவுள்ள இந்திய அனல் மின் நிலையத்துக்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை இன்னும் அனுமதியளிக்கவில்லை. இப்போதுதான் சுற்றாடல் தாக்கம் குறித்து மக்கள் கருத்துக்கு விடப்பட்டுள்ளது. ஒரு மாதம் மட்டுமே ஆட்சேபனை வழங்க கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

வயல்வெளிகள் உள்ள இடத்தில் அமையவுள்ள அனல்மின் நிலையம் தொடர்பாக இந்திய அதிகாரிகள் மட்டுமே ஆராய்ச்சி செய்துவிட்டு செல்கிறார்கள்.

இலங்கையைச் சேர்ந்த எவரும் ஆராய்ச்சி செய்யவில்லை. திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த எவரும் அப்பகுதிக்கு செல்லவே முடியாதபோது, அங்கு எத்தகைய தாக்கம் ஏற்படும் என்று கூறமுடியும்?

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தினால் மக்கள் இன்றும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அந்த நிலையைத்தான் சம்பூர் மக்களும் எதிர்கொள்வார்கள் என்று அனுமானிக்க முடியும் என்கின்றனர் சூழலியல் ஆய்வாளர்கள்.

### சூழலியல் தாக்கம்

சம்பூர் பகுதியில் அனல்மின் நிலையம் அமைக்கப்பட்டால் ஏற்படும் தாக்கம் குறித்து ஆய்வுகளையும், ஆட்சேபனைகளையும் அரசுக்கு தெரிவிக்க தயாராகி வரும் ஆய்வாளர் திருச்செல்வம் கூறியதாவது..

“சம்பூர் அனல் மின் நிலையம் அமைக்கப்படுவது குறித்த தாக்கத்தை நீர், நிலம், ஆகாயம், உடலியல் தாக்கம் என்று பிரித்துக் கூறலாம்.

அனல் மின் நிலையத்தை அமைக்க கடல் நீரை பயன்படுத்தவுள்ளதாக கூறுகின்றனர். ஆனால், அது சாத்தியப்படாத ஒன்று. இதனால் நன்னீரே பெறப்படவுள்ளது. எனவே, நீரில் கடல் நீரும், நன்னீரும் மாசுபடக் கூடும்.

நன்னீரைப் பெறுவதால் சம்பூர் பகுதிகளில் நன்னீர் விஷமாகும் வாய்ப்புள்ளது. இரசாயனக் கலவைகள் இதில் கலக்கலாம், நன்னீரில் கழிவுகள் படிவதால் நீரிலுள்ள உயிரினங்கள் இறக்கும் வாய்ப்பேற்படுகின்றது. குடிப்பதற்கேற்ற நீராக நன்னீர் இருக்காது. சுன்னாகத்தை போலவே கிணறுகளில் கழிவு எண்ணெய் கலக்கும். சம்பூரில் ஏராளமான சிறுகுளங்களும் கிணறுகளும் இருக்கின்றன.

கடல் நீரை பெறுவதால் கடல் வாழ் உயிரினத்தின் சங்கிலித்தொடர் உடைபடுவதோடு, உயிரினம் அழிவடையும் நிலை ஏற்படும். கடல் நீரில் அனல்மின் நிலைய கழிவுகளை கொட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவே தெரியவருகிறது. இக்கழிவுகள் மிகவும் வெப்பமானவை. ஆழமற்ற பறவைக்கடலான கொட்டியாரக் குடாவில் கழிவுகள் கொட்டப்பட்டால் மீன் உற்பத்தி பாதிக்கப்படும். அந்த வெப்பமான நீரில் மீன் இறந்து போகும், இடம்பெயர்ந்து வேறு இடங்களில் முட்டையிடும். இனி மீன்களை கொட்டியாக்குடாவில் காண்பதே அரிதாகிவிடும்.

அதேவேளை கடல் நீர் அலைகளினூடாக பறந்து செல்வதால் கிழக்கு கரையோரத்தின் கடல் சார் உயிரின பல்வகைத்தன்மைகள் பாதிக்கப்படும். கடல்வாழ் தாவரங்களும் பாதிக்கப்படும்.

சம்பூர் நிலம் பொன்விளையும் பூமி எனப்படுமளவுக்கு வளமான மண்ணைக் கொண்டது. இங்குள்ள நன்னீரை அனல்மின் நிலையத்துக்காக எடுக்கும்போது, நன்னீரில் கடல் நீர் கலக்கும். நன்னீர் இல்லாமல் போகும்போது, கடல் நீர் நிலக்கீழ் நீராக ஊடுருவும்.

**அனல் மின் நிலையத்தில் வேலை செய்யும் அளவுக்கு உயர் தொழில்நுட்ப அறிவு கொண்ட மக்கள் சம்பூரில் இல்லை. விவசாயம், மீன்பிடி என்று வாழ்ந்த மக்களுக்கு அனல் மின் நிலையத்தில் என்ன வேலை செய்ய முடியும்? இன்னும் பல தலைமுறைகள் அங்கு வாழ்ந்தாலும் உயர்தர வேலை ஒன்று கிடைக்குமா என்பது சந்தேகமே.**

இதனால் நிலம் வளமிழந்து உப்பு கலந்து உவர்நிலமாகும். தாவரங்கள் வளராது. நிலம் தொடர்பான அனைத்து உயிரினம், தாவரம் எல்லாம் அழிவடையும். இதனால் நிலம் தரிசாகி, பாலைவனமாகும் நிலையும் ஏற்படும். விவசாய நிலங்களில் இனி தொழிற்சாலைகளை அமைத்து சீவிக்க முடியும் என்ற நிலை ஏற்படும். காட்டு வளமும் அழிவடையும்.

இந்த நிலங்களில் தாவரங்கள் இல்லாது போகும்போது, ஒட்சிசனை பெறமுடியாது. மனிதர்களுக்கு காபனீர்ரொட்சைட்டை சுவாசிக்க வேண்டி ஏற்படும். இதனால் சுவாச நோய், புற்றுநோய், காசநோய் மற்றும் பல பரம்பரை நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

நிலத்திலிருந்து சுமார் ஒன்றரை மீற்றர் ஆழத்திலிருக்கும் பாறைகளினூடாக அனல் மின் நிலைய கழிவு நீர் ஊடுருவி கிணறுகளுக்குள் புகுந்தால் அதனையே மக்கள் குடிநீராக பயன்படுத்த வேண்டியநிலை ஏற்படும்.

இவ்வாறு சம்பூரின் முழுக் கட்டமைப்பும் மாற்றம் பெற்று அழிவு நிலை ஏற்படும் என்றார்.

(தொடர்ச்சி 28ம் பக்கம்)



- ✓ Accountancy & Auditing
- ✓ Business Start up Advice
- ✓ Business Plans & Cash Flow Forecasts
- ✓ Personal tax Affairs & Self Assesment
- ✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
- ✓ Company Formation
- ✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
- ✓ Attending VAT & PAYE visits
- ✓ Tax Investigations
- ✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# மோடி சொன்ன செய்தி

பாகம் 170

கையில் தேனிருந்தால் நக்கத்தான் சொல்லும் என்பார்கள். அதுபோல அதிகாரம் கைக்கு வந்துவிட்டால் அடக்கியாளத்தான் சொல்லும். அந்த அவல நிலைக்கு ஆளாக்கப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்டவர்கள்தான் ஈழத்தமிழர்களாகிய நாம். சர்வசன வாக்கெடுப்பு என்னும் ஜனநாயகத்தின் முக்கியமான சிறப்பம்சம் இலங்கைத் தீவைப் பொறுத்தவரை செல்லாக் காசாகிப் போனதற்கு அரசியலதிகாரம் பெரும்பான்மையினத்தவரின் கையில் முற்றாக ஒப்படைக்கப்பட்டதுதான் காரணமாகி விட்டது. அல்லாமல் ஓர் சமஷ்டி அரசியலமைப்பின் கீழான அரச நிர்வாகப் பொறிமுறைக்குள் தீவின் ஆட்சியதிகாரம், அதற்கு சுதந்திரம் வழங்கப்பட்ட காலத்திலேயே வழங்கப்பட்டிருந்தால், அறுபத்தியேழு வருடங்களாக ஏற்பட்ட பின்னடைவு சிறீலங்காவிற்கு ஏற்பட்டிருக்காது.

ஆட்சியதிகாரம் கையில் கிடைத்ததும் பெரும்பான்மை இனத்துத் தலைவர்களுக்குக் கூடவே இது தங்களது ஆட்சி என்னும் ‘அப்பே ஆண்டுவ’ மனப்பான்மையும் பிறந்து விட்டது. அதனால் தமிழர்களுக்கு இங்கு இடமில்லை என்ற கருத்துருவாக்கத்தை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தத் தொடங்கி விட்டார்கள். அதன் விளைவாக இன்றுவரை தமிழ் மக்களின் தாயகத்தில் தங்களது ஆட்சியதிகாரத்தை நிலை நிறுத்துவதிலேயே குறியாக இருக்கிறார்கள். தந்தை செல்வா முன்வைத்த மிகவும் நியாயமான கோரிக்கையான சமஷ்டி அரசியலமைப்பு மிகவும் மூர்க்கத்தனமாக எதிர்க்கப்பட்டது.

**கடற்படையினருக்கும் இலங்கை மீனவர்களுக்கும் கொம்பு சீவி விட்டு பிரச்சனைகளை உருவாக்கப் பார்க்கும் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கமே தடுத்து நிறுத்த வேண்டும்.**

சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட பாரதப் பிரதமர் திரு நரேந்திர மோடி இத்தகைய சமஷ்டி அமைப்பைச் சூசகமாக சிங்களத்தலைவர்கள மத்தியில் சிலாகித்துச் சென்றிருப்பது அவர்களது ‘அப்பே ஆண்டுவ’ கோட்பாட்டுக்கு விடுக்கப்பட்டோர் மறுப்பாகவே கொள்ளப்பட வேண்டும்.

இலங்கையில் படிப்படியாகத் தமிழர்களின் இருப்பை நீர்த்துப் போகச் செய்து, தீவைத் தனியே சிங்களவர் நாடாக்கிவிட வேண்டுமென்னும் சிங்களத் தலைவர்களின் நெடுநாள் திட்டத்தை இந்தியா வெறுமனே பார்த்துக் கொண்டு இருக்காது என்பதை வலியுறுத்த 13வது அரசியலமைப்பை நடைமுறைப் படுத்துவதோடு அதற்கு மேலாகவும் இலங்கை தமிழ் மக்களுக்குச் செய்ய வேண்டுமென்பதை பாரதப்பிரதமர் வெகு தெளிவாக அறிவித்திருப்பது தமிழர்களை ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு விட வைத்திருக்கிறது. பாரதத்தின் விடுதலைக்காக எழுச்சிக்குரல் எழுப்பிய பாரதி ‘வந்தே மாதரம்’ என்ற வங்காளக் கவிஞர் பங்கிம் சந்திர சட்டர்ஜீயின் வரிகளோடு, எங்கள் ‘மாநிலத் தாயை வணங்குதும் என்போம்’ என்று தனது தமிழ் மாநிலத்திற்கும் வணக்கத்தைச் செலுத்தினார். தனது தாய் நாட்டின்மீதும் அதே வேளை தனது தாயகமான செந்தமிழ் நாட்டின் மீதும் சமமான பற்றுக் கொண்டிருந்த இந்தியாவின் தேசியக் கவிஞரான பாரதியைமேற்கோள் காட்டி, தட்டுத் தடுமாறியாவது “சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம்” என்ற அவரது வரிகளைக் கூறிய பாரதப் பிரதமர் இந்தியாவின் ஆதிக்க எல்லையைக் கடந்து இலங்கை விடுபட்டு விடமுடியாது என்பதையும் நாசூக்காகத் தெரிவித்திருக்கிறார்.

தமிழ் தலைவர்களிடம் “இந்தியாவை நீங்கள் நம்புகிறீர்களா?” என்ற கேள்வியைக் கேட்டு தமிழர்களது இந்தியாவின் மீதான விசுவாசத்தை உறுதிப் படுத்திக் கொண்டதோடு கூடவே, கவலை வேண்டாம் இந்தியா எப்போதும் இலங்கைத் தமிழர் நலனில் அக்கறை செலுத்துமென்பதையும் தெரிவித்ததன் மூலம் பாதுகாப்பற்றவர்களாயிருக்கும் தழர்களுக்கு இந்தியாவின் அபயக்கரம் எப்போதும் காட்டப் படுமென்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

மொத்தத்தில் பிரதமர் மோடியின் இலங்கை விஜயம் சிங்கள தமிழ் மக்களின் நலன்களில் இந்தியாவின் அக்கறையை வெகு தெளிவாக வெளிப்படுத்தியிருப்பதோடு இலங்கை இந்தியாவை விட்டு அரசியல், ராஜதந்திர, பொருளாதார, கலை, கலாச்சார, சமய விடயங்களில் இலகுவாக வெளியேறிவிட முடியாது என்ற செய்தியையும் சொல்லியிருக்கிறது. இனிச் சிங்களத் தலைவர்களுக்குச் செய்ய வேண்டிய கட்டாயக் கடமைகள் நிறையக் காத்திருக்கின்றன. ஜெனிவாவிலும் இலங்கை தொடர்பான மனிதவுரிமை மீறல் அறிக்கை சமர்ப்பிக்கப் படாது எதிர்வரும் செப்டம்பர் வரை தற்காலிகமாகப் பிற்போடப்பட்டு புதிய அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்டிருக்கும் அவகாசம் அவ் அரசாங்கத்தின் தலைவர்களுக்கு இனப்பிரச்சனைக்கான தீர்வு விடயத்தில் இருக்க வேண்டிய அக்கறையை வெளிப்படுத்துவதால், திரு மோடி அவர்களின் இலங்கைக்கான விஜயம் தக்க நேரத்தில் திட்டமிடப்பட்டதாகவே காணப் படுகின்றது.

### மாமனைப் பின்பற்றும் மருமகன்

ஆனால் புதிய அரசாங்கத்தின் பிரதம மந்திரியான திரு ரணில் விக்கிரம சிங்கவின் சில நடவடிக்கைகளோ இவை எதற்கும் பச்சைக் கொடி காட்டுவதாகத் தெரியவில்லை. அவரின் சமீபத்திய தந்தி தொலைக்காட்சிக்கான பேட்டியொன்றில், அவர் கூறியிருக்கும் கூற்றுக்கள் அவரது எதிர்கால அரசியற்போக்கு எவ்வாறிருக்கப் போகின்றது என்பதைக்காட்டும் ஆபத்தான சமிக்ஞைகளாயுள்ளன. அப் பேட்டி அவரது எதிர்கால இனவாத நடவடிக்கைகளுக்கு கட்டியம் கூறுவது போலிருக்கிறது. அவர் மனித உயிர்களைத் துச்சமென நினைத்து திசையறியாத கடலில் எல்லைதாண்டி வரும் தமிழக மீனவர்களைச் சுட்டுக் கொல்வது சரியான செயலேயென்று இலங்கைக் கடற்படையின் செயலை நியாயப்படுத்துகிறார். இந்தியாவின் அனுசரணையோடு கொண்டுவரப்பட்ட 13ம் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் மாகாண சபைகளை, குறிப்பாக வடமாகாண சபையையும் அதன் முதலமைச்சரையும் அவமதிக்கும் விதத்தில் கருத்துக்களைக் கூறுகிறார். தான் பாராளுமன்றத்துக்கும் அதன் பிரதிநிதிகளுக்கும்தான் மதிப்பளிப்பேன் என்கிறார். மீண்டும் ஒற்யைாட்சித் தத்துவத்தை வலியுறுத்தி, 13ம் திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்டுத் தற்போது முளை விட்டுக்கொண்டிருக்கும் சமஷ்டியைத் தூக்கியெறிந்து, தமிழர்களின் பிரதேசத்திலுள்ள அவர்களது ஆட்சியதிகாரத்தை அவமதித்து இல்லாதொழித்து விடவேண்டுமெனப் பார்க்கிறார். காலங்காலமாகச் சிங்களத் தலைவர்கள் இதைத்தான் செய்தார்கள், செய்து கொண்டிருக்றார்கள். அதன் விளைவாற்தான் இலங்கை இத்தனை கேடுகெட்டுச் சீரழிந்து தற்போது இனக்கொலையாளி என்று எண்ணும் படியான சர்வதேசத்தின் சந்தேகப் பார்வைக்குள் அகப்பட்டுத் தவிக்கிறது.

## அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

ஆரம்பத்தில் பழைய பிரதமர் பண்டாரநாயக்கா இலங்கையின் பல்லினத் தன்மையை ஏற்றுக்கொண்டு தந்தை செல்வாவுடன் ஓர் அதிகாரப்பகிர்விற்கான ஒப்பந்தத்தைச் செய்து அதனை நடைமுறைப்படுத்த முற்பட்டபோது அத்திட்டத்தை முன்னின்று எதிர்த்தவர் தற்போதைய பிரதமரின் குருவும் மாமனுமான பழைய ஜனாதிபதி ஜே ஆர் ஜயவர்த்தனா. தமிழர்களுக்கு பண்டா செல்வா ஒப்பந்தத்தின் மூலம் ஓர் சுயாட்சியமைப்பு கிடைத்துவிடக் கூடாது என்பதற்காக கண்டிவரை பாதயாத்திரை சென்று இனத்துவேச விதையைத் தூவியதன் மூலம் பல இனக்கலவரங்களைத் தூண்டி விட்டது போதாதென்று திரு பண்டாரநாயக்கா சுட்டுக்கொல்லப்படவும் இத்தகைய செயல்கள் காரணமாயிற்று. 1983 இல் தமிழர்கள் மீதான இனவெறித் தாக்குதல்கள் உக்கிரமடையவும் ஜே ஆரின் பாராளுமன்றப் பேச்சே தூண்டுகோலாயிருந்தது. “யுத்தமென்றால் யுத்தம் சமாதானமென்றால் சமாதானம்” என்று அவர் பெரும்பான்மையினரை அப்பாவித் தமிழர்களுக்கு எதிராகப் பொறுப்பற்ற விதத்தில் தூண்டி விட்டதன் மூலம் மீண்டும் இனக்கலவரம் 1983இல் உருவாயிற்று. இறுதியில் இந்தியாவின் நேரடித் தலையீட்டினால் வேறு வழியின்றி ராஜீவ் ஜேஆர் ஒப்பந்தம் கைச்சாத்தாகி சமஷ்டியமைப்புக்கு வழிவகுக்கக்கூடிய 13வது அரசியலமைப்புத் திருத்தச்சட்டத்தை ஜே.ஆரே கொண்டு வரவேண்டியதாயிற்று.

தற்போதுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் மாமனைப் பின்பற்றி பொறுப்பற்ற கருத்துகளைக் கூறுவதன்மூலம் என்னென்ன அசம்பாவிதங்களை ஏற்படுத்தப் போகிறாரோ தெரியவில்லை. அவரது “சுட்டுக் கொல்லுவோம்” கூற்றினால் ஏற்கனவே இனவெறியோடு பாக்கு நீரிணையில் உலவித்திரியும் இலங்கைக்கடற்படையினர் தெம்பூட்டப்பட்டு, கடலில் திசை தெரியாது அலையும் அப்பாவித் தமிழ் மீனவர்களைக் கொன்றுகுவிக்க நல்ல வழியேற்பட்டிருக்கிறது. இது எங்குபோய் முடியுமோ தெரியவில்லை.

“யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்

சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு” என்கிறார் வள்ளுவர்.

**எதிர்காலப் பிரதமராகத் தமிழர்களின் ஆதரவுடன் அவர் தெரிவு செய்யப்படவேண்டுமானால் அவலை நினைத்து உரலை இடிக்கும் இத்தகைய செயற்பாடுகளை அவர் காலப்போக்கில் மாற்றிக் கொள்வதே சிறந்தது.**

பிரதமர் மோடியின் வருகையைக் கட்டியங் கூறச் சமீபத்தில் இலங்கைவந்த இந்தியாவின் வெளியுறவு மந்திரி சுஷ்மிதா சுவராஜிடம் தான் தொலைக்காட்சிப் பேட்டியில் அவ்வாறு கூறியதையிட்டு மனம் வருந்துவதாக திரு ரணில் விக்கிரமசிங்க கூறியதாகச் செய்தி வந்தது. அதன் பின்ரும் தனது நிலைப்பாட்டிலிருந்து மாறாமல் அவரது பேட்டிகள் அமைவதாகவும் செய்திகள் கூறுகின்றன. கடற்படையினருக்கும் இலங்கை மீனவர்களுக்கும் கொம்பு சீவி விட்டு பிரச்சனைகளை உருவாக்கப் பார்க்கும் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கமே தடுத்து நிறுத்த வேண்டும்.

**சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட பாரதப் பிரதமர் திரு நரேந்திர மோடி இத்தகைய சமஷ்டி அமைப்பைச் சூசகமாக சிங்களத்தலைவர்கள் மத்தியில் சிலாகித்துச் சென்றிருப்பது அவர்களது ‘அப்பே ஆண்டுவ’ கோட்பாட்டுக்கு விடுக்கப்பட்டவோர் மறுப்பாகவே கொள்ளப்பட வேண்டும்.**

அவ்வாறே, தமிழர்கள் பெரிதும் மதிக்கும் தங்களது முதலமைச்சரைப் பொய்யனென்றும் அவரைத் தான் சந்திக்கப் போவதில்லையென்றும் கூறி மாகாண அரச நிர்வாகத்தை அவமதிக்க முயலும் அவரது செயற்பாடுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். எதிர்காலப் பிரதமராகத் தமிழர்களின் ஆதரவுடன் அவர் தெரிவு செய்யப்படவேண்டுமானால் அவலை நினைத்து உரலை இடிக்கும் இத்தகைய செயற்பாடுகளை அவர் காலப்போக்கில் மாற்றிக் கொள்வதே சிறந்தது.

*தொடருவம்..*


பிரித்தானியா

TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312

உங்கள் வாழ்க்கைத் துணையை

தேர்ந்தெடுக்க வேண்டுமா?

TEL: 647 724 4188 FAX : 416 438 7855

கனடா



வெகுவிரைவில் தரணியெங்கும்...

# தமிழ்

வணக்கம் தமிழ் | ஞாபகம் வருதே | விம்பம் | உப்பு புளி காரம் |

| வெள்ளித் திரை | ஒளித்தடம் | மயக்கும் மாலைப் பொழுது | அரும்புகள் |

| நான் நீ ! | மருத்துவம் | நாம் யார் ? | நடந்து வந்த பாதை |

| வேங்கைகள் | பாட்டுக்குப் பாட்டு | யாதும் ஊரே | உண்மையின் வெளிச்சம் |

| தரிசனம் | நிகழ்வுகள் | இன்றைய பார்வை |

மற்றும் பல சுவையான நிகழ்ச்சிகள்...

**மேலதிக விபரங்களுக்கு**

Tel : **020 7043 4316**

Web : www.tamil.com

Facebook.com/tamiltelevisionnetwork | @tamiltvnetwork

# தமிழ்த் தேசியக் கட்சிகள் பாராளுமன்றத் தேர்தலில் பங்கெடுப்பது முரண் நிலையானதா ?




**- குமாரவடிவேல் குருபரன்**

*தாயகம் - தேசியம் - சுயநிர்ணயம் எனும் கோட்பாட்டில் உறுதியாகவுள்ள தமிழ்த் தேசியவாதிகள், சிறிலங்காவின் அரசியல் அமைப்பின் ஆறாவது திருத்தத்தை ஏற்று பிரிவினைக்கு எதிராக சத்தியப்பிரமாணம் செய்வதற்கு இணங்குவது முரண்நிலையை தோற்றுவிக்கிறது என்ற கருத்து பொதுவில் நிலவுகிறது. ஒரு புறம் தமிழ்தேசியவாதிகளை பாராளுமன்றத்திற்கு செல்லவிடாது தடுக்கும் ஒரு முயற்சியாக இக்கருத்து முன்வைக்கப்பட்டபோதிலும், இதிலுள்ள தர்க்க ரீதியான நியாயத்தை புறந்தள்ளிவிட முடியாது. ஆகவே இவ்விடயம் தொடர்பாக யாழ் பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளரும், சர்வதேச சட்டவியல் தொடர்பான கற்கைநெறியில் ஆய்வுமாணவராகவுள்ளவருமான திரு. குமாரவடிவேல் குருபரன் அவர்கள் தமது வலைத்தளத்தில் வழங்கிய விளக்கத்தினை இங்கு தருகிறோம்.*

**1**. தேசம், சுயநிர்ணயம், தாயகம் போன்றவற்றைக் கோருவது தனி நாட்டைக் கோருவதாகாது. தேசமொன்று தனக்கெனவொரு தனி நாட்டை அமைப்பதன் மூலமாக தனது நோக்கங்களை அடைந்து கொள்ள முடியும். அதே வேளை ஓர் அரசிற்குட்பட்டு சுய ஆட்சி (autonomous self-government) மூலமாகவும் அந்த நோக்கங்களை அடைந்து கொள்ளலாம். உதாரணம்: ஸ்கொட்லாந்து, கியுபெக் பிரதேசங்கள் சுய ஆட்சி உடையவை அதே வேளை தம்மை தேசமென்று கருதுபவை (ஒரு போதும் தம்மை சிறுபான்மை எனக் கருதாதவை). ஆனால் பெரிய அரசொன்றுக்குள் அடங்குபவை. தேசம் (Nation) என்பதையும் அரசு (State) என்பதையும் ஒத்த சொல்லாகக் கருதக் கூடாது என்று அரசியல் விஞ்ஞான மாணவர்களுக்கு முதலாம் ஆண்டிலேயே பாடம் சொல்லிக் கொடுக்கப்படுவது. தேசிய அரசு (Nation-State) (ஒரு தேசம், ஒரு அரசு) என்பது இன்று உலகில் எங்கனும் நடைமுறையில் சாத்தியமில்லை. ஆகவே தேசம், சுயநிர்ணயம், தாயகத்தை கோருவது தனி நாட்டைக் கோருவதாகாது. அந்தந்த தேசங்களின் அனுபவப் படி ஒன்றுபட்ட அரசுக்குள் சுய ஆட்சி ஒன்று சாதியப்படாவிடில் / திருப்தி தராவிடில் தனி நாட்டுக் கோரிக்கை முன் வைக்கப்படுகின்றது. தமிழர்கள் இந்த நிலையை 1976 இல் வந்தடைந்தார்கள். வட்டுக்கோட்டைத் தீர்மானம் இதை வெளிப்படுத்துகின்றது. தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள் அதனை பேரம் பேசுவதற்காகக் கொண்டு வந்தோம் என்றார்கள். ஆனால் மக்களைப் பொறுத்தவரையில் அதை ஒரு தீர்க்கமான முடிவு என்றே கருதினர். இதற்காக ஆயுதம் ஏந்தியும் போராடினோம். போருக்குப் பிந்திய நிலையில் நிலையில் தனி நாட்டைப் பற்றி பேச முடியாததாக இருக்கலாம். ஆனால் தாயகம், தேசம், சுயநிர்ணயம் என்பவற்றை பற்றி பேசாமல் இருக்க முடியாது. தீர்வுக்கான கோட்பாட்டு அடிப்படை அது தான். தீர்வு தனி நாடாக இருக்கலாம். சுயாட்சியாக இருக்கலாம்.

**2**. இலங்கைக்குட்பட்டு அரசியல் செய்யும் எந்த குழுவும்/கட்சியும் அரசியலமைப்பின் 6ஆம் திருத்தம் பிரகாரம் தனி நாடு கோர முடியாது. கோருவது தண்டனைக்குரிய குற்றமாகும். இன்றைய நிலையில் TNA 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவும் அதற்கு அப்பால் போகவும் கோருகிறது. TNPF ஒரு இலங்கைக்குள் (அரசுக்குள்) இரு தேசங்கள் என்ற கோட்பாடு தமது கொள்கை என்கின்றனர். கியுபெக் கட்சிகளின் கொள்கைகளை ஒத்தது இவ் நிலைப்பாடு. இந்த 'ஒரு நாடு இரு தேசம்' என்ற கொள்கை சமஷ்டி மூலமாகவோ கூட்டு சமஷ்டி மூலமாகவோ எய்தப்படலாம். கியுபெக்கில் சமஷ்டி என்பதற்குப் பதிலாக இறைமையான தேசங்களின் சங்கமம் (sovereign association) என முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் அழைத்தார்கள். ஆகவே TNPFஉம் தனி நாட்டைக் கோரவில்லை. அவர்களது கொள்கையை 6ஆம் திருத்தத்திற்கு உட்பட்டு ஓர் உச்சக் கட்டக் கோரிக்கையாக (maximalist demand) நான் பார்க்கிறேன். TNA யின் கொள்கையை 6ஆம் திருத்தத்திற்குட்பட்ட குறைந்தபட்சக் கோரிக்கையாக (minimalist) கோரிக்கையாகக் கருதலாம் (13 ஆம் திருத்தத்தை குறைந்த பட்சக் கோரிக்கையாகக் கூடக் கருதக் கூடா? எனவே TNA யின் நிலைப்பாடு குறைந்த பட்சக் கோரிக்கையிலும் தாழ்ந்தது என்பது எனது நிலைப்பாடு). ஆக மொத்தத்தில் தனி நாட்டை கோராததால் இவ்விரு கட்சிகளும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதில் முரண் இல்லை அவர்கள் 6ஆம் திருத்தத்தை ஏற்றுக் கொண்டு பாராளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் எடுப்பதில் ஒரு முரணும் இல்லை. இலங்கையின் அனைத்துப் பொது ஊழியர்களும் 6ஆம் திருத்தத்தின் கீழ் உறுதிமொழி எடுத்தே பதவி வகிக்கின்றனர் என்பதையும் கவனிக்க வேண்டும். என்னைப் போன்ற சட்டத்தரணிகளுக்கும் இது பொருந்தும்). இந்த விடயத்தில் முக்கியமான விஷயம் ஒன்று உள்ளது: தமிழ்க் கட்சிகள் எவையும் தனி நாட்டைக் கோரவில்லை என்பது அவர்கள் அதனை நிராகரிக்கிறார்கள் என்பதால் அல்ல. சட்டத்திற்குட்பட்டு கோர முடியாது என்பதால் சிலரும் ? கோர விருப்பமில்லை என்பதால் மற்றவர்களும் கோருவதில்லை என்பது கவனிக்கப்படலாம். எதற்கு யார் பொறுத்தம் என்று நீங்கள் முடிவெடுங்கள்.

**3**. தனி நாட்டைக் கோர முடியாது என்று 6ஆம் திருத்தம் சொல்வது பேச்சுச் சுதந்திரத்திற்கு முரணானது. (அதன் பொருட்டு வன்முறையை பாவிப்பதை வேண்டுமென்றால் ஒரு அரசு தடை செய்யலாம். ஆனால் அப்படிக் கோருவதற்கான பேச்சுச் சுதந்திரம் உண்டு). அதையும் தாண்டி தமிழர்களது சுய ஆட்சிக் கோரிக்கையையும் தனி நாட்டுக் கோரிக்கையாகக் கருதி எமதரசியலை நசுக்கும் இலங்கை அரசாங்கங்களின் செயற்பாடுகளை பட்டியலிட்டு, சர்வதேச சட்டத்தோடு 6ஆம் திருத்தம் முரண்படும் தன்மையை தமிழ் சிவில் சமூக அமையம் சென்ற வருடம் எழுத்து மூல மற்றும் வாய் மொழி மூல சமர்ப்பணம் ஒன்றின் மூலம் ஐ. நா மனித உரிமைக் குழுவுக்கு சமர்ப்பித்தது.

மேலதிகக் குறிப்பொன்று: 6ஆம் திருத்தத்தை நீக்கக்கோருவதே தனிநாட்டைக்கோருவதாகும் என்று சிலத் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் பயப்படுகின்றனர். 6ஆம் திருத்தம் நல்லதோர் ஏற்பாடு என்று கருதும் தமிழ்த் தேசிய (?) அரசியல்வாதிகளும் உளர். அப்படி நீக்கச் சொல்லிக் கேட்டால் கேட்டால் சிங்கள மக்கள் கோவித்துக் கொள்வர் என்று கருதிக் கேட்காமல் இருப்போரும் உளர்.

**4**. தமிழ்த் தேசியக் கட்சிகள் பாராளுமன்றத் தேர்தலில் பங்கெடுப்பது கொள்கை முரணானதன்று என்பதற்கான தர்க்க நியாயம் என்ன? ஒரு மக்களை பிரதிநித்துவப்பதுவதாக ஒரு குழுமத்தை / அமைப்பை/ கட்சியை நாம் ஏற்றுக் கொள்வதென்பது சனநாயாக ரீதியாகவே நிரூபிக்கப் பட வேண்டும் என்பது உலக நியதியாக இருக்கின்றது. ஏற்புடைத்தன்மையை (legitimacy) நிரூபிப்பதற்கு சனநாயகத் தேர்தல்கள் முக்கியமான வழியாக இருக்கின்றன. (அவை மட்டுமே ஒரே வழி என்பதை ஏற்றுக் கொள்வதற்கில்லை.) ஆகவே பாராளுமன்றத் தேர்தலில் பங்குபற்றுவது அவசியமாக இருக்கின்றது. ஐரிச் குடியரசு இராணுவத்தின் (IRA) அரசியல் பிரிவான Sinn Fein கூட இவ்வாறான தேர்தல்களில் பங்கெடுத்துள்ளனர் (ஆனால் தெரிவு செய்த பின்னர் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கும் அரசியலை பின்பற்றுபவர்கள்). சுயநிர்ண உரிமையைக் கோரும் பல தேசங்கள் எந்த அரசிடமிருந்து சுய நிர்ணய உரிமையைக் கோருகின்றனரோ அந்த அரசின் பிரதிநித்துவ அமைப்புக்களில் தாம் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றமையை வெளிப்படுத்துவதற்கு பயன்படுத்தியுள்ளனர் என்பதற்கு இன்னும் பல சான்றுகள் உண்டு.


**6ஆம் திருத்தத்தை நீக்கக் கோருவதே தனி நாட்டைக் கோருவதாகும் என்று சிலத் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் பயப்படுகின்றனர். 6ஆம் திருத்தம் நல்லதோர் ஏற்பாடு என்று கருதும் தமிழ்த் தேசிய (?) அரசியல் வாதிகளும் உளர். அப்படி நீக்கச் சொல்லிக்கேட்டால் கேட்டால் சிங்கள மக்கள் கோவித்துக்கொள்வர் என்று கருதிக் கேட்காமல் இருப்போரும் உளர்**

அப்படியென்றால் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதும் சரி தானே என்று கேட்கப் படக் கூடும். பாராளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல் போன்றவற்றில் போட்டியிடுவதற்கும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கும் இடையில் வித்தியாசம் உண்டு. பாராளுமன்றத் தேர்தல் தான் எமது பிரச்சனைக்கான தீர்வு என்று யாரும் கூறுவதில்லை. உள்ளூராட்சி அமைப்புக்களுக்கும் இது பொருந்தும். மாகாண சபை அப்படிப்பட்டதல்ல. அது எமது பிரச்சனைக்கான தீர்வாக முன் வைக்கப்படுவது. அதனைப் பகிஷ்கரிப்பது ஒரு அரசியல் குறியீடாக ஒரு அரசியல் கட்சி கருதலாம். அதுவோர் நியாயமான நிலைப்பாடு. அதன் தந்திரோபாயரீதியாக சரி, பிழை பற்றி வாதிடலாம். ஆனால் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதும், பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கும் இடையில் வித்தியாசம் இல்லை என்று கூறுவது அபத்தமானது.

தமிழ் சிவில் சமூக அமையம் மாகாண சபைத் தேர்தலில் நேரடியாக இவ்விரு கட்சிகளும் போட்டியிடக் கூடாது என்று ஆரம்பத்தில் கூறியது. பொதுப் பட்டியல் ஒன்றைப் போட்டு அதற்கு வாக்கு கேட்டு அதில் தமிழ்த் தேசிய விரோத சக்திகள் வராது பாதுகாக்கலாம் என்று நாம் அபிப்பிராயம் சொன்னோம். கூட்டமைப்பு நேரடியாக போட்டியிட்டது. வேறெவரும் வராதிருப்பதைத் தவிர்ப்பதற்கு அவர்களுக்கே வாக்களியுங்கள் என்று தேர்தலுக்கு முன்னர் நாமும் மக்களுக்கு அழைப்பு விட்டோம்.



# கூட்டமைப்புத் தலைமையைக் குழப்பும் விக்கினேஸ்வரனின் அதிரடி நகர்வுகள்



**- இராஜயோகன்**

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் யாழ்ப்பாண விஜயத்தின்போது திரைமறைவில் இடம்பெற்ற சில சம்பவங்கள் இப்போது மெல்லமெல்ல கசியத் தொடங்கியிருக்கின்றன. வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை தமது பிடிக்குள் வைத்திருந்த கட்சியின் தலைவர் இரா.சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரனும் அந்தப் 'பிடி'யை இழந்துவிட்டார்கள் என்பதும், தன்னிச்சையாகச் செயற்படுவதற்கு விக்கினேஸ்வரன் முற்பட்டிருக்கின்றார் என்பது வெளியே தெரியத் தொடங்கியிருக்கின்றது. இறுதியாக விக்னேஸ்வரனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இந்தியாவின் துணையை நாடும் நிலை கூட்டமைப்பின் தலைமைக்கு ஏற்பட்டுள்ளதா என்ற கேள்வியும் எழுகின்றது.

முதலமைச்சர் கொண்டுவந்த இனப்படுகொலைத் தீர்மானத்தையடுத்தே இந்த விரிசல் தீவிரமடைந்திருக்கின்றது. இந்தத் தீர்மானம் இலங்கை அரசைவிட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்குத்தான் அதிகளவு அதிர்ச்சியைக் கொடுத்திருந்தது. அதனைவிட, இந்தியா மற்றும் மேற்கு நாடுகளும் இந்தத் தீர்மானத்தினால் குழப்பமடைந்தன. குறிப்பாக மோடி தனது யாழ்ப்பாண விஜயத்தின்போது, விக்கினேஸ்வரனைச் சந்திப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்ற யோசனை ஒன்று முன்வைக்கப்படும் அளவுக்கு நிலைமைகள் மோசமடைந்திருந்தன. இதற்கேற்றவகையில் நிகழ்ச்சிநிரலிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆளுநரின் விருந்துபசாரத்தில் முதலமைச்சரும் கலந்துகொள்ளலாம் ஆனால் தனிப்பட்ட சந்திப்புக்கு இடமளிக்கக்கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் கடந்த வருட இறுதியில் டில்லி சென்று மோடியைச் சந்தித்திருந்தனர். அந்தக் குழுவில் இணைந்துகொள்ள விக்னேஸ்வரன் மறுத்துவிட்டார். முதலமைச்சரின் செய்தி ஒன்று அப்போது மோடியிடம் கையளிக்கப்பட்டது. இதனைப் படித்த மோடி, புதுடில்லி வருமாறு விக்னேஸ்வரனுக்கு அழைப்பு விடுத்திருந்தார். இந்தப் பின்னணியில் யாழ்ப்பாணம் வரும் மோடி, முதலமைச்சரை தனியாகச் சந்தித்துப் பேசுவதை தவிர்ப்பதற்கான திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டதாக தகவல். இதனையடுத்து விக்னேஸ்வரன் தரப்பினர் டில்லியிலுள்ள இந்து தீவிர அமைப்பான ஆர்.எஸ்.எஸ். அமைப்புடன் தொடர்புகொண்டதையடுத்து, அந்த அமைப்பு கொடுத்த அழுத்தத்தின் பெயரில்தான் விக்னேஸ்வரனைச் சந்திப்பதற்கான ஏற்பாடு இறுதித் தருணத்தில் செய்யப்பட்டது.

அதேவேளையில், விக்கினேஸ்வரனைத் தொடர்புகொண்ட இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர், மோடியுடனான சந்திப்பின்போது அரசியல் பேசுவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள் என வினயமாகக் கேட்டுக்கொண்டார். அதாவது இனப்படுகொலைத் தீர்மானம் போன்ற சர்ச்சைக்குரிய விடயங்களையிட்டு பேசுவதை இந்தியத் தரப்பு விரும்பவில்லை. கூட்டமைப்பின் தலைமையூடாக இதனைச் சொல்ல முடியாத நிலையிலேயே இந்திய அதிகாரி ஒருவரே முதலமைச்சரை நேரில் தொடர்புகொண்டார். இதனையடுத்தே 13 ஆவது திருத்தம் தொடர்பில் விக்னேஸ்வரன் வெளிப்படையான கருத்துக்களை முன்வைத்தார். அதற்கு மேலாக மோடியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டிருக்கின்றது.

## இரு தேசம் ஒரு நாடு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரு வாரங்களுக்கு முன்னர் வடபகுதி சென்றிருந்தபோது, யாழ். செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் விக்னேஸ்வரன் உரையாற்றினார். அங்கு அவர் தெரிவித்த 'ஒரு நாடு இரண்டு தேசங்கள்' என்ற கருத்து தென்னிலங்கையில் பெரும் புயலைக் கிளப்பியிருக்கின்றது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிக்கும் கருத்தையே முதலமைச்சரும் அங்கு பிரதிபலித்திருந்தார். கூட்டமைப்பிலிருந்து சம்பந்தனும், சுமந்திரனும் வெளியேறி முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டால் கூட்டமைப்பில் இணைந்து செயற்படுவதற்கு தான் தயாராக இருப்பதாக கஜேந்திரகுமார் அறிவித்திருந்த சில நாட்களிலேயே முதலமைச்சரின் 'இரு தேசங்கள்' என்ற கருத்து வெளியாகியது. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை இந்தக் கருத்துக்கள் கடுமையாகக் குழப்பியிருக்கின்றது. கஜேந்திரகுமாரின் இந்த அறிவிப்பின் பின்னணியில் ஏதாவது அரசியல் நகர்வுகள் இருக்குமா என்ற சந்தேகத்தை தனக்கு நெருக்கமான சிலரிடம் சம்பந்தன் வெளியிட்டு அவர்களுடைய அபிப்பிராயத்தை கேட்டதாகவும் தெரிகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று மத்தியில் ஒரு ஆட்சிமாற்றம் ஏற்பட்டிருக்கும் நிலையில், விக்னேஸ்வரன் மேற்கொள்ளும் நகர்வுகள் தென்னிலங்கை அரசியலில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியிருப்பது உண்மைதான். இருந்தபோதிலும், தமிழ் மக்களின் உணர்வுகளையே தான் பிரதிபலிப்பதாக அவர் சொல்கின்றார். உள்நாட்டு அரசியலிலும், இராஜதந்திரிகளுடனான பேச்சுக்களின் போதும் தன்னுடைய இந்த நகர்வுகளில் உள்ள நியாயத் தன்மையை அவர் தெளிவாக வெளிப்படுத்திவருகின்றார். ஒரு அரசியல்வாதியாக மட்டுமல்லாமல் ஒரு முன்னாள் நீதியரசர் என்ற முறையில் அவர் தெரிவித்துவரும் கருத்துக்கள் மறுதலிக்க முடியாதவையாக உள்ளன.

## சுதந்திரதின பகிஷ்கரிப்பு

பெப்ரவரி 4 ஆம் திகதி இடம்பெற்ற இலங்கையின் சுதந்திர தின வைபவத்தில் கலந்து கொள்ளப்போவதில்லை என அறிவித்ததிலிருந்து அவரது அதிரடி நகர்வுகள் ஆரம்பமானது. இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் சுதந்திரதின வைபவத்தில் கலந்துகொண்டிருந்த நிலையில், விக்னேஸ்வரன் வெளியிட்ட அறிவிப்பு கூட்டமைப்பின் மிதவாதிகள் மத்தியில் ஒரு பிளவு உருவாகியிருப்பதை வெளிச்சம் போட்டுக்காட்டியது. சுதந்திரதின வைபவத்தை பகிஷ்கரிப்பதாக தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என சுமந்திரன் தெரிவித்த நிலையில், இதில் பங்குகொள்வதற்கான சூழ்நிலை இதுவரையில் உருவாகவில்லை என விக்னேஸ்வரன் பதிலளித்திருந்தார்.

இது குறித்து இருவரும் தொலைபேசி மூலம் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டதாகவும் தகவல் உள்ளது. சுமந்திரனின் வாதத்தைக் கேட்ட முதலமைச்சர், "நீங்கள் ஒரு லோயர் போல கதைக்கிறீர்கள். நான் ஒரு நீதியரசராகப் பேசுகிறேன்" எனக் கூறியதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கதை உள்ளது.

அதனையடுத்து, 'இனப்படுகொலை' தீர்மானத்தை தானே வட மாகாண சபையில் கொண்டுவந்து அதனை ஏகமனதாக நிறைவேற்றுவதில் விக்னேஸ்வரன் வெற்றி பெற்றார். கடும்போக்கான சிவாஜிலிங்கமோ அல்லது அனந்தி சசிதரனோ இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருவதை விட, மிதவாதியும் முன்னாள் நீதியரசருமான முதலமைச்சர் இந்தத் தீர்மானத்தைக்கொண்டுவந்தமை இதன் முக்கியத்துவத்தை அதிகப்படுத்தியது. நம்பகத்தன்மையைப் பலப்படுத்தியது.

யாரும் நிராகரித்துவிட முடியாதளவுக்கு சர்வதேச சட்ட நிபுணர்களின் ஆலோசனையுடன் இந்தப் பிரேரணை தயாரிக்கப்பட்டிருந்தமை கவனிக்கத்தக்கது. இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் குறித்த ஒரு ஆவணமாக இது தயாரிக்கப்பட்டிருப்பதும் முக்கியமானதாகும். இதன் பிரதிகள் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. கூட்டமைப்பின் சம்பந்தனும், சுமந்திரனும் தவிர்ந்த ஏனைய தரப்பினர், குறிப்பாக சுரேஷ், அனந்தி போன்றவர்கள் உடனடியாகவே இதனை வரவேற்று அறிக்கைகளை வெளியிட்டிருந்தனர்.

## புதிய அரசுக்கு நெருக்கடி

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைப் போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணை அறிக்கை வெளியிடப்படுவது ஒத்திவைக்கப்படப்போகின்றது என்பதை உணர்ந்துகொண்ட நிலையிலேயே இனப்படுகொலைப் பிரேரணையைக் கொண்டுவருவது என்ற தீர்மானத்தை தான் எடுத்ததாக முதலமைச்சர் தெரிவித்திருக்கின்றார். கொழும்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தபோதுகூட, இந்தப் பிரேரணை கொண்டுவரப்பட்டதற்கான காரணத்தை முதலமைச்சர் விளக்கியிருக்கின்றார். அதனை நியாயப்படுத்தியிருக்கின்றார். பிரேரணை மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதாகவும் ஜனாதிபதியிடம் நேரில் தெரிவிப்பதற்கு முதலமைச்சர் தயங்கவில்லை.

மறுபுறத்தில் தன்னைச் சந்திக்கவரும் வெளிநாட்டு இராஜதந்திரிகளிடமும் இது குறித்து அவர் விளக்கம் கொடுத்துவருகின்றார். குறிப்பாக ஐ.நா.வின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் ஜெப்ரி பெல்ட்மன், இலங்கைக்கான நோர்வே தூதுவர் கிறீட் லோகின் ஆகியோருடனான சந்திப்புக்களின் போது இனப்படுகொலைத் தீர்மானம் தொடர்பில் முக்கியமாகக் கவனம் செலுத்தப்பட்டு ஆராயப்பட்டது. முதலமைச்சரின் கருத்துக்களை அவர்களால் ஒரேயடியாக நராகரித்துவிடவும் முடியவில்லை.

புதிய அரசாங்கம் பதவியேற்றுள்ள தருணத்தில் இவ்வாறான தீர்மானம் ஒன்றைக் கொண்டுவருவது நல்லெண்ணத்தைப் பாதிப்பதாக அமையாதா என்ற கேள்வியைத்தான் இராஜதந்திர வட்டாரங்கள் அவரிடம் நேரில் எழுப்பியிருந்தன. நடைபெற்றவைகளை ஒப்புக்கொள்வதன் மூலமாகவே உண்மையான நல்லிணக்கத்தைக் கொண்டுவரமுடியும் என முதலமைச்சர் இதற்கு விளக்கம் கொடுத்திருக்கின்றார். சம்பந்தன் ஏற்கனவே சொல்லிவரும் கருத்துத்தான் இது.

## கடும்போக்காகிய மென்போக்கு

விக்கினேஸ்வரனைப் பொறுத்தவரையில் அவர் ஒரு கடும்போக்காளராக என்றும் கருதப்பட்டவரல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மென்போக்காளர்களாக அடையாளம் காணப்பட்ட 'மும்மூர்த்தி'களில் அவரும் ஒருவர். முதலமைச்சராகத் தெரிவானவுடன் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்பாக பதவியேற்பதற்கு அவர் எடுத்த தீர்மானம் கடும் விமர்சனத்துக்குள்ளானது. அதற்குப் பின்னரும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் பல நகர்வுகளை அவர் முன்னெடுத்திருந்தார்.

(தொடர்ச்சி 26ம் பக்கம்)

WWW.TAMILPAGES.COM
தமிழ் ஒலைகள்
TAMIL PAGES
TO ADVERTISE CALL OR EMAIL
0771 800 3838 / 0770 319 0768
020 8543 2126
editor@tamilpages.com
52 Kingsley Road, Wimbledon London SW19 8HF

Tamil Pages readership is second to none and its advertising portfolio is comprehensive and innovative
We are now calling for advertisements from Businesses for the 2015 Directory - 22nd Edition
A box advert cost only £35 for a full year
THINK DIFFERNT AND GO FURTHER WITH TAMILPAGES
New look, New Content , Same Market Penetration




பிரித்தானியத் தமிழ் இளையோர் அமைப்பினால் ஒருங்கிணைக்கப்பட்டு பத்தாவது வருடமாக நடாத்தப்படவிருக்கும் இளந்தளிர் - (ஒரு தசாப்தம்) நிகழ்ச்சி மார்ச் 28ஆம் திகதி மாலை ஆறுமணிக்கு Hatch end High school, Headstone Lane, Harrow, Middlesex, HA3 6NR என்ற முகவரியில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில், தாயகம் மற்றும் தமிழ் சார்ந்த சிறப்புக் கண்காட்சியும் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது. வளர்ந்து வரும் ஈழத்து கலைஞர்களை ஊகுவிக்கும் பொருட்டும், எமது அடையாளங்களையும் வரலாற்றையும் அடுத்து வரும் சந்ததியினர்களுக்கு எடுத்துரைக்கும் நிகழ்வாக 'இளந்தளிர்' அமையும்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விரும்பும் ***ஒரு பேப்பர்*** வாசகர்களுக்கென பத்து இலவச அனுமதிச் சீட்டுகளை வழங்க தமிழ் இளையோர் அமைப்பு முன்வந்துள்ளது. இலவச அனுமதிச் சீட்டுகளைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர். பின்வரும் மூன்று கேள்விகளுக்கும் சரியான விடையினை எழுதி info@orupaper.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மார்ச் 27ம் திகதி மதியம் 12 மணிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு வேண்டப் படுகிறீர்கள்.

கேள்விகள்

1) ஈழத்தில் கழிவு எண்ணை நீரில் கலப்பது தொடர்பில் குற்றஞ்சாட்டப்படும் மின்நிலையம் எங்கு உள்ளது?

A) யாழ்ப்பாண நகரம் B) ஏழாலை C) புங்குடுதீவு D) சுன்னாகம்

2) தமிழினப்படுகொலையில் பங்குபற்றிய முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவிற்கு அண்மையில் வழங்கப்பட்ட இராணுவ நிலை (military rank) எது?

A) மேஜர் ஜெனரல் B) பீல்ட் மார்ஷல் C) பிரிகேடியர் D) ஜெனரல்

3) அண்மையில் தமிழ் இளையோர் அமைப்பினால் சிறிலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்ட நடவடிக்கை எந்தக் கட்டத்திற்கு முன்பாக நடாத்தப்பட்டது?

A) Westminster Abbey B) 10 Downing street C) Marlborough House D) US Embassy

# கூட்டமைப்புத்..

(25ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகார மாற்றத்தின் பின்னர் சில சாதகமான நகர்வுகள் இடம்பெற்றன. முதலமைச்சருக்குப் போட்டியாக சமாந்தரமான ஒரு நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருந்த இராணுவப் பின்னணியைக்கொண்ட அளுநர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மாற்றப்பட்டார். முதலமைச்சருக்கு கட்டுப்படமறுத்த பிரதம செயலாளர் விஜயலக்?ஷமியும் அகற்றப்பட்டார். ஆனால், சந்திரசிறியும், விஜயலக்ஷ்மியும் மட்டும்தான் வடபகுதியின் பிரச்சினையல்ல. இருவரையும் மாற்றியவுடன் பிரச்சினை தீர்ந்து, வடக்கில் குவிக்கப்பட்டுள்ள இராணுவம் குறைக்கப்பட வேண்டும் என்பதை வடமாகாண தேர்தல் காலத்திலிருந்து விக்னேஸ்வரன் வலியுறுத்திவருகின்றார். இராணுவம் குறைக்கப்படும் நிலையில்தான் மீள்குடியேற்றம் பூரணமாக்கப்படும். இதனைவிட காணாமல்போனோர் பிரச்சினை, கைதிகள் விவகாரம் என்பனவும் உறுத்திக்கொண்டுள்ளன. இவை தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் முதலமைச்சர் நடத்திய பேச்சுகள் திருப்திகரமாக அமையவில்லை. அரசுக்கு எதிராக விக்னேஸ்வரன் திரும்பியமைக்கு அதுவும் காரணம். ரணிலைப் பொறுத்தவரையில் இவ்வருட நடுப்பகுதியில் நடைபெறப்போகும் பொதுத் தேர்தலை இலக்கு வைத்த நகர்வுகளை மட்டுமே செய்கிறார். இந்த நிலையில்தான் தன்னுடைய மிதவாதப்போக்கை மாற்றிக்கொள்வதற்கு விக்னேஸ்வரன் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்.

விக்னேஸ்வரனின் இந்த நகர்வுகள் புதிய அரசாங்கத்துக்கு நெருக்கடிகளை அதிகரிக்கும் என்பது உண்மை. சர்வதேச அரங்கிலும் சங்கடமான ஒரு நிலையை அரசுக்கு இது தோற்றுவிக்கும். விடப்போவதுமில்லை.

மறுபுறத்தில் தீர்வுகாணப்பட வேண்டிய பல பிச்சினைகள் உள்ளன என்பதை அவரது நகர்வுகள்தான் புதிய அரசாங்கத்துக்கு உணர்த்திக்கொண்டிருக்கின்றன. அதேவேளையில் புதிய அரசாங்கத்துக்கு கால அவகாசத்தைக் கொடுக்க வேண்டும் எனக் கருதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கும், இந்தியா மற்றும் மேற்கு நாடுகளுக்கும் விக்னேஸ்வரின் கருத்துக்கள் எரிச்சலைக்கொடுப்பதாகவே இருக்கும்.

விக்கியைக் கட்டுப்படுத்தும் ஒரு உபாயமாகத்தான் 'நாங்கள் அரசியலைப் பார்க்கிறோம். நீங்கள் மாகாண சபை விவகாரங்களைப் பார்த்துக்கொள்ளுங்கள்? என கூட்டமைப்பின் தலைமை ஒரு தடையைப் போடப் பார்த்தது. ஆனால், விக்கி அதற்குள் கட்டுப்படுபவரல்ல. அரசியலும் மாகாண சபை விவகாரங்களும் ஒன்றுடன் ஒன்று கலந்தவைதானே!

புதிய அரசாங்கத்தைப் பாதுகாப்பதா அல்லது மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதா என்ற கேள்விக்கு முதலமைச்சர் பின்னையதைத்தான் தேர்வு செய்துள்ளார் எனத் தெரிகின்றது.

*நன்றி : தமிழ் லீடர்*




தமிழரால் நடாத்தப்படும் கென்சோ இக்ஷின்ரியு கராத்தே அக்கடமியின் (Henshou Isshinryu Karate Academy) 11வது Black Belt பட்டமளிப்பு விழா வெகு விமரிசையாக Londonல், Catford என்னும் இடத்தில் அமைந்திருக்கும் Broadway Theatreல் மார்ச் மாதம் 7ம் திகதி சனிக்கிழமை நடாத்தப்பட்டது.

இந்நிகழ்விற்கு அமெரிக்காவிலிருந்து Okinawa Isshinryu Karate & Kobu-do Association (OIKKA)னின் தலைவர் Grand Master Hanshi Christopher Chase அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு 9 பெண் பிள்ளைகள் உட்பட 53 மாணவர்களுக்கு பட்டமளித்து கௌரவித்தார். இந்நிகழ்வில் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள், கல்வி மான்கள், சமூக அமைப்புகளை சேர்ந்தவர்கள் சிறப்பு விருந்தினர்களாக பலர் கலந்து கொண்டனர். Henshou Isshinryu Karate Academyahdயானது 15 வருடங்களிற்கு முன்னர் Renshi கந்தையா ரவீந்திரன் (Black Belt 6th Dan) அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு பிரித்தானியாவில் 14 கிளைகளுடனும், யாழ்ப்பாணம் வல்வெட்டியில் 1 கிளையுடனும் நடாத்தப்பட்டு வருகின்றது. இக்கல்லூரியில் 1000ற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிற்சி பெற்று வருவதுடன் 2013ல் அமெரிக்காவில் நடாத்தப்பட்ட World Isshinryu Karate உலகளாவிய போட்டியில் கலந்து பல பதக்கங்களை வெற்றி பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒபாமாவும்..

(19ம் பக்கத் தொடர்ச்சி)

விரல் அடையாளங்கள் நிறைந்திருப்பதாகக் கருத்து வெளியிட்டுள்ளது. ஹாவார்ட் பல்கலைக் கழகத்தில் சட்டம் பயின்ற ரொம் கொட்டன் இப்படி சட்டம் அறியாதவர் போல் எழுதியிருக்க மாட்டார், மொசாட்தான் இதை எழுதியது என்ற குற்றச்சாட்ப்பட்டுள்ளது. ஈரானிய வெளியுறவுத் துறை அமைச்சர் கடிதம் எழுதியவர்களுக்கு அமெரிக்க அரசியல் அமைப்பைப் பற்றியோ நாடுகளிடை செய்யப் படும் உடனபடிக்கைகள் தொடர்பான சட்டங்கள் பற்றியோ தெரியாது என்றார்.

ஈரானுடனான அணுக்குண்டு தொடர்பான உடன்படிக்கையை அமெரிக்க அதிபரால் செய்ய முடியும் ஆனால் ஈரானுக்கு எதிரான பொருளாதாரத் தடை என்று வரும் போது அதில் அமெரிக்கப் பாராளுமன்றத்தின் மக்களவைக்கே அதிகாரம் உண்டு. ஈரானுக்கு எதிரான பொருளாதாரத் தடையை மக்களவையே விதித்தது. அதை நீக்கும் அதிகாரமும் அதற்கே உண்டு. ஒபாமாவின் நிர்வாகத்தினர் ஈரானுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது குடியரசுக் கட்சியினர் ஈரான் மீது மேலும் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என எச்சரித்தனர். அதற்கு ஒபாமாவும் பிரித்தானியத் தலைமை அமைச்சர் டேவி கமரூனும் அமெரிக்கப் பாராளுமன்றம் அவசரப்படத் தேவையில்லை எனத் தெரிவித்தனர். அத்துடன் ஒபாமா அப்படி ஒரு பொருளாதாரத் தடைச் சட்டம் பாராளுமன்றத்தின் மக்களவையில் நிறைவேற்றப்பட்டால் அதை தான் இரத்து செய்யப் போவதாகவும் தெரிவித்திருந்தார்.

ஈரானுடன் மோதுவதை விட்டு அதனுடன் நட்பை உருவாக்க பராக் ஒபாமாவின் நிர்வாகத்தில் உள்ளவர்கள் கருதுகின்றனர். அது அமெரிக்காவிற்கு கேந்திரோபாய ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் நன்மை பயக்கும். ஈரான் இரசியாவுடனோ அல்லது சீனாவுடனோ நெருக்கமான உறவை உருவாக்குவதை அமெரிக்கா விரும்பவில்லை.

Exclusive offer for our Takeaway customers. If you order your takeaway meal through our new website www.fushia-restaurant.co.uk, we will give you a 30% Discount!.
This offer is only available to online orders until the end of March 2015 (T&Cs apply)
Slow Cooked Lamb shanks £9.95 Only
With a rich rosemary and mint sauce or spicy sauce

FUSHIA
TEL - 020 8680 8833
3, Brighton Road, South Croydon, Surrey, CR2 6EA
web : www.fushiauk.com Mail : info@fushiauk.com

SRI KANTH & CO SOLICITORS

We practise in the following areas of law:
- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing – Commercial
- Landlord & Tenant
- Property Sale & Letting
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

557 High Road, Wembley, Middlesex, HA0 2DW
www.srikanthsolicitors.co.uk
Tel: 020 8795 0648 Mob: 07831 195 979
Fax: 020 8795 0649

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. 31 வயது, 5'8" Student visa self employed graduate தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5378

2. 34 வயது, 5'8" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5372

3. 37வயது, 5'3" British citizen working as a manager in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5371

4. 27 வயது, 5'10" 3 year Entreprenuer visa Engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5370

5. 37 வயது, 5'4" Asylum seeker living in uk for the past 14 years தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5364

6. 37 வயது, 5'11" British citizen working in a company தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5355

7. 37 வயது, 5'11" British citizen working in a IT company தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5352

8. 35 வயது, 5'6" Born and brought up in uk Accountant தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 4788

9. 31 வயது, 5'7" British citizen graduate self-employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5350

10. 32வயது, 5'4" British citizen graduate working as a graphic designer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5348

11. 33 வயது, 5'9" Entrepreneur visa graduate working in a IT company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5339

12. 32 வயது, 5'4" British citizen Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5338

13. 32 வயது, 5'4" Permanent residence Engineer தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5337

14. 29 வயது, 5'10" Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5336

15. 46 வயது, 6'0" Permanent residence working as machine operator in a company தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5334

16. 32வயது, 5'10" HSMP visa graduate working in IT company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5197

17. 41 வயது, 5'11" Permanent residence graduate working in a retail company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5327

18. 29வயது, 5'7" British citizen graduate working in a company தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5325

19. 33 வயது, 5'8" permanent residence self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5319

20. 31 வயது, 5'8" Born and brought up in uk Teacher தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5288

21. 32 வயது, 5'7" Graduate Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின் றனர் Ref: 5314

22. 26 வயது, 5'10" Graduate student visa working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5296

23. 35 வயது, 5'2" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5298

24. 35 வயது, 5'9" Asylum seeker Engineer in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5294

25. 31 வயது, 5'11" Work permit visa working as a civil engineer in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5290

26. 37 வயது, 6'0" British and Australia citizen divorced working in a IT department living in Australia தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5284

27. 28 வயது, 5'8" work permit visa Accountant தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5281

28. 46 வயது, 5'7" British Citizen working in a company தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5275

29. 34வயது, 5'7" Graduate, Student visa in uk, working as a sale assistance, divorced தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5274

30. 52 வயது, 5'10" British citizen in uk graduate working in a medical sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5263

31. 33 வயது, 5'5" Permanent Resident in uk, working in a shop தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5267

32. 32 வயது, 5'5" Self employed living in srilanka தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5265

33. 23வயது, 5'3" born and brought up in uk working in NHS தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5261

34. 31 வயது, 5'10" Asylum seeker in uk finished diploma தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5260

35. 35 வயது, 5'9" Asylum seeker in UK Software Engineering தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5256

36. 30 வயது, 5'8" Permanent residence in UK working in a super தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5255

37. 32 வயது, 5'6" Permanent residence in UK graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றன ர் Ref: 5258

38. 46 வயது, 5'6" German Citizen divorced working in supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4660

39. 30வயது, 6'0" Engineer work permit visa working in a company in Singapore தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5254

40. 28 வயது, 5'8" Graduate work permit visa in uk தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5251

41. 39 வயது, 5'7" Permanent residence divorced self employed தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5250

42. 35 வயது, 6'0" work permit visa engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5249

43. 34 வயது, 5'4" 10 years visa in france working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5243

44. 33 வயது, 5'7" British citizen Engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5237

45. 33 வயது, 5'10" British citizen lawyer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5205

46. 28 வயது, 6'1" Permanent residence in uk working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5203

47. 31 வயது, 5'10" HSMP visa graduate working in a company in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5197

48. 31 வயது, 6'0" Work permit visa graduate working as a manager in a company தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5195

49. 33 வயது, 6'1" British citizen working in a food court தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5191

50. 38 வயது, 5'4" British citizen working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5190

## மணமகன் தேவை

1. 25 வயது, 5'4" German citizen doctor living in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5376

2. 42 வயது, 5'3" Permanent residence in uk divorced working in a factory தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5374

3. 27 வயது, 5'6" Born and brought up in uk lawyer தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5360

4. 29 வயது, 5'4" student visa graduate working as a accountant தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5354

5. 32வயது, 5'3" British citizen Graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5345

6. 26வயது, 5'3" British citizen Graduate Medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5343

7. 25வயது, 5'0" British citizen Graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5331

8. 35 வயது, 5'2" Born and brought up in uk lawyer தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5329

9. 28 வயது, 5'3" Discretion leave to remain visa 3 year visa eligible to apply permanent residence in uk graduate accountant தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 1243

10. 22வயது, 5'2" இந்தியாவில் வசிக்கும் இலங்கை மணமகளுக்கு (Engineer) தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5317

11. 23 வயது, 5'2" British citizen Graduate working in a company மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5225

12. 31 வயது, 5'2" British citizen Graduate working in a medical sector மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4388

13. 25 வயது, 5'0" பிறப்பிலிருந்து வாய் பேச முடியாத மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5299

14. 30 வயது, 5'0" Graduate working as a Technical officer in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5291

15. 21 வயது, 5'1" இந்தியாவில் வசிக்கும் இலங்கைப் பெண்ணுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5236

16. 30 வயது, 5'1" British citizen Graduate.working as a Medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5282

17. 29 வயது, 5'5" Graduate divorced living in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5264

18. 40 வயது, 5'6" Teacher in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5259

19. 30வயது, 5'4" Asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5252

20. 29 வயது, 5'3" lawyer working in Australia தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5246

21. 24 வயது, 5'5" Graduate german citizen தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 5245

22. 24 வயது, 5'5" Engineer living in India தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 4902

23. 24 வயது, 5'3" British citizen accountant working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5215

24. 43 வயது, 5'4" British citizen divorced working as a care coordinator in uk தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5189

25. 29 வயது, 5'5" British citizen doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5169

26. 33 வயது, 5'4" British citizen graduate student தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5162

27. 30 வயது, 5'7" British citizen chatered accountant in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5158

28. 29 வயது, 5'5" British citizen doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5154

29. 33 வயது, 5'7" Canadian citizen graduate working in a mediacal sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5125

30. 39 வயது, 5'3" German citizen graphic designer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4132

31. 29 வயது, 5'8" British citizen graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

32. 25 வயது, 5'3" Asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5126

33. 47 வயது, 5'6" British citizen working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5117

34. 25 வயது, 5'3" British citizen graduate working in a private company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3575

35. 30 வயது, 5'4" German citizen working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5089

36. 29 வயது, 5'5" British citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5086

37. 49 வயது, 5'3" british citizen divorced working as a cashier தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5077

38. 41 வயது, 5'5" british citizen divorced தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5075

39. 29 வயது, 5'3" british citizen accountant தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5073

40. 33 வயது, 5'0" Graduate, Working in Government sector in Colombo தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5049

41. 24 வயது, 5'3" british citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5070

42. 25 வயது, 4'7" asylum seeker in uk தகுந்த மணமகனை தேடுகின்றன ர் Ref: 5065

43. 40 வயது, 5'4" Graduate,Malaysian Nationality ,PR in Australia, Working as a Doctor in Auatralia தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5010

44. 42 வயது, 5'2" British citizen divorced living with 2 children தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5064

45. 25 வயது, 5'5" British citizen, looking after the business தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5059

46. 26 வயது, 5'3" Graduate, British citizen தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 5054

47. 28 வயது, 5'2" Graduate, British citizen, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5053

48. 21 வயது, 5'3" Residing in Srilanka, studied computer course தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5052

49. 24 வயது, 5'2" Graduate, Residing in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5047

50. 27 வயது, 5'0" Residing in Srilanka, Completed Olevel தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5042

51. 37 வயது, 5'2" Graduate, Working as a Teacher in Colombo தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5012

52. 35 வயது, 5'4" Graduate, Working as a Teacher in Srilanka தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4827

53. 31 வயது, 5'5" German citizen lawyer தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5034

54. 35 வயது, 5'6" Canadian citizen accountant தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5020

55. 27 வயது, 5'6" Graduate, Australian citizen, Working in a Medical Sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5006

56. 33 வயது, 5'2" Graduate, Canadian citizen, Working at Ministry of Health தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5000

57. 37 வயது, 5'5" Residing in Srilanka, doing computer course தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5005

58. 21 வயது, 5'1" Graduate, Canadian Citizen தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5003

59. 22வயது, 5'0" Residing in Sri Lanka, doing computer course தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4998

60. 40 வயது, 5'5" Divorced, France citizen , Self-employed தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4996

61. 29 வயது, 5'2" Graduate, Residing in srilanka, working as AG Officer of Land Section தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 4999

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# மைத்திரிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள்


















# ஊடகவியலாளர் சந்திப்பு









தமிழ் இனப்படுகொலையும், அதிலிருந்து காப்பதற்கான பன்னாட்டு சமூகத்தின் பொறுப்பும் ('Tamil genocide in Sri Lanka and the international community's responsibility to protect') என்ற தலைப்பில் ஒரு ஊடகவியலாளர் சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை (17ம் திகதி) ஜெனிவா ஊடக அமையத்தில் (Geneva Press Club) நடைபெற்றது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வடமாகாணசபை உறுப்பினர்களான திருமதி. அனந்தி சசிதரன், திரு. மகாலிங்கம் சிவாஜிலிங்கம், கனேடியத் தமிழர் தேசிய அவையின் தலைவர் பேராசிரியர் சிறிரஞ்சன், மியன்மார் மனிவுரிமை செயற்பாட்டாளர் மவுங் ஷாரினி (Maung Zarini ) ஆகியோர் உரையாற்றியதுடன் கலந்து கொண்டவர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தனர்.

தமிழ் கார்டியன் இணையதளத்தின் ஆசியரியர்களில் ஒருவரும் இளம் அரசியற் செயற்பாட்டாளருமான மருத்துவர் சிவகாமி இராஜமனோகரன் கருத்தாடல்களை நெறிப்படுத்தினார்.



*சிங்களப் பேரின வாத அரசே !*
*உனது கொடுங்கோல் படைகளை உடனே..*
*கூட்டிச் சென்றுவிடு எமதுமண்ணைவிட்டு -*
*இல்லையேல் புலிகளின் உறக்கம்*
*நிரந்தரமல்ல - தெரிந்துகொள் !!*
*- மு.வே.யோ*

# சம்பூர் அனல்..

*(21ம் பக்கத் தொடர்ச்சி)*

### முதற்கட்டமே அனல் மின் நிலையம்

சம்பூர் அனல் மின் நிலையம் அமைப்பதாக கூறிய இடம் முதற்கட்டமே என அறிய முடிகிறது. இதில் மொத்தமாகஆறு கட்டங்கள் இருக்கிறது என பெயர் குறிப்பிட விரும்பாத அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதாவது, 700 மில்லியன் ரூபா செலவில் முதலாம் கட்டத்தில் இரண்டு 250 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க ஓர் உலையும், 2ஆம் கட்டத்தில் 1300 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இரும்பு தொழிற்சாலையும், வாகன உற்பத்தி தொழிற்சாலை, உரத் தொழிற்சாலை, நீர் விநியோக தொழிற்சாலை, ஆடைத் தொழிற்சாலை, எண்ணெய் ஆலைகள், சுற்றுலா மையங்கள் என பல தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளன.

இதற்காக இலங்கை உட்பட பிரேசில், இத்தாலி, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள் என ஏழு நாடுகள் முதலிட்டுள்ளன. அணு உலை ஒன்றும் உருவாகவுள்ளது. மூன்றாம் கட்டமாக இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் தொழிற்சாலைகள் நிறுவப்படும். இப்படியாக சம்பூரின் 10 ஆயிரத்துக்கு 600 ஏக்கருக்கு மேற்பட்ட மொத்த நிலப்பகுதிகளும் சூறையாடப்படவுள்ளது என்றார்.

### இருபதாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு

சம்பூரில் அனல் மின் நிலையம் அமைக்கப்பட்டால் சம்பூர் மக்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு வேலை வாய்ப்புகள் வழங்கப்படும். இவ்வாறு இருபதாயிரம் பேருக்கு தொழில் கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இதே வேளை, இங்கு அமைக்கப்படவுள்ள அனல் மின்னிலைய வேலையாட்களுக்கு தங்குமிடம், சுற்றுலாத்துறை போன்ற துறைகளினூடாக சம்பூர் மக்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் இலாபம் பெற முடியும் என்ற ஓர் அறிக்கை கூறுகிறது. அனல் மின் நிலையத்தில் வேலை செய்யும் அளவுக்கு உயர் தொழில்நுட்ப அறிவு கொண்ட மக்கள் சம்பூரில் இல்லை. விவசாயம், மீன்பிடி என்று வாழ்ந்த மக்களுக்கு அனல் மின் நிலையத்தில் என்ன வேலை செய்ய முடியும்? இன்னும் பல தலைமுறைகள் அங்கு வாழ்ந்தாலும் உயர்தர வேலை ஒன்று கிடைக்குமா என்பது சந்தேகமே.

கிழக்கின் திருகோணமலை மக்களின் பட்டறிவு என்னவென்றால், பிரீமா, மிட்சுயி, ஆடைத்தொழிற்சாலைகள் என அங்கு தொழிற்சாலைகள் வந்திருந்தும் சம்பூர் தமிழ் மக்களுக்கு வேலை 5 வீதத்துக்கும் குறைந்த வேலையே கிடைத்துள்ளது. பெரும்பான்மையான மக்கள் கொண்டுவரப்பட்டு இன்று அவர்கள் திருகோணமலை வாசிகளாகி விட்டனர். இப்படி தமிழர் சதவீதம் திட்டமிடப்பட்டு குறைக்கப்படுகின்றது என்கின்றனர் மக்கள். அனல் மின் நிலையத்துக்காக வரும் வேலையாட்கள் தமிழர் கலாசாரத்துக்கு பாரிய சவாலாகவே இருக்கப் போவது உண்மை.

### 18 கிலோமீற்றருக்குத் தாக்கம்

காட்டு வளத்தினால் பல விளை பொருட்களை உற்பத்தி செய்யும் சம்பூரில் அனல்மின் நிலையம் அமைக்கப்பட்டால் காபன், காபனீர் ரொட்சைட், மொனோக் சைட், கந்தகவீர் ஒட்சைட் போன்ற இரசாயன கலவைகள் அனல்மின் நிலையத்திலிருந்து 18 கிலோ மீற்றர் சுற்றுவட்டம் வரை தாக்கம் இருக்கும். அதாவது, மூதூர், திருகோணமலை நகர் என்பவற்றைத் தாண்டி இரசாயன அமிலங்கள் காற்றில் கொண்டு செல்லப்படும். தென்மேல் பருவப் பெயர்ச்சி காற்றினால் இத்தாக்கம் உடனடியாக கொண்டு செல்லப் படும். இது மிகவும் ஆபத்தான விடயம் என்பதை சுட்டிக்காட்டிய சூழலியலாளர்கள் இந்தியா மக்களுக்கு திட்டமிட்டே இதனை செய்வதாக தெரிவிக்கின்றனர்.

இந்திய எண்ணெய் நிறுவனம், தாங்கிகளினால் திருகோணமலையில் சூழல் மாசு ஏற்படுவது மேலதிக தகவலாகும்.

# தெளிவாகச்..

*(09ம் பக்கத் தொடர்ச்சி)*

இவர்களின் 'ஒத்திவைப்பு' பூகோள அரசியலை உணர்ந்து கொள்ளும் இலங்கை அரசு, உள்ளக விசாரணைப் பொறிமுறை ஒன்றினை அமைக்கப்போவதாகவும், ஐ.நா.வின் நேரடித் தலையீட்டினை தாம் எக்காலத்திலும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லையென்றும் கூறத் தொடங்கிவிட்டது.

இங்கு குறித்துக் கொள்ள வேண்டிய விவகாரம் ஒன்று உண்டு. அதாவது 'ஒத்திவைப்பு' என்கிற சாதகமான சூழல் உருவாகும்போதே, 'உள்ளக விசாரணை' என்கிற மறுத்தானைப் போட்டு அதனை முழுமையாக நிராகரிக்கும் நிலைப்பாட்டினை சிங்களம் மேற்கொள்கிறது.

ஆனால் தமிழர் தரப்போ, மேலதிக தகவல்களைத் திரட்டுவதற்கான காலவெளி என்பதனை, போர்க்குற்ற சாட்சியங்களைத் திரட்ட எமக்கு வழங்கப்பட்ட வரப்பிரசாத காலம் என்பதுபோல் வியாக்கியானம் செய்ய முற்படுகிறது.

'இனிமேல் அவ்வறிக்கையில் எவ்வித மாற்றமும் செய்யப்பட மாட்டாது' என்கிற செய்தியை அனைத்துலக மக்களவை, தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் வட மாகாணசபை உறுப்பினர்களுடனான சந்திப்பொன்றில் ஐ.நா.மனித உரிமைபேரவை ஆணையாளர் அலுவலக பணிப்பாளர்கள் கூறியதாக, ஜெனீவா ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகர் சந்திப்பில் கஜேந்திரகுமார் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் தேர்தல் நெருங்குவதால், ஒத்திவைப்பிற்கு ஆதரவளித்த தமிழ் அரசியல் தரப்பின் நிலைப்பாடுகள் மாறுவதைக் காண்கிறோம். உள்ளக விசாரணையில் நம்பிக்கை இல்லை, அது கண்கட்டு வித்தை என்பது போன்ற 'தன்னிலை' மறுப்பு வாதங்களும் சலசலப்பின்றி வரத் தொடங்குகின்றன.

இணக்க அரசியலில், சலுகைகளையும் பதவிகளையும் பெறலாம். உரிமைகளைப் பெற முடியாது. இதனை மூடிமறைத்து அரசியல் செய்வது, தேர்தல் அரசியலுக்குத் தேவையானதென்பதை ஈழத்தமிழின வரலாறு புலப்படுத்திக் கொண்டுதானிருக்கிறது.

திருக்கோணமலையில் 'கோத்தா' முகாம் இருப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள் சான்றுகளோடு சவால் விடுகிறார். நல்லிணக்கம், நல்லாட்சி, சட்ட ஆட்சி பற்றி பேசும் நவீன சனநாயக ஆட்சியாளர்கள் இதற்கு பதில் கூற வேண்டும்.

புலிகளிடம் சனநாயகம் இல்லையென்று அடம் பிடித்தவர்கள் இதற்குப் பதில் அளிப்பது சாலப்பொருந்தும். அதிகாரமற்ற தேசிய இனத்தின் முகவர்களாக இருப்போர் செய்யும் இணக்க அரசியல், இறுதியில் அடிபணிவு அரசியலாகவே முடியும். இது வரலாறு.

ஆக மொத்தம், 'பிரச்சினைகளைச் சந்திக்கும் போது சிந்தித்துக் கொள்வோம்' என்கிற சாதாரண நடைமுறைக்கோட்பாட்டோடு எல்லாத் தரப்பும் இயங்குவது போலிருக்கிறது.

எது எப்படி இருப்பினும், வடகிழக்கில் வாழும் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமென்றும், அத்தோடு ஒரு இறைமையுள்ள 'தேசம்' (Nation) என்பதன் அடிப்படையில் அவர்களின் பிரச்சினையை அணுக வேண்டும் என்று முதலமைச்சர் விக்கினேஸ்வரன் அவர்கள் கூறுவது மோடிக்கு புரியாவிட்டாலும், கொள்கை வகுக்கும் டெல்லி தெற்கு வளாகத்திற்கு தெளிவாக விளங்கும்.

"நீங்கள் என்னை நம்புகிறீர்களா?" என்று எம்மிடம் கேள்வி கேட்கும் இந்தியப்பிரதமரிடம், "முதலில் நாம் ஒரு பூர்வீக தேசிய இனம் என்பதை, நீங்களும் உங்கள் நிரந்தர கொள்கை வகுப்பாளர்களும் ஏற்றுக்கொள்கிறீர்களா?" என்று கேளுங்கள்.

ஏனெனில் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வு இங்கிருந்துதான் ஆரம்பமாக வேண்டும்.

# பங்குனி மாதம்



பங்குனி மாதம் இங்கு இன்றும் ஓயாத குளிர். தாயகப் பூமியில் பங்குனி மாதம் நினைவில் தெறித்தது. அந்த நினைவே இனித்தது. பங்குனி வெய்யில் என்பது இதமான குளிருடன் ஆரம்பமாகி படிப்படியாக வெப்பம் ஏறுகின்ற ஒரு நிலைப்பாடான தாயக பூமியினுடைய வெப்ப நிலை பங்குனியில் இருக்கும். மாரி மழையில் மண்ணில் ஊறிய நீரும், சூரிய ஒளியுமாக பயிர் பச்சைகளில் செழிப்பு எங்கும் பச்சைப் பசேல் என்று மெருகூட்டும். பூக்களின் மலர்வு எங்கும் கண் சிமிட்டும். பங்குனித் திங்கள் எங்கும் அம்மன் ஆலயங்கள் தோறும் பொங்கல் பூசை, மணி யோசை என்று பக்தி மயம் கமழும். கோயில் வேள்விக ளுக்காக பலியாகப் போகும் கிடாய்கள் தீனி தீத்தப்பட்டு கொழுக்க வைக்கும் முயற்சிகளும் ஆங்காங்கே நடக்கும். காய்கறிச் செய்கை என்று தோட்டங்கள் தோறும் வேலைகள் சுறுசுறுப்பு காண்பதுவும் பங்குனியில் தான். ஏற்கனவே நடுகை கண்ட கத்தரி, வெண்டி, மிளகாய், தக்காளி என்று வெய்யிலில் வாடாது குழை கொப்போடு நிரை நிரையாக தளிராக இருந்த செடிகளுக்கு காலை மாலை என்று தண்ணீர் ஊற்றும் வேலைகள் கிட்டத்தட்ட நிறைவுக்கு வரும் காலம் பங்குனி மாதம். இதுவரை துரவுகளிலிருந்து குடங்கள், கோலிகள் மூலம் கைத் தண்ணீர் அள்ளி வார்த்து வளர்த்து வாளிப்பாக்கிய செடி களை வளர்ச்சிப்பருவத்துக்கு இட்டுச் செல்ல அவற்றிற்கு பாத்தி கட்டி வாய்க்கால் வழியாக நீர் இறைத்து முறை வைத்து மூன்று நாட்கள் தொடர்ந்து இறைத்து பயிரை வளர்க்கும் மாதம் பங்குனி தான்.

ஒவ்வொரு கமக்காரர்களின் சின்னப் பரப்புத் தோட் டங்கள், பல்வேறு மரக்கறி செடிகளைக் கொண்டிருப்பதும் பங்குனி மாத அழகுக்குரியதொன்று. பரம்பரை பரம்பரையாக எங்கள் தமிழ்ப் பிரதேசத் தோட்டக்காரரிடம் ஊறி வளர்ந்த பிரயாசை என்பதை இந்த பங்குனி மாதத்தில் அவர்கள் காட்டுவார்கள். ஓயாத உழைப்பு, ஒவ்வொரு பயிரிலும் காட்டும் அக்கறை விளைவுகளாக செழிப்பு களாக வளம் தருவதற்கான அத்திவாரமாக வாய்ப்புப் பெறுகிறது.

நிரைக்கு நிரைக்கு மிளகாய் செடிகள், மறுபுறம் நடுகை கண்ட வெங்காயம், வெங்காயத்திற்கு இடையாக ஊடு பயிராக வளரும் மரவள்ளி, கன்னங்கரேல் என்று செழித்து கத்திரி நிறப் பூவோடு கண் சிமிட்டும் கத்தரிச் செடி, இன்னொரு நிரையில் இடையிடையே உயர ஓங்கி வளர்ந் திருக்கும் வெண்டிச் செடி, அந்த வெண்டிச் செடியில் கணுக்குக்குள் இருந்து சின்னிவிரல்போல முளை விடும் வெண்டிப் பிஞ்சுகள், பாவல் கொடிக்கு என்று வேலி படர்ந்து கொடி விட்டு காற்றுக்கு ஒரு ஒதுக்காக இருக்கும். புடலங்காய்க்கு ஒரு பந்தல். நீண்டு தொங்கும் மண்ணை முத்தமிடத் தயாராக இருக்கும் புடலங்காய்களை வளை யாமல் இருக்க நுனியில் கல்லு கட்டி அதனை பச்சைப் பசேல் என்று பாங்காக காட்டும் பேறும் தனி அழகுதான்.

கிணற்றோரம் மேட்டுப் பக்கமாக இருக்கும் இடத்தில் பூசணிச் செடி. தாமரை இதழ் போல் பெரிய முறுக்கு முறுக் கான இலைகளும், சந்திரன் போல வடிவத்தில் மஞ்சள் பூவுமாக நிலம் மூடி ஓடி வளர்ந்திருக்கும் பூசணிச் செடி கள் எங்கள் தாயக மண்ணில் பொலித்து பருத்த பூசணி களே காய்க்கும். இவ்வாறாக பெரிய பூசணிகளை வேறு எங்கு தான் காண முடியும். பீற்ரூட், கரணை என்று நிலக் கீழ் கிழங்குச் செடிகளுக்கும் தோட்டங்களில் இடமிருக் கும். அவையும் மிகப் பெரிய செழிப்பாக வளர்ச்சியைப் பெற்ற கிழக்குகளாக விளையும். பயிற்றங்காய், அவரைக் காய் என்று கொடி வகைகளுக்கு கதியால்கள், வரிச்சுகள், முறுக்கிக் கொடி விட்டு பற்றை வேலியாக பச்சையை மூடி ஆங்காங்கே தோட்டங்கள் தோறும் இருக்கும்.

**ஒன்றன்பின் ஒன்றாக எவ்வளவு தொல்லைகளை இந்த விவசாயி தாங்குகின்றான். விளைச்சல் கண்ட தாயக பூமியின் விவசாயிகளை பெருமிதம் கொள்ள வேண்டியதொன்று தான்.**

புகையிலை, நிலக்கடலை, வற்றாளை என்று இன்ன பிறவும் வடகிழக்கின் விவசாய நிலங்களை அலங்கரித்து வளம் பெருக்கும் பல நூறு செடி, கொடிகளுக்குள் அடங் கும். கிழங்கினங்கள் என இவை அனைத்தும் பங்குனி மாதம் பக்குவம் காணும். பாலைவனப் பூமியான யாழ்ப் பாண நகரை பற்றை அகற்றி மண்மூடிக்கிடக்கின்ற கற் களை அகற்றி, செம்மண்ணுக்கு உரம் ஊட்ட பச்சை செடி கொடிகள் என்று, மண்ணுக்குள் தாட்டு, மாட்டுப் பட்டி, ஆட்டுப் பட்டி என்று வெற்று நிலப் பரப்பை மாறி மாறி அடைத்து வைத்து, அவற்றின் சாணம் மண்ணுள் உரமாகச் சேர்ந்து ஒவ்வொரு தோட்டக்காரனும் சிந்தும் வேர்வை அளவிட முடியாதவை தான்.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

நாற்று நட்டு, நீர் வார்த்து, பாத்தி கட்டி, நீர் இறைத்து மரக்கறிச் செடிகளை வளர்த்தெடுப்பதில் எத்தனை பிரயத் தனம். மின்சாரம் வரு முன் துலா இறைப்புத் தான். இங்கு, இன்றும், வேலைகள் கணுக்குக்குள் இருந்து சின்னி விரல்போல பட்டை கோலி கிணற்று மிதியிலிருந்து ஒருவர் நீர் மொள்ள இருவர் துலா மிதித்து அந்தப் பாரம் நிறைந்த பட்டையை மேல் வர உதவ வாய்க்காய் வழி தண்ணீரை இன்னொருவர் பாய்ச்ச கணக்காக பாத்தி தோறும் நீரை கட்ட இவ்வாறான மனித உழைப்புகள் தான் விளைச்சலாக பெருகியது. யாழ்ப்பாணத்துக்கும், ஏனைய மட்டக்களப்பு, வவுனியா போன்ற பிரதேசங்களுக்கும் வளங்களை தந்தது. உழைப்பு, உழைப்பு, ஓயாத உழைப்பு நீர் இறைக்கும் இயந்திரம் வந்த பின்பும் இயந்திரத்தை ஓட வைக்க பெட்ரோல், தொடர்ந்து ஓட்ட மண்ணெண்ணெய். எங்கள் தாயக மண்ணை பச்சைப்பசேல் ஆக்கியது எங்கள் விவசாயிகளின் கைகள் தான். களைக்காத கமக் காரரின் உழைப்பும் இவற்றில் அடங்கும். இத்தனை அலச் சல்களின் பின் விளைச்சல்களை சந்தைக்கு கொண்டு போனால் அங்கே தரகர்களின் தொல்லை. கொள்ளை இலாபம் அடிக்கும் முதலாளிகளிடம் கையளிக்க வேண்டிய நிலை. விளைச்சல் கூடி சந்தைக்கு வந்தால் செலவீனத்தை கூட ஈடுகட்ட முடியாத நிலை. காய்கறி, கிழங்கு விளைச்சல்களை கூடிய காலம் சேமித்து வைக்க முடியாத நிலை. ஒன்றன்பின் ஒன்றாக எவ்வளவு தொல் லைகளை இந்த விவசாயி தாங்குகின்றான். விளைச்சல் கண்ட தாயக பூமியின் விவசாயிகளை பெருமிதம் கொள்ள வேண்டியதொன்று தான்.

# கோர்த்து விடும் செய்திகள்

### ■ இல்லையென்பார் உண்டென்பார்.

‘அதிகரித்து வரும் நாடு கடந்த தீவிரவாத அச்சுறுத்தல் மற்றும் அதன் சூழ்நிலைகளும், பூகோள அச்சுறுத்தலை முறியடிப்பதற்கான வழிகளும்’ என்ற தலைப்பில் தீவிரவாதம் தொடர்பான மாநாடு ஒன்று இந்தியாவின் ஜோத்பூர் நகரில் நடக்கின்றது. அதில் விடுதலைப்புலிகள் பற்றியும் ஆராயப்பட விருக்கின்றது. இதைப்பற்றிக் கேள்விப்பட்டதும் ஒரு பழைய பாடல் வரிகள் நினைவிற்கு வந்தது. இல்லை இல்லை என்றவனும் எதனை இல்லை என்றான்.. இல்லை ஒரு சக்தி எனச் சொல்லவில்லை என்றான்.

### ■ நான் ஒரு முட்டாளுங்க

தமிழ் அரசியல் தலைவர்கள் முட்டாள்கள் என தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் நியூ யோர்க் ரைம்ஸ் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார். பேட்டி காணும் போது அவங்கள் ஒலி வாங்கிக்குப் பதிலாக கண்ணாடியைப் பிடிச்சுக் கொண்டு நிண்டுருக்கிறாங்கள் போல். அதே கட்டுரையில் வெடி தியனவா ரணிலின் பேட்டியும் உள்ளடக்கப் பட்டிருக்கின்றது. அதில் ரணில் தமிழர்களுக்குச் சாதகமான நடவடிக்கை களைச் செய்வதற்கு படைத்துறையினர் தடையாக உள்ளனர் எனத் தெரி வித்துள்ளார். இது தேர்தலுக்கும் முன்னர் தெரியாதா ?

இவ்வளவு காலமும் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் மாறி மாறி ஒருவர் செய்தால் மற்றவர் முட்டுக்கட்டை என்றனர். இனி இதில் படையினரும் இணைக் கப்பட்டுள்ளனர். சரவணபவன் சொன்னது சரிதான். அது மட்டுமல்ல தமிழர்கள் வாய் திறந்தால் மீண்டும் மஹிந்த வந்துவிடுவார் என ஒரு புதுப் பூச்சாண்டியும் காட்டத் தொடங்கியிருக்கினம்.

### ■ 100 நாட்களில் வெட்டிப் புடுங்கிறன் எண்டவை

100 நாட்களில் இந்தியர்களின் கறுப்புப் பணத்தையெல்லாம் இந்தியா விற்குள் கொண்டு வந்து சேர்ப்பேன் என்றவரும் 100 நாட்களில் என்ன என்னவோ எல்லாம் செய்யப் போறன் எண்டவரும் சந்திச்சு எல்லாத்துக்கும் பொறுமையாய் இருக்க வேண்டும் எண்டு சொல்லினம். நம்பி ஏமாந்த சனம் இனிப் பொறுத்திருந்து ஏமாறட்டும். 100 நாட்களுக்குள் சரத் பொன்சேக்கா விற்கு மட்டும் செய்ய வேண்டியது எல்லாம் செஞ்சிட்டினம்.

### ■ முட்டாள்களின் கண்ணீர்கள்

அன்று முள்ளிவாய்க்காலில் நடந்ததைப்பற்றிக் கவலைப்படாத சிலர் இன்று சிட்னியில் நடந்ததையிட்டுக் கண்ணீர் வடிக்கின்றனர். இனி மலிங்கவை காண ஏலாதாம். சங்ககாரவைச் சந்திக்க ஏலாதாம்....

### ■ கம்பனி இரகசியத்தை வெளியில சொல்லப்படாது

மஹிந்தரைச் சந்திச்ச தாடி மோடி இந்திய உளவுத் துறையான ரோதான் தன்னை விழுத்தினது என்று மஹிந்தர் சொன்னதைக் கடுமையாக கண்டித் தாராம் எனச் செய்திகள் வெளிவந்துள்ளன. இதைப் பார்க்க வடிவேலு சொல் லிய கம்பனி இரகசியத்தை வெளியில சொல்லப்படாது என்ற வாசகம் நினைவிற்கு வருகின்றதா?

### ■ மோடியும் சுயநிர்ணய உரிமையும்

இலங்கைத் தமிழர்கள் சுயநிர்ணய உரிமை பெற மோடி ஆவன செய்ய வேண்டும் என வணக்கத்துக்குரிய மன்னார் ஆயர் வேண்டுகோள் விடுத் துள்ளார். எல்லாம் தெரிந்த ஆயருக்கு தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை சிங்களம் கொடுத்தாலும் இந்தியா விடாது என்பது ஏன் தெரியாமல் போனது. இந்தியாவில் உள்ள அதிகாரப்பரவலாக்கத்திலும் பார்க்க அதிக அளவு இலங்கையில் செய்யக் கூடாது என்பதுதான் இந்தியா அடிக்கடி இரகசியமா கவும் சில சமயம் பகிரங்கமாகவும் சொல்வது.

### ■ அம்மனைச் சரண் அடைந்தால் அதிக திட்டு வாங்கலாம்.

இலண்டனில் உள்ள ஆலயம் ஒன்றில் நடந்த தேர்தலில் பக்தர்கள் மேல் வள்ளென்று பாயும் ஒருவரும் வெற்றி பெற்றுள்ளாராம். இனி அம்மனைச் சரண டைந்தால் அதிக திட்டு வாங்கலாம்.

- *ஊருளவாளி*

Door To Door
2 x Tea Carton for £ 19.50
GLEN CARRIERS
Most Trusted and Reliable Name in the Trade Since 1985
GlenCarriers
Laksiri Seva
(Glen Carriers Forwarding Limited)
• இலங்கை உட்பட அனைத்து நாடுகளுக்கும் கப்பல் அல்லது விமான மார்க்கமாகவும் பொதிகள் குறைந்த விலையில், பாதுகாப்பாகவும், நம்பிக்கையாகவும் அனுப்பப்பட்டு, உரிய நேரத்தில் கையளிக்கப்படும்.
• 30 வருட கால அனுபவமும் திறனும் மிக்க உலகளாவிய சேவைக்கு பெயர் பெற்றது எங்கள் நிறுவனம்
இலங்கையில் எப்பாகத்திலும் நேரடி விநியோகம் செய்யப்படும்
Collection from £ 10 within London
Collection from your door point in any part of UK or Europe
Colombo Warehouse | Laksiri Seva Pvt Ltd. 66, New Nuge Road, Peliyagoda, Colombo Telephone: + 94 1129 177 29-31
Eastern Province Warehouse | Laksiri Seva Pvt Ltd. 26, Hmyl Lane, Main Street, Addapallam, Ninthavur. 0672 0510 50-51
Tel : 020 8743 7353 || 14 Allied Way, Off Warple Way, Acton, London W3 0RQ
Web : www.glencarriers.com
Email : info@glencarriers.com



திரை விமர்சனம்

# இவனுக்கு தண்ணில கண்டம்

வி.வி.ஆர். சினி மாஸ்க் நிறுவனம் என்ற புதிய நிறுவனத்தின் மூலம் வி.வெங்கட் ராஜ் இந்தப் படத்தைத் தயாரித்திருக்கிறார். இந்தப் படத்தில் பல டிவி சேனல்களில் பல நிகழ்ச்சிகளில் தொகுப்பாளராகவும் பணியாற்றிய தீபக் ஹீரோவாக நடித்திருக்கிறார். நேகா ரத்னாகர் என்னும் மலையாள ஹீரோயினை அறிமுகப் படுத்தியிருக்கிறார்.

இவர்களோடு 'நான் கடவுள்' ராஜேந்திரன், குமாரவேல், சென்ட்ராயன், மனோபாலா, எம்.எஸ்.பாஸ்கர், லொள்ளு சபா சுவாமிநாதன், பாண்டியராஜன் ஆகியோரும் இதில் நடித்திருக்கிறார்கள். ஏ-7 band என்ற பெயரில் மூன்று இளைஞர்கள் சேர்ந்து இசையமைத்திருக்கிறார்கள். கானா பாலா, யுகபாரதி மற்றும் கண்ணன் பாடல்களை எழுதியுள்ளனர். சின்னத்திரையில் பல நகைச்சுவைத் தொடர்களை இயக்கிய அனுபவம் வாய்ந்த எஸ்.என். சக்திவேல் இப்படத்தை இயக்கியிருக்கிறார்.

நகைச்சுவை படங்களின் வெற்றிக்கு முதல் காரணம் இயக்குநர்தான் என்பதற்கு இந்தப் படமும் ஒரு உதாரணம்..! மதுவின் தீமையை உணர்த்த மதுவை வைத்துத்தான் திரைக்கதை அமைக்க வேண்டியிருக்கிறது. ஒரு நாள் இரவில் மதுவை நாடியதன் விளைவாக ஹீரோவும், அவனது நண்பர்களும் படும்பாட்டை மிக இயல்பாக, நகைச்சுவை கலந்து சொல்லியிருக்கிறார்.

ஹீரோ தீபக் தூத்துக்குடியில் தொலைக்காட்சி ஒன்றில் தொகுப்பாளராகப் பணியாற்றி வருகிறார். "உள்ளூரிலே குப்பை கொட்டினால் எப்படி..? என்று சென்னைக்கு படையெடுக்கிறார் தீபக். சென்னையில் 'பிங்க்' என்ற சனலில் வேலை கிடைக்கிறது. 'சொல்வதெல்லாம் உண்மை' போன்ற புதிய நிகழ்ச்சியில் தொகுப்பாளராக வேலை செய்யும் ஆர்வத்துடன் இருக்கும் தீபக்கிற்கு சேனலின் எம்.டி.க்கு சொந்தக்காரன் என்ற பெயரில் வரும் ஒருவனால் வேலை போகிறது. அவன் அந்த நிகழ்ச்சிக்கான தொகுப்பாளர் வேலையைக் கைப்பற்றிக் கொள்ள தீபக்கிற்கு வேறு ஒரு நிகழ்ச்சி கிடைக்கிறது.

வேறு வழியில்லாமல் நள்ளிரவில் கேள்விகளுக்கு பதிலளிக்கும் 'வெட்கப்படாமல் கேளுங்கள்' என்ற நிகழ்ச்சியில் கேள்விகளைத் தொகுத்து வழங்குகிறார் தீபக். இதனால் பல அவமானத்தைச்சந்திக்கிறார்.

இந்த நேரத்தில் அவரது அம்மா 100 கோடி ரூபாய் சொத்துக்களோடு ஒரு பெண்ணை திருமணத்திற்காக தீபக்கிற்கு பார்த்திருப்பதாகவும் கல்யாணத்தை உடனேயே வைத்துக் கொள்ளலாம் என்கிறார். நண்பர்களின் ஆலோசனைப்படி கல்யாணத்தை முடித்துவிட்டு பெண் வீட்டாரின் காசில் புதிய டிவி சனலை தொடங்கலாம் என்கிற திட்டத்துக்கு வருகிறார் தீபக். கல்யாணச் செலவுக்காக அநியாய வட்டி வசூலிக்கும் சூடு பாஸ்கரிடம் 5 லட்சம் ரூபாய் கடன் வாங்கிவிட்டு கல்யாணத்திற்காக ஊருக்குச் செல்கிறார்.

ஆனால், கல்யாணத்திற்கு முதல் நாள் மணப்பெண் தன் வீட்டு கார் டிரைவரோடு ஓடிப் போய்விட கல்யாணம் நின்று போய் மேலும் அவமானமாகிறது தீபக்கிற்கு. கெட்ட விஷயத்திலும் ஒரு நல்ல விஷயம் நடக்குமென்பார்களே.. அது போல ஊரில் இருந்து சென்னை திரும்பும் தீபக்கின் பயணத்தில் அவனைச் சந்திக்கிறாள் நாயகி நேஹா. அவளுடன் நட்பை வளர்த்துக் கொண்டே வந்ததில் அது ஒரு கட்டத்தில் காதலாகிறது.

அவளுடைய சிபாரிசில் வேறொரு சனலின் எம்.டியை சந்திக்க ஆயத்தமாகிறான் தீபக். இந்த நேரத்தில் நாயகியையும், எம்.டி.யையும் ஒரு ஹோட்டல் வாசலில் யதார்த்தமாக பார்த்து அவளைப் பற்றி தவறாக நினைத்துக் கொள்கிறான் தீபக்.

இப்போது சூடு பாஸ்கர் வீடு தேடி வந்து வட்டி கேட்டு அசிங்கப்படுத்திவிட்டுப் போகிறான். காதலியும் தன்னிடம் பொய் சொல்கிறாள்.. தன்னுடைய நிகழ்ச்சியினாலும் மானம், மரியாதை போகிறதே என்றெண்ணி எல்லாத்தையும் மறக்க டாஸ்மாக்கிற்குள் செல்கிறார்கள் ஹீரோவும், அவனது நண்பர்களும்.

அங்கே நடக்கும் சில கசமுசாக்களுக்கு பின்பு காலையில் போலீஸ் ஸ்டேஷனில் கண் விழிக்கும் தீபக்கிற்கு அவனது நிகழ்ச்சிக்கு இருக்கும் பெயரினால் விடுதலை கிடைக்கிறது. ஆனால் அடுத்தடுத்து சூடு பாஸ்கரும், அலுவலகத்தில் டார்ச்சர் செய்த சக தொகுப்பாளரும் இறந்து போக ஆச்சரியமாகிறது. அதே சமயம் தீபக்கை போனில் அழைக்கும் ஒரு குரல்.. "என்னப்பா.. இப்போ சந்தோஷமா.. நீ சொன்ன மாதிரியே ஒவ்வொருத்தரையா போட்டுட்டேன்ல்ல.." என்று சொல்ல தீபக்கிற்குக் குழப்பம் கூடுகிறது..

அந்தக் கொலைகளுக்கும் தனக்கும் என்ன தொடர்பு என்று ஹீரோவுக்குத் தெரியவில்லை. அதைத் தெரிந்து கொள்ள தேடுகிறார்.. கண்டுபிடித்தாரா இல்லையா என்பதுதான் மிச்சம் மீதிக் கதை.

தீபக் நன்றாகவே நடித்திருக்கிறார். ஒரு மாஸ் ஹீரோவுக்கான தோற்றமும், பொலிவும் இல்லையென்றாலும் இந்தக் கேரக்டருக்கு பொருத்தமான ஹீரோவாக இருக்கிறார். ஹீரோயினிடம் அவ்வப்போது வாங்கிக் கட்டிக் கொண்டு சொன்ன நேரத்திற்குப் போக முடியாமல் தவிக்கும் இவர் படும்பாடு சிரிப்போடு கொஞ்சம் அனுதாபத்தையும் சேர்த்தே தருகிறது.

'ரொம்ப நல்லவன்டா நீ' திரைப்படத்தின் கதையின் பேஸ்மெண்ட்டும் இந்தப் படத்தின் பேஸ்மெண்ட்டும் ஒன்றுபோலவேதான் இருக்கிறது என்பதையும் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும்.

படத்தின் இடைவேளைக்கு பின்பு 'நான் கடவுள்' ராஜேந்திரன் ராஜ்ஜியம் தான். கடைசி அரைமணி நேரம் கொஞ்சம் பார்க்கலாம். வெல்டன் ராஜேந்திரன்..! சிறந்த பொழுதுபோக்கு படம்..!

*நிமலன் (சாரல் வலைப்பதிவு)*

# சினித்துளி

## நட்டஈடு இல்லை !



விஜய்யின் 'புலி' படம் ஜூலை மாதம் திரைக்கு வருவதாக கூறப்படுகிறது. இந்நிலையில் விஜய் சமீபத்தில் சில விநியோகஸ்தர்களுக்கு தன் வீட்டில் விருந்து வைத்துள்ளார். இதில் அவர்களிடம் படத்தில் வெற்றி, தோல்வி இருப்பது சாதாரணம் தான், ஒரு வேளை நஷ்டமடைந்தால் நஷ்ட ஈடு கேட்க கூடாது என்று கையெழுத்து வாங்கியுள்ளார். படமே, ரிலிஸாக வில்லை ஏன் இந்த முன் எச்சரிக்கை என்றால், எல்லாம் லிங்கா படத்திற்கு நடந்த விஷயங்களை பார்த்து தானாம்.

விருந்துக்கு வந்த இடத்தில் இப்படியாச்சே.." ஆனால், ரஜினி படமே தோல்வியடைந்த நிலையில் தளபதியின் படம் எந்த மூலைக்கு..." என்று முணுமுணுத்தபடி கையழுத்து போட்டுவிட்டு போயிருக்கிறார்கள் தயாரிப்பாளர்கள்..

## விக்ரமின் மர்ம மனிதன் !



`விஜய் மில்டன் இயக்கத்தில், விக்ரம் சமந்தா ஜோடியாக நடித்து வரும் பத்து எண்றதுக்குள்ள படத்தின் படப்பிடிப்பு ஏறக்குறைய இறுதிகட்டத்தை எட்டியுள்ளது. பத்து எண்றதுக்குள்ள படத்தின் படப்பிடிப்பு முடிந்ததும் அப்படம் வெளியாகும் முன்பே அடுத்தப் படத்தில் நடிக்க ஆயத்தமாகிவிட்டார் விக்ரம். விக்ரம் பிரபு, பிரியா ஆனந்த் நடித்த அரிமா நம்பி படத்தை இயக்கிய ஆனந்த் சங்கர் இப்படத்தை இயக்குகிறார். இப்படத்திற்கு மர்ம மனிதன் என்று பெயரிடப்பட்டுள்ளது.

மர்ம மனிதன் படத்தில் விக்ரம் இரண்டு வேடங்களில் நடிக்கிறார். ஏப்ரல் இறுதியில் இப்படத்தின் படப்பிடிப்பு துவங்கவிருக்கிறது.

## தனுசை முந்திய சிவகார்த்திகேயன்



தமிழ் சினிமாவில் இன்று சிவகார்த்திகேயன் என்று ஒரு நடிகர் இருக்கிறார் என்றால் அதற்கு முக்கிய காரணம் தனுஷ் தான். ஆனால், அவரே இன்று தனுஷின் மார்க்கெட்டை பிடிக்கும் அளவிற்கு வளர்ந்து விட்டார். கடந்த மாதம் தனுஷ் நடிப்பில் வெளிவந்த அனேகன் 5 வார முடிவில் அனேகன் சென்னை சிட்டியில் ரூ 4.30 கோடி வசூல் செய்துள்ளது.ஆனால், காக்கி சட்டை வெளிவந்த 3 வாரத்தில் ரூ 4.02 கோடி வசூல் செய்திருக்கிறது

தொடர்ந்தும் காக்கிச்சட்டை திரையிடப்படுவதால் கிட்டத்தட்ட வசூலில் தனுஷை விரைவில் முந்திவிடுவார் சிவகார்த்திகேயன்..

## அடுத்த படத்துக்கு சிக்கல் !



லேட்டஸ்ட் ரிலீசான ஐ படம் சுமார் 100 கோடி ரூபாயை முழுங்கி இயக்குனர் சங்கரின் பிரம்மாண்ட லிஸ்ட்டில் சேர்ந்து விட்டாலும் கலெக்ஷனும் எதிர்பார்த்த அளவுக்கு வரவில்லை என்பது தான் சோகம். படத்துக்கு ஓரளவுக்கு கூட்டம் இருந்தும் கூட எதிர்பார்த்த வசூல் இல்லை. இதற்கிடையே 'ஐ' ரிலீசாகி 50 நாட்களை தாண்டி விட்ட நிலையில் ஷங்கரின் அடுத்த படம் என்ன என்பதற்கான பதில் இதுவரை ஜீரோவாகத்தான் இருக்கிறது.

எவ்வளவோ தேடியும் இங்கே எந்த நிறுவனமும் வர யோசிப்பதால் மும்பையிலிருந்து ஏதேனும் ஒரு பெரிய கம்பெனியை இழுத்து வரவிருக்கிறாராம்

MARSANS
SOLICITORS & ADVOCATES

"New Law Firm in the heart of London"

Areas of law:

- Immigration
- Civil/Commercial Litigation
- Business Crime /VAT
- Commercial & Residential Property
- India Desk

Tamil Speaking Barrister and Solicitors

Contact Marsans, Solicitors and Advocates for expert legal advice and assistance.

Languages: Tamil, Hindi, Telugu, Malayalam

Marasans have dual qualified lawyers with specialist knowledge to assist on India / UK related issues such as;

- Recovery of family properties
- Matrimonial /custodial disputes
- Immigration - Tier 4 and Tier 5 sponsor license
- Asset tracing
- Sponsor licences



FIRST FLOOR, 277-281 OXFORD STREET, LONDON, W1C 2DL DX 138882 MAYFAIR Mail : email@marsans.co.uk Web : www.marsans.co.uk

PHONE: 020 7499 0620 | MOB: 07837 450 397 | FAX: 020 7499 7109 | EMERGENCY: 020 7408 5080

# JPN

Shipper | Movers | Transporters

Shipping: World Wide Door to Door
Air Cargo: Faster and Promised Delivery
Removal Services: Rate Lower - Job Higher


குறைந்த செலவில்
விமான மற்றும் கடல்-தரை
மார்க்கமான பொதி சேவை
பாதுகாப்பு - விரைவு - நம்பிக்கை

யாழ், வன்னி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருமலை, அம்பாறைக்கு விரைவான மலிவான சேவை !

**உலகெங்கும் கடல், வான் மார்க்கமாக பொருட்களை அனுப்ப நம்பிக்கையான ஒரே நிறுவனம்**

- *Shipping & Airfreight*
- *Worldwide Destination*
- *Import & Export*
- *Packing & Crating*
- *Collection & Delivery*
- *All Sizes & Weights*
- *Immediate Insurance Cover*
- *Complete Documentation Service*

*Now we are Operating the Coaches Europe Wide!*




Machinaries & Commercial Cargo Clearances and Door Deliveries to any Corner of Srilanka @ Best Rates

குறைந்த விலையில் இலங்கைக்கு பொதிகளை மட்டுமல்லாமல் இலத்திரனியல் பொருட்களையும் பாதுகாப்பான முறையில் அனுப்பிக் கொள்ளலாம். உங்கள் பொருட்களை உங்கள் வீட்டிற்கே வந்து பெற்று அனுப்பும் சேவையும் உள்ளது.

**Passenger Vehicles Available from 9 to 60 Seater Coaches**

**JPN Shipping Ltd.**
**Unit-A2c, Redlands, Coulsdon,**
**CR5 2HT, Surrey.**

Web: www.jpnshippingltd.co.uk
Email: info@jpnshippingltd.co.uk
info@permainternational.co.uk

Call us .........
Tel: **020 8668 0252**
Mob: **079 3119 7571**



MERLYN | KUDOS | hansgrohe | Hudson Reed

# JSN HEAT SUPPLIES LTD

KUDOS | GROHE | GRUNDFOS

**WIDE RANGE OF BATHROOMS, SHOWERS & KITCHENS**

| Product | Price |
|---|---|
| GROHE EUROSMART BASIN MIXER SMOOTH BODY | £45.24 inc. VAT |
| GROHE EUROSMART BASIN MIXER POP UP WASTE | £56.00 inc. VAT |
| GROHE EUROSMART BASIN MIXER + BATH SHOWER MIXER PACK | £233.20 inc. VAT |
| GROHE COSMO SHOWER BUNDLE | £432 inc. VAT |
| SINGLE LEVER BASIN MIXER – LIMITED OFFER | £14.99 inc. VAT |
| SINGLE LEVER BATH/SHOWER – LIMITED OFFER | £32.00 inc. VAT |
| SPECIAL OFFER Thermostatic 2 way outlet – LIMITED OFFER | £169 inc. VAT / £149 inc. VAT |
| GROHE G1000 COSMO BSM WITH NEW TEMPESTA | £201.00 inc. VAT |
| GROHE EUPHORIA SYSTEM 180 SHOWER SYSTEM | £298.00 inc. VAT |
| COMPACT FURNITURE PACK 550x300mm basin unit, 500 x 300mm WC unit, Siamp Tru-Flow concealed Cistern, Rak compact pan & standard seat. | £249 inc. VAT |
| 1200mm 6MM SAFETY GLASS CLEAR SEALED LIFETIME GUARANTEE SLIDING DOOR | £189 inc. VAT |
| LED LAMP BULB WITH FITTING FIRE-RATE DOWN LIGHT | Starts from £14 inc. VAT |

KITCHEN AND BATHROOM FREE DESIGN AND QUOTATION. FITTING SERVICE AVAILABLE.

ALL KINDS OF BOILER CONTROLS AND PARTS AVAILABLE AT SPECIAL PRICES

Vaillant | Roca | MAIN | Armitage Shanks | Glow-worm | Ideal Standard | AQUALISA | AQUALUX | mira | ARISTON | KESTON | saneux

• BATHROOMS • SHOWERS • GRANITE TILES • MARBLE TILES • PORCELAIN TILES ALL AT DISCOUNT PRICES

**162 PINNER ROAD, HARROW HA1 4JJ TEL: 020 8427 0553**

# Southall Travel

## *Redefining Travel*

### *Why travel with*
### Southall Travel?

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

### ஏன்
### சவுத்ஹோல் டிராவல்
### மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

5553 ATOL PROTECTED